...gistered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+IV=16 விலை: ரூபா 7.00

# தமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

...ர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 12 (01.07.2004) வியாழக்கிழமை இதழ்:272

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

INTERNET

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளி நாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி

T.P -021-222-7310

(சி-1844)

# அரசாங்கம் மீதான அதிருப்தியினை நோர்வேயிடம் புலிகள் தெரிவிப்பு!

(கிளிநொச்சி)

**விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவைப் பயன்படுத்தி கிழக்கில் யுத்தநிறுத்த சூழலையும் சுமுகநிலையையும் குழப்பி, சமாதான முயற்சிகளுக்கு அரசாங்கம் நெருக்கடிகளை ஏற்படுத்திவருகிறது–**

**இந்த நிலையை முடிவு கட்டுவ'தற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதன் மூலமே நிலைமையை சுமுகமாக்க முடியும் –**

**இந்த மாற்றங்களின் அடிப்படையில்தா[ன்] சமாதான முயற்சிகள் தங்கியிருப்பதாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

**நோர்வே தூதுக் குழுவினரைச் சந்தித்துப் பேசிய பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் மேலும் கூறியதாவது –**

இன்றுள்ள நிலைமைகள் தொடர்பாக நாம் தெளிவாக அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேத் தரப்பினருக்கு எடுத்துக்கூறியுள்ளோம்.

தற்போது மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சம்பவங்கள் - முக்கியமாக கருணாவுக்கு படைத்தரப்பினர் அடைக்கலம் கொடுத்து, கருணாவை வைத்து அவர்கள் பல குழப்பங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்ற நிலைகளை நாம் தெளிவாகச் சொல்லியுள்ளோம்.

ஜனாதிபதியும், அரசாங்கமும் சமாதான முயற்சியை முன்னெடுப்பதில் ஆர்வமாக இருந்தால் கருணாவை வைத்துக்கொண்டு சமாதான முன்னெடுப்புக்களுக்கும், யுத்த நிறுத்த சூழலுக்கும் குந்தகம் விளைவிக்கும் காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ...டைக்கால நிர்வாகம் குறித்து ...ளும் கட்சி எம்.பிக்களுடன் ...னாதிபதி ஆலோசிப்பாராம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள ...டைக்கால நிர்வாக ஆலோசனைகள் ...தாடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன் ...ணி அரசில் அங்கம்வகிக்கும் அனைத்து ...டாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியப் ...டுத்த ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள் ...ளார்.

இடைக்கால நிர்வாக ஆலோசனைகள் ...றித்து ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பி ...ர்களிடையே நிலவும் கருத்து முரண் ...டுகள் மற்றும் அவர்களால் முன்வைக்கப் ...ட்ட கருத்துக்கள், ஆலோசனைகள் குறித்த ...ண்மையான நிலைப்பாட்டைத் தெரிந்து ...காள்வதற்கும், அரசின் நிலைப்பாடு ...தாடர்பாக அவர்களிடமிருந்து அறிந்து ...காள்வதற்காகவும் இந்தக் கலந்துரை ...டல் ஒழுங்குபடுத்தவுள்ளதாக ஜனா ...பதியின் பேச்சாளர் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமருடன் நேற்று சொல்ஹெய்ம் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து சொல்ஹெய்ம், பிரதமருக்கு விளக்கமளித்ததாக பிரதமரின் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இன்று எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது சமாதான முயற்சியை முன்னெடுப்பதில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்த கருத்துக்களை ஜனாதிபதிக்கு சொல்ஹெய்ம் விளக்குவாரென நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமையும் எரிக் சொல்ஹெய்ம் சந்திப்பார் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கருணாவுக்கு உதவவில்லை; புலிகளுக்கு ரணில் கடிதம்!

(கொழும்பு)



கருணாவைப் பாதுகாப்பாக கொழும்புக்கு கூட்டிவந்த விடயத்தில் தமக்கு எந்தத் தொடர்பும் கிடையாதென்று எதிர்கட்சித் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துக்கு - நோர்வே அரசாங்கம் ஊடாக அனுப்பி வைத்திருக்கும் உத்தியோகபூர்வ கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவளித்து - பாதுகாத்து வருவதாக வெளியான செய்திகளையடுத்தே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அலிசாகிர் மௌலானா - கருணாவுடன் தனிப்பட்ட தொடர்புகளை - கட்சிக்குத் தெரியாமலே வைத்திருந்தார் என்றும் - தனக்கோ' அல்லது ...க்கிய தேசிக் கட்சிக்கோ கருணாவுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அவர் ...து கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## ...அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் ...மாதான முயற்சியில் இணைக்க ...தாடர்ந்து முயற்சிக்கின்றோம்!

### ...சேட தூதர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)



...விடுதலைப் புலிகளையும் அரசாங் ...தையும் சமாதான முயற்சிகளில் ...டும் இணைப்பதற்கான முயற்சி ...ில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக ...ார்வேயின் விசேட தூதுவர் எரிக் ...ால்ஹெய்ம் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சி சென்று ...டுதலைப் புலிகளின் அரசியற் ...றைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச் ...சல்வனைச் சந்தித்த பின்னர், ...டகவியலாளர்களுக்கு கருத் ...த் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது- சமாதான முயற்சிகள் கடினமானவை. அரசையும் விடுதலைப் புலிகளையும் மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுத்த - முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்தி வருகின்றோம்.

கருணா விவகாரத்தால் கிழக்கில் தோன்றியுள்ள சூழ்நிலை, சமாதான முயற்சிகளை மீள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் குறித்து தமிழ்ச்செல்வனுடன் நேற்று எரிக் சொல்ஹெய்ம் பேச்சு!



(கிளிநொச்சி)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீளவும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

நேற்றுக்காலை விமானப்படையின் ஹெலி மூலமாக கிளிநொச்சிக்குவந்த எரிக் சொல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய இராணுவத் தளபதி இன்று பதவியேற்கிறார்!

(கொழும்பு)



இராணுவத் தளபதி பதவியிலிருந்து லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல நேற்று ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து - இலங்கையின் 17 ஆவது இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட இன்று பதவியேற்கவுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் புதிய இராணுவத் தளபதியாக இன்றுகாலை தனது கடமையைப் பொறுப்பேற்றுக்கொள்ளவிருக்கும் சாந்த கொட்டேகொட லெப்.ஜெனரலாகவும் ஜனாதிபதி சந்திரிகாவால் இன்று பதவி உயர்த்தப்படவுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

Your friend in the skies...

# பொருளாதார வளர்ச்சி வீதம் 6.2 ஆக அதிகரிக்குமாம்

## மத்திய வங்கி பிரதி ஆளுனர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் 6.2 வீத பொருளாதார வளர்ச்சி வேகத்தை இலங்கை அடையக் கூடியதாக உள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. 2002 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இடம்பெற்ற வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மத்திய வங்கி பிரதி ஆளுனர் இவ்வாறு தெரிவித்தார்.

மத்திய வங்கி பிரதி ஆளுநர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் - தற்போது நிலவும் பொருளாதார வளர்ச்சியானது நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதாரத்தில் உறுதி நிலையைத் தோற்றி இருக்கின்றது. சேவைத்துறை 9.5 வீதவளர்ச்சியை இந்தவருடம் முதலாவது கால் ஆண்டில் காண்பித்துள்ளது. வர்த்தகத்துறை 5.8 வீதத்தையும், அரசுத்துறை 22 வீத அதிகரிப்பையும் காண்பித்துள்ளது. நாட்டின் விவசாயத்துறை கால் ஆண்டில் வீழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. நெல் விளைச்சல் குறைவடைந்துள்ளமையே இதற்கான காரணம். விவசாயத்தறை 1.4 வீத வீழ்ச்சியை காட்டியது.

இலங்கையின் பொருளாதார நிலமை அடித்தளத்துடன் பலம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இதனால் நாட்டில் விலை மட்டத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்நிலமையினை நாம் தொடர்ந்தும் முன் கொண்டு செல்ல வேண்டும். இதற்கான பொருளாதாரக் கொள்கைகளும் நாட்டின் அமைதி நிலைமைகளும் முக்கியமானதாகும் என மேலும் தெரிவித்தது.

# காலாவதியான மருந்துப் பொருட்கள் சித்தன்கேணிப் பகுதியில் மீட்பு!

விடுதலைப்புலிகளின் நிதித்துறையின விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் நேற்று சித்தன்கேணிப் பகுதியில் மருந்தகங்கள் மீது மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது, சுமார் நான்காயிரம் ரூபா பெறுமதியான காலாவதியான மருந்துப் பொருட்களை கைப்பற்றியுள்ளனர்.

இந்த மருந்தகங்களில் அதிக இலாபத்தினை நோக்காகக் கொண்டு காலாவதியான பெருமளவு திரவ மருந்துகளினை சில்லறை விற்பனை விலைக்கு மருந்தக உரிமையாளர்கள் விற்பனை செய்ததும் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதியினரால் கண்டு பிடிக்கப்பட்டது.

இதேவேளை, மருந்துப் பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா வகைகள் என்பன பொறிக்கப்பட்ட விலைகளிலிருந்து கூடிய விலைகளில் விற்பனை செய்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பொருட்களுக்கு நிதித் துறையின் ஆயப்பகுதியினர் தீர்வை விலக்களித்துள்ள நிலையில் வர்த்தகர்கள் இவ்வாறு கூடிய விலையில் பொருட்களை விற்பனை செய்வதையிட்டு மக்களை விழிப்புடன் இருககுமாறும் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை, இப்பகுதியில் நேற்று கைப்பற்றப்பட்ட காலாவதியான பொருட்கள் வர்த்தகர்களின் அனுமதியுடன் அவ்விடத்திலேயே அழிக்கப்பட்டதாகவும் விலைக்கட்டுப்பாட்டு பகுதியினர் தெரிவித்தனர்.

# கஞ்சா வைத்திருந்தவருக்கு 18 ஆயுரம் ரூபா அபராதம்

## யாழ்.நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்.சுண்டிக்குழி பகுதியில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் நபர் ஒருவரிடம் இருந்து 120 கிராம் கஞ்சா போதைப் பொருள். கைப்பற்றப்பட்டுள்ளது.

சுண்டிக்குழியைச் சேர்ந்த இராசையா மன்மதன் என்ற நபரிடம் இருந்தே இந்த கஞ்சாப் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

சுண்டிக்குழிப் பகுதியில் நபர் ஒருவர் கஞ்சா வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின போது 120 கிராம் கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இவை 48 பொதிகளில் அடைக்கப்பட்டிருந்தது.

கஞ்சா வைத்திருந்த நபருக்கு எதிராக யாழ்.நீதிமன்றத்தில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த நபர் குற்றத்தினை ஒப்புக் கொண்டதை அடுத்து 18 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த வேண்டும் என்றும், செலுத்தத் தவறின் மூன்று மாத கடூழியச் சிறைத் தண்டனையை வழங்கு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அரையாண்டில் . மதுவரித் திணைக்கள அதிகாரிகள் 205 சட்டவிரோத மதுபானம் விற்றவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுததுள்ளனர்.

# வீதிகளில் குப்பை கொட்டுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதியோரங்களில் குப்பைகளைக கொட்டுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு யாழ்.மாநகர சபை தீர்மானித்துள்ளது.

சுடந்த மாதம் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்தரையாடலில் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் பெருமளவில் குப்பைகள், கழிவுப் பொருட்கள், உடைந்த கட்டடப் பொருட்கள் கொட்டப்படுவதாகவும் இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து குப்பைகளை அகற்றுவதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் கொட்டவேண்டும் என்றும் அதனைக் கண்காணிப்பதற்கெனக் குழுக்கள் அமைக்கப்பட்டது.

இந்த நடைமுறையை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துணைப்படைக்கு தெரிவானவர்களுக்கு அழைப்பு

தமிழீழ தேசியத் துணைப்படைக்கு ஆட்சேர்ப்பதற்காக 21 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதிவரை நடைபெற்ற நேர்முகத்தெரிவில் தெரிவுசெய்யப்பட்டவர்களை நாளை மறுதினம் காலை 8 மணி முதல் 5 மணிவரை கிளிநொச்சி யிலுள்ள தமிழீழக் காவலதுறையின் நடுவப்பணிமனைக்கு வருகைதருமாறு தமிழீழ காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

# கடலில் தவறி வீழ்ந்து முதியவர் பரிதாப மரணம்

நாரந்தனைப் பகுதியில் கடற்றொழிலுக்குச் சென்ற முதியவர் கடலில் தவறிவீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது. சம்பவத்தின் போது நாரந்தனையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை குமாரவேல் (வயது 70) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

மீன்பிடிக்கச் சென்ற சமயம் இவர் கடலில் வீழ்ந்து மரணமடைந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கடலில் மிதந்ததை அடுத்து உறவினர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# ஊழியர் வேலைநிறுத்தம் முடிவுற்றது

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் யாழ்.பல்கலைக்கழகப் பேரவையினால் தீர்த்துவைக்கப்பட்டுள்ளன என்றும்-

ஊழியர்கள் கடந்த 28 ஆம் திக்தி முதல் கடமைக்குத் திரும்பியுள்ளதாகவும் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் அறிவித்துள்ளார்.

# பேராசிரியர் துரைராஜா நினைவுப் பேருரை

முன்னாள் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அழகையா துரைராஜா ஞாபகார்த்த பேருரை எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும் இந்நிகழ்வில் 'பொறியியல் கல்வி' என்ற பொருளில் மொரட்டுவ பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.விஜேசேகர பேருரை நிகழ்த்துவார்.

# மோட்டார்சைக்கிள் விபத்தில் வட்டக்கச்சியில் இருவர் காயம்

வட்டக்கச்சியில் நேருக்கு நேரே வந்த இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் அதில் வந்த இருவரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவமானது வட்டக்கச்சி சில்வா வீதி சுகுணா கடைச் சந்தியில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் வட்டக்கச்சி மாயவனூர் கிராம சேவகரான ஜோன் ஜெகநாதன் (வயது 40) என்பவரும், யோ. ரமணன் (வயது 20) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

# ஆன்மீகச் சொற்பொழிவு

(வல்வெட்டித்துறை)

ஸ்ரீ வல்லிபுர மாயவரது தேவஸ்தான சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆசிரமத்தில் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடை பெற்று வரும் வாராந்த நிகழ்வில் எதிர் வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு 'கண்ணனின் லீலைகள்' என்ற பெயரில் பாலாம்பிகை கந்தசுவாமியின் ஆன்மீக சொற்பொழிவு இடம்பெறும்.

# கைதடி கயிற்றசிட்டி தேர்த்திருவிழா

கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசாமி கோவில் தேர்த்திருவிழா இன்றும் தீர்த்தோற்சவம் நாளையும் நடைபெறவுள்ளது. இன்று காலை 7 மணிக்கு வசந்தமண்டப பூசைகள் ஆரம்பமாகி காலை ஒன்பது மணிக்கு தேர் வீதி உலாவரும். ஆ..க்காவடிகள், அங்கப் பிரதிஸ்ட்டை, தீ மிதிப்பு என்பன இடம்பெற்று நண் பகல் அன்னதானமும் இடம்பெறும்

# கரும்புலிகள் நினைவாக சிரமதானப் பணிகள்

கரும்புலிகள் நினைவாக யாழ். நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் மாறனின் ஏற்பாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. யாழ்.நகர நடைபாதை வியாபாரிகள் இந்தச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

# செயலாளராகப் பதவியுயர்வு

யாழ்.மாநகரசபை நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் வல்வெட்டித் துறை நகரசபையின் செயலாளராகப் பதவியுயர்வு பெற்றுச் செல்கின்றார்.

இதுவரை காலமும் யாழ்.மாநகர சபையின் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய கேநாகேந்திரராஜா வல்வெட்டித்துறை நகர சபையின் செயலாளராக இன்று முதல் கடமையேற்கின்றார்.


தேரேறி வரும் நயினை அம்மனின் அருள் வேண்டி நிற்கின்றோம்

முச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் மற்றும் மோட்டார் உதிரிப் பாகங்களை பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

லக்ஷ்மி ஓட்டோஸ்



(சி-2726)

இல 270 - 272,
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி சந்தி,
யாழ்ப்பாணம்.



ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்பாள் தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துபவர்கள்

யாழ் நகரில்

விமாகி

கடந்த 25 வருட காலமாக தரமான இலங்கை, தாய்லாந்து, இந்தோனேசியா வோல்ரைல்ஸ், புளோரையில்ஸ் மற்றும் குளியலறைப் பொருட்கள் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிளேட் வகைகள், கப் சோசர், கிளாஸ் வகைகள், கிச்சன் றக் அயன் போட் மற்றும் அன்பளிப்புப் பொருட்களையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடவேண்டிய இடம்




கொழும்பில்
விமாகி
51, டாம் வீதி,
கொழும்பு - 12
T.P: 423030

யாழ் நகரில்
விமாகி
இல. 27/3 மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-222 6738



ராஜா யாழ்ப்பாணம்.

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ்
நடித்த
கில்லி



காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30 (பு.நே)
3 ஆம் திகதி முதல் பேரழகன்
(சி-2623)



திறைஞ்சனாஸ் சங்கானை

சரத்குமார், தேவயானி நடித்த
மகாபிரபு
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)
EHTREMITIEH (சி-2621)



நாகம்ஸ் சுன்னாகம்

மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
அநேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க
ரஜினி, சௌந்தர்யா, ரம்யா கிருஷ்ணன்
நடித்த
படையப்பா
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ரவி கருணாநாயக்கவின் பிணை மனு தீர்ப்பு செவ்வாயன்று வெளிவரும் !

முறைகேடான நிதி கையாள்கை தொடர்பிலான குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள தம்மை கைதுசெய்வதற்கு எதிராக முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தாக்கல் செய்த மனுவின் தீர்ப்பு - எதிர்வரும் செவ்வாயக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கொழும்பு - கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு மீதான விசாரணைக்கு அழைக்கப்பட்டவேளை, நீதிமன்றத்தில் திறந்த நிலையில் கருத்துரைத்த நீதிவான் சரத் கருணாரட்ண - ரவி கருணாநாயக்க கைதுசெய்யப்படும் விடயத்தில் சிரேஷ்ட அதிகாரி வெத்தசிங்க நடந்துகொண்ட விதம் நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

பொலிஸார் ரவி கருணாநாயக்கவை கைதுசெய்யும் விடயத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜி.எல்.பீரிஸ் மற்றும் ராஜித சேனாரட்ண ஆகியோர் நீதிவானின் அறைக்குச்சென்று, தம்மைச் சந்தித்தனரா? என பொலிஸ் அதிகாரியான வெத்த சிங்க நீதிமன்ற பொலிஸ் அதிகாரியிடம் வினவியுள்ளார்.

இது முழுமையாக நீதித்துறையைப் பாதிக்கும் செயற்பாடாகும் எனக் கூறிய நீதிவான் - சம்பவம் சம்பந்தமாக பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் விசாரணைகளை நடத்தவேண்டும் என உத்தரவிட்டார்.

இந்த நிலையில் மனுதாரரான ரவி கருணாநாயக்கவின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.என்.சொக்ஸி - அரசியலமைப்பின்படி தமது கட்சிக்காரருக்கு முன்பிணை வழங்கமுடியும் எனத் தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் சட்டமா அதிபரின் சார்பில் கருத்தை முன்வைத்த அரச சட்டத்தரணி வசந்த நவரட்ண பண்டார - மனுதாரர் கோரியுள்ள முன்பிணை உத்தரவை நீதிமன்றம் பிறப்பிக்கமுடியாது எனத் தெரிவித்தார்.

நாட்டில் சாதாரண பிரஜை கடைப்பிடிக்கப்படும் நீதி, ரவி கருணாநாயக்கா விடயத்திலும் கடைப்பிடிக்கப்படவேண்டும் என அவர் சுட்டிக் காட்டினார்.



மனுதாரர் தம்மைக் கைது செய்வதை தடுக்கும் வகையில், முன்பிணையை பெறமுயல்வது சட்டத்திலிருந்து தப்பமுயலும் செயலாகும் எனவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், ரவி கருணாநாயக்காவின் மனுவின் மீதான தீர்ப்பை தாம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை வழங்குவதாக நீதிவான் தெரிவித்தார். (01)

### வரவு - செலவுத் திட்டத்தை ஹெல உறுமய எதிர்க்குமாம் !

நாடாளுமன்றில் சமரப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்ட அறிக்கை இலங்கை மக்களின் நலன்களுக்கு பாதிப்பான முறையில் அமைந்திருந்தால், அதற்கெதிராக வாக்களிக்கப் போவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இலங்கை மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படும் அரசாங்கத்தின் சிறந்த திட்டங்களுக்கு மட்டுமே தமது கட்சி தொடர்ந்தும் ஆதரவு வழங்குமெனவும் அது குறிப்பிட்டுள்ளது.

மாத்தறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் கட்சிக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இன்று பௌத்தர்களுக்காகப் பேசினால், அதனை இனவாதம் என்று விமர்சனம் செய்யுமளவுக்கு சிங்கள இனம் அடிமைப்படுத்தப்பட்டிருப்பதாக, இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேலும் தெரிவித்தனர்.

# சம்பள முரண்பாடுகள் 3 மாதத்துக்குள் நீக்கப்படும்

### அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவிப்பு

அரச சேவையில் அனைத்துப் பிரிவுகளிலும் சம்பள முரண்பாடுகளை மூன்று மாதங்களுக்குள் நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே, அமைச்சர் அமரசிறி தொடங்கொட இவ்வாறு கூறினார்.

அனைத்து அமைச்சுக்களில் உள்ள சம்பள முரண்பாடுகளை ஆராயவதற்காக பத்துத் தனியார் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்துப் பிரிவுகளிலும் சம்பளம் திருத்தி அமைப்பதை விரைவாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட மேலும் தெரிவித்தார். (01)

# மல்வத்த மகாநாயக்க தேரரை ஜனாதிபதி சந்திரிகா சந்தித்தார்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட மல்வத்தபீடத்தின் மகாநாயக்க தேரரான வண.திப்படுவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரரைக் கணடியிலுள்ள மல்வத்த மகா விகாரையில் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது மிகவும் வறிய நிலையிலுள்ள பௌத்த மக்களுக்கு, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதெனவும், பௌத்த விகாரைகள் மற்றைய மதங்களிலுள்ள நல்ல பழக்க வழக்கங்களை எடுத்து, பௌத்த மக்களுக்கு அறிவுறுத்தும் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டுமெனவும ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது தங்கத்தாலான சிறிய சிற்பநகல் ஒன்றையும் ஜனாதிபதி மகாநாயக்கருக்குக் கையளித்தார்.

### உல்லாசப் பிரயாணத்துறை பாரிய வீழ்ச்சி

இலங்கையில் உல்லாசப் பிரயாயணத்துறை பாரிய வீழ்ச்சியைக் கண்டுவருவதாக உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சகத் தகவல்கள் தெரிவித்தன.

இவ்வருடம் மே மாதம் 30,162 பிரயாணிகள் மாத்திரமே இலங்கைக்குச் வந்துள்ளதாக அமைச்சகப் புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளன.

2004 ஆம் ஆண்டில் இதுவே மிகக் குறைந்த பிரயாணிகளின் வரவு என்பதும் குறிப்பிடத்தக்கது

இலங்கையில் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களே உல்லாசப் பிரயாணத்துறையில் ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சிக்கு காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வடக்கு - கிழக்கு தமிழ் இளைஞர்கள் சிங்களவரிடமே வன்முறையை கற்றனர்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இளைஞர்கள் சிங்களவர்களிடமிருந்தே வன்முறையைக் கற்றுக்கொண்டதாக, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்தார்.

கம்பளையில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

வன்முறையை முதலில் ஆரம்பித்தது சிங்களவர்களே என்றும், தமிழர்கள் அல்ல என்றும் அங்கு குறிப்பிட்ட ஜனாதிபதி, இதனை யாரும் மறந்து விடக்கூடாது எனவும, இதனையிட்டு வெட்கப்படவேண்டும் என்றும் தெரிவித்தார்.

1971 ஆம் ஆண்டு சிங்கள பௌத்தர்களே, சக சிங்கள பௌத்தர்களைக் கொன்றழித்ததாக குறிப்பிட்ட ஜனாதிபதி - தொடர்ந்து 1980 களிலும் இதேநிலை நீடித்ததாகவும் - இரண்டு சிங்கள பௌத்தர்கள் ஜனாதிபதிகளாக இருந்தபோதே 50 ஆயிரம் சிங்கள பௌத்த இளைஞர்கள் கொல்லப்பட்டதாகவும் -

அதன்பின்னரே விடுதலைப் புலிகள் இதனைக் கற்றுக்கொண்டனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மாகாணசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

# மட்டக்களப்பு செய்தியாளருக்கு கொழும்பிலும் கொலை மிரட்டல்

மட்டக்களப்பு செய்தியாளர்களுக்கு கொழும்பிலும் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பிலிருந்து செய்தி ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி வரும் செய்தியாளர்களுக்கு, தொலைபேசி ஊடாக கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருகின்றது.

இதனையடுத்து, பாதுகாப்புத்தேடி கொழும்பு சென்றிருந்த ஆறு செய்தியாளர்களுக்கு, அவர்களது கையடக்கத் தொலைபேசி ஊடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதையடுத்து, அவர்கள் கொழும்பைவிட்டு வேறு இடங்களுக்குச் செல்வதற்கு முயற்சித்து வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் தலைமைக்கு ஆதரவாகச் செய்திகளை செய்தி ஊடகங்களுக்கு அனுப்புவதாகக் குற்றஞ்சாட்டியே இவர்களுக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# முஸ்லிம் காங்கிரசிலிருந்து நீக்கப்பட்ட எம்.பிக்கள் உயர் நீதிமன்றில் மனு!

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் - அதற்கு எதிராகவும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் எதிரான ஆட்சேபனை மனுக்களை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசியப்பட்டியல் உறுப்பினரான ஹுசைன் முகமட் பைலா, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் மஜீத், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ரிஷாத் பதியுதீன் ஆகியோர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

மனுவின் பிரதிவாதிகளாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட எட்டுப்பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் 30 ஆம் திகதி முதல் தங்களைக் கட்சியிலிருந்து நீக்கியதுடன், நாடாளுமன்ற உறுபபினர் பதவியிலிருந்தும் நீக்குவதற்கு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொண்ட நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கான உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கேட்டுக்கொண்டனர்.

தங்களை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக்குவதற்கு எதிராக உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு நீதிமன்றிடம் இந்த மனுதாரர்கள் கேட்டுக் கொண்டனர். (01)



**தியத்தலாவ இராணுவப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி முடித்து வெளியேறும் அணியின் - அணிவகுப்பு மரியாதையை இராணுவத் தளபதியாக இருந்து ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல ஏற்றுக்கொள்வதைக் காணலாம்**

# அரசாங்க அச்சகத் தீவிபத்து பின்னணிச் சதியே காரணம்

## பாதுகாப்பு பிரிவு தகவல் திரட்டியது

(கொழும்பு)

கடந்த வெள்ளிக்கிழமை இரவு அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தில் ஏற்பட்ட விபத்துக்குப் பின்னணிச் சதி காரணமாக இருப்பதாகவும், இது குறித்த தகவல்களை அச்சகக் கூட்டுத்தாபனத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அச்சகக் கூட்டுத்தாபனம் - மின்சார ஒழுங்கினாலோ அல்லது வேறு பிற காரணங்களாலோ தீப்பற்றவில்லை. திட்டமிட்ட ஒரு குழுவினால், அச்சகத்திலுள்ள ஆவணங்களைத் தீக்கிரையாக்கும் நோக்கத்திலேயே இது நடத்தப்பட்டதாகவும், இது தொடர்பான தகவல்களையே அச்சக பாதுகாப்புப் பிரிவினர் பெற்றுள்ளதாகவும் அச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அச்சகம் தீக்கிரையாக்கப்பட்டது மாலை 6.15 மணிக்காகும். ஆனால், வேலை முடிந்து ஊழியர்கள் அச்சகத்தை விட்டு வெளியேறியது மாலை 5.45 மணிக்கு. எனவே, யாரோ திட்டமிட்ட வகையில் எரியக்கூடிய பொருளொன்றை அச்சகத்தினுள் விட்டுச்சென்றிருக்கலாமென பாதுகாப்புப் பிரிவு நம்புகிறது.

இதேவேளை, இந்தத் தீவிபத்துக் குறித்த விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

தற்போது அச்சகத்தின் பணிகள் யாவும் வழமைக்குத் திரும்பியிருப்பதாக, அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்க அச்சகத்தில் ஏற்பட்ட தீவிபத்து - மெழுகுதிரி ஒன்றை எரிய வைத்ததே காரணம் என்று அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்தார்.

வேலைகள் முடிந்ததும் களஞ்சியத்தைச் சீல் வைப்பதற்கு, எரிக்கப்பட்ட மெழுகுவர்த்தி அணைக்கப்படாததினால் தான் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதென்றும், இது களஞ்சியப் பொறுப்பாளரின் கவனயீனமே காரணமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனால் களஞ்சியப் பொறுப்பாளரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த உத்தியோகத்தர் பொது நிர்வாக அமைச்சிலிருந்து அண்மையில்தான் அரசாங்க அச்சகத்துக்கு இடமாற்றப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இரண்டாவது அரையிறுதி போட்டியில் கிறீஸ் - செக் அணிகள் இன்று மோதல்




(லிஸ்பன்)

ஐரோப்பிய கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் அரையிறுதி ஆட்டத்தில் இன்று நள்ளிரவுக்குப் பின்னர், கிறீஸ் - செக் குடியரசு அணிகள் மோதவுள்ளன.

யூரோ - 2004 என அழைக்கப்படும் ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டி கடந்த 12 ஆம் திகதி போர்த்துக்கலில் தொடங்கியது.

இதன் முதல் அரையிறுதிப் போட்டி இன்று அதிகாலை லிஸ்பனில் நடைபெறவுள்ளது. இதில் ஹொலன்ட் - போர்த்துக்கல் அணிகள் மோதுகின்றன.

ஐரோப்பிய உதைபந்தாட்டப் போட்டியின் 2 ஆவது அரையிறுதி ஆட்டம் இன்று நள்ளிரவுக்குப் பின்னர் போர்டோவில் நடைபெறவுள்ளது. இதில் கிரீஸும், செக் குடியரசும் மோதவுள்ளன.

கிறீஸ் அணி லீக் ஆட்டங்களில் போர்த்துக்கலை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்திருந்தது. ஸ்பெயினுடனான ஆட்டத்தை சம நிலையில் முடித்திருந்தது. அந்த அணி ரஷ்யாவிடம் மட்டும் தோல்வி கண்டது. காலிறுதியில் பலம் வாய்ந்த பிரான்ஸை 1-0 என தோற்கடித்து அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

செக் குடியரசு மோதிய லீக் ஆட்டங்கள் அனைத்திலும் வெற்றி பெற்றது. காலிறுதியில் டென்மார்க்கை 3-0 என தோற்கடித்தது. அந்த அணியில் பரோஸ், ரோஸ்கி சிறந்த வீரர்களாக விளங்குகின்றனர். பரோஸ் இந்தப் போட்டியில் 5 கோல்களை அடித்துள்ளார்.

செக்குடியரசு 1976 இல் நடந்த ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ஜேர்மனியை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றிருந்தது.

இம்முறை தான் மோதிய அனைத்து ஆட்டங்களிலும் செக் குடியரசு வென்றுள்ளது அந்த அணிக்கு மேலும் பலத்தை சேர்த்துள்ளது.

## வடக்கு - கிழக்கு மாகாண மட்ட

# உதைபந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு சம்பியனாகியது

வடக்கு - கிழக்கு மாகாண மாவட்டங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் மட்டக்களப்பு மாவட்டம் சம்பியனாகியுள்ளது.

மன்னார் பொது விளையாட்டு அரங்கில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டதன் மூலமே மட்டக்களப்பு மாவட்ட அணி சம்பியனானது.

நொக்கவுட் முறையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் வடக்கு-கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த எட்டு மாவட்டங்களும் பங்குபற்றின.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியை 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்ட வவுனியா அணி - காலிறுதியில் மட்டக்களப்பு மாவட்ட அணியிடம் தோல்விகண்டது.

இதேவேளை - மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்களுக்கு இடையிலான போட்டி 1-1 என்ற சம நிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து பெனால்டி உதை மூலம் 6-4 என்ற கோல் கணக்கில் மட்டக்களப்பு இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

அம்பாறை மாவட்டத்துக்கு எதிரான போட்டியில் 5-0 என்ற கோல் கணக்கிலும் காலிறுதிப் போட்டியொன்றில் திருகோணமலை மாவட்டத்துக்கு எதிரான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கிலும் யாழ். மாவட்டம் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு எதிரான போட்டியில் திருகோணமலை மாவட்டம் 2-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றிருந்தது.

## விம்பிள்டன் ரெனிஸ் போட்டி

# டேவன்போர்ட் - ஷாரா அரையிறுதியில் மோதுவர்



லண்டனில் நடைபெற்றுவரும் விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகளில் காலிறுதிப் போட்டிகளில் மோதிய டேவன்போர்ட் மற்றும் ரஷ்ய வீராங்கனை மரியா ஷாரா ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிகளில் கலந்துகொள்ளத் தகுதிபெற்றனர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் ரெனிஸ் லண்டனில் நடைபெற்றுவருகிறது.

இதன் பெண்கள் பிரிவில் 4 ஆவது சுற்றில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், தாதியானா (பிரான்ஸ்) எதிர்கொண்டார். இதில் செரீனா 6-2, 6-1 என்ற நேர் செட்டில் வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்ற ஆட்டங்களில் உலகின் நான்காம் நிலை வீராங்கனை அமேலி மவ்ரஸ்மோ, ரஷ்ய வீராங்கனை எலியாவையும், பாலாசுரெச் (ஆர்ஜென்ரீனா), ரிதா (இத்தாலி) வையும், ஜெனிபர் கெப்ரியாட்டி (அமெரிக்கா), பெட்ரோவை (ரஷ்யா) தோற்கடித்து காலிறுதிப் போட்டிக்கு முன்னேறினர்.

இதையடுத்து பெண்கள் பிரிவில் 2 காலிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. ஒரு ஆட்டத்தில் உலகின் 5 ஆம் நிலை வீராங்கனையான லிண்ட்சே டேவன்போர்ட், குரோஷிய வீராங்கனை கரோலினாவை எதிர்கொண்டார். டேவன்போர்ட் 6-



2, 6-2 என்ற நேர் செட்டில் கரோலினாவைத் தோற்கடித்து அரையிறுதிக்குள் நுழைந்தார்.

மற்றொரு காலிறுதியில் சுகியாமா (ஜப்பான்), மரியா ஷாரா (ரஷ்யா) மோதினர். இதில் மரியா ஷாரா 5-7, 7-5, 6-1 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். இவர் அரையிறுதியில் டேவன்போர்ட்டுடன் மோதுகிறார்.

# இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டி; நியூஸிலாந்து 7விக்கெட்டுக்களால் வெற்றி

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நியூஸி




லாந்து அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

செஸ்டர் லீ - ஸ்ரீட் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் இங்கிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதையடுத்து துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி வீரர்களுக்கு, நியூஸிலாந்து பந்துவீச்சாளர்கள் பெரும் தலையிடியாக அமைந்தனர்.

இதனால் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்கமுடியாமல் இங்கிலாந்து திணறிய அதேவேளை, அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்து கொண்டிருந்தது.

நியூஸிலாந்து வீரர்கள் ஜேக்கப் ஓரம் மற்றும் பிராங்ளின் ஆகியோர் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை வீழ்த்தியதால், இங்கிலாந்து வீரர்கள் ஓட்டங்களை எடுக்கமுடியாமல் போனது.

இங்கிலாந்து வீரர்கள் எவருமே 14 ஓட்டங்களுக்கு மேல் பெறமுடியாமல் ஆட்டமிழந்தனர். இதனால் இங்கிலாந்து அணி 32.5 ஓவர்களிலேயே அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 101 ஓட்டங்களை பெற்றது.

நியூஸிலாந்து அணி சார்பில் பந்து வீசிய பிராங்ளின் 5 விக்கெட்டுக்களையும், ஓரம் 3 விக்கெட்டுக்களையும், வெட்டோரி, கெய்ன்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களையும்




வீழ்த்தினர்.

இதையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணிக்கு ஹர்மிசன் சவாலாகப் பந்துவீசினார். இவர் 3 விக்கெட்டுக்களை எடுத்த போதும் 17.2 ஓவர்களிலேயே 103 ஓட்டங்களைப் பெற்று நியூஸிலாந்து வெற்றிபெற்றது.

நட்வெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் நியூஸிலாந்து மொத்தம் 12 புள்ளிகளுடனும், மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 புள்ளிகளுடனும், இங்கிலாந்து 3 புள்ளிகளுடனும் இருப்பது குறிப்பிடத்தக்கது.




# ஆசிய கிண்ணப் போட்டியை இந்தியா வெற்றிகொள்ளும்!

## வக்கார் யூனுஸ் தெரிவிப்பு

இந்திய கிரிக்கெட் அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளர்களான இர்பான் பதான், பாலாஜி இருவரும் இலங்கையிலும் சிறப்பாகப் பந்து வீசினால் ஆசிய கிண்ணத்தை இந்தியா வெல்வதற்கான வாய்ப்பு இருப்பதாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வக்கார் யூனுஸ் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக புது டெல்கி சென்றுள்ள வக்கார் யூனுஸ் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது -

பதான், பாலாஜி இருவரும் சமீபத்தில் நடைபெற்றுமுடிந்த பாகிஸ்தான் தொடரின்போது மிகச்சிறப்பாக பந்துவீசினர். தங்களது வரைமுறைகளை உணர்ந்து இருவரும் பந்து வீசினர்.

இதேபோல் இலங்கையிலும் பந்துவீசினால் ஆசிய கிண்ணத்தை இந்தியா வெல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

இதற்கு முன்பு பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக அயல் நாட்டவர்கள் இருந்துள்ளனர். ஆனால் அது பலனளிக்கவில்லை.

ஆனால், வூல்மர் மிகச்சிறந்தவர். தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளராக அவர் சிறப்பாக செயற்பட்டுள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவர் மீது நம்பிக்கை வைத்துள்ளது. அந்த நம்பிக்கையை அவா வெற்றிகரமாக செயற்படுத்துவார்.

பாகிஸ்தான் அணி தற்போது தடுமாறிவருகிறது. இதை மறுக்க முடியாது. பாகிஸ்தான் அணியின்



தரத்தை உயர்த்த கிரிக்கெட் சபை வித்தியாசமான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. லாகூரில் புதிய அக்கடமி தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நல்ல அடித்தளம் அமைக்கப்படும் என நம்புகிறேன்.

வசீம் அக்ரமும், நானும் ஒரே நேரத்தில் அணியை விட்டு விலகியதால் பெரும் வெற்றிடம் ஏற்பட்டுவிட்டது. இதனால் பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி தற்போது திணறிவருகிறது.

இந்திய அணியில் சர்வதேச தரம் மிக்க துடுப்பாட்ட வீரர்கள் உள்ளனர். இந்திய அணியின் பந்து வீச்சும் மிகச்சிறப்பாக உள்ளது என்றும் கூறினார்.

## கரும்புலிகள் நினைவு உதைபந்தாட்ட அரையிறுதி போட்டி இன்று

கரும்புலிகள் நினைவாக தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் -

இன்று இரவு 7 மணிக்கு மின்னொளியில் நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

காலிறுதிப் போட்டியில் கலைவாணி விளையாட்டுக்கழகத்தை றோயல் விளையாட்டுக்கழகம் வென்றும் -

சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை பாடும்மீன் விளையாட்டுக் கழகம் வெற்றிகொண்டும் அரையிறுதிக்குத் தகுதிபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கெதிரான முதல் டெஸ்ட்; பொண்டிங் விளையாடமாட்டார்!



இலங்கை அணிக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டியிலிருந்து அவுஸ்ரேலிய அணியின் கப்டன் ரிக்கி பொண்டிங் விலகியுள்ளார்.

இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டி இன்று தொடங்கவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை அவருடைய அத்தை இறந்துபோனதால் முதல் டெஸ்ட் போட்டியில் தன்னால் பங்கேற்க முடியாது என்று கிரிக்கெட் அவுஸ்ரேலியாவுக்கு அவர் அறிவித்துள்ளார்.

ஆனால், அடுத்த 9 ஆம் திகதி டார்வினில் தொடங்கவிருக்கும் 2 ஆவது டெஸ்ட் போட்டியில் கலந்துகொள்ளப்போவதாக பொண்டிங் தெரிவித்துள்ளார்.

முதல் டெஸ்ட் போட்டியில் பொண்டிங்கிற்குப் பதிலாக மத்யூ எலியட் அவுஸ்ரேலிய அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார். பொண்டிங்கிற்குப் பதிலாக இந்தப் போட்டியில் அடம் கில்கிறிஸ்ட் கப்டனாகவும், துணைக் கப்டனாக லீமனும் செயற்படவுள்ளனர்.

5 வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் கடைசியாக விளையாடிய எலியட் தனக்கு மீண்டும் வாய்ப்புக் கிடைத்திருப்பதில் மகிழ்ச்சியடைந்துள்ளார்.

ஒரு போட்டியில் விளையாட வாய்ப்புக் கிடைத்திருந்தாலும், கிடைத்த இந்த வாய்ப்பையும், இனிவரும் காலங்களில் வாய்ப்புக் கிடைத்தாலும் அதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வேன் என்று கூறிய எலியட் கடந்த சீசனில் உள்நாட்டுப் போட்டிகளில் 11 போட்டிகளில் விளையாடி 1381 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

# மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த அனைவரும் கடினமாக உழைக்கவேண்டும்

## கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உரிமைக்குரல் எழுப்புவதோடு தமிழ் மாணவர்கள் எதிர்கொள்ளும் கல்விப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதிக அக்கறை காட்டி வரும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், இனத்தின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதிலும் பின்நிற்பதில்லை.

வடக்கு - கிழக்குப் பகுதியில் இயங்கி வரும் தொழிற்சங்கங்களில் பாரிய சங்கமாகவும், கட்டுக் கோப்புடனும், துடிதுடிப்பாகவும் இயங்கி வரும் சங்கமும் இந்தச் சங்கம்தான் என கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்தவாரம் நடைபெற்ற 'இலங்கையில் ஆசிரியர்களின் உரிமைகள்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் ஆரம்ப நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் தனது உரையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்- சிங்கள அரசின் திட்டமிடப்பட்ட செயற்பாட்டினால் தமிழர் பகுதியில் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தபோதும், ஆசிரியர் கட்டுப்பாடு, திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் இல்லாமை என்பனவும் காரணிகளாகின்றன.

அரசின் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்கு எதிராக நாம் செயற்பட்டு கல்வியின் தரத்தை உயர்த்த நாம் அனைவரும் உழைக்கவேண்டும்.

இன்று பாடசாலைகளில் கடற்தொழில்வளம், கட்டட நிர்மாணம், கலைத்துறை, இலத்திரனியல் போன்ற பாடங்களுக்குத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இல்லை. இதனால் இந்தப் பாடங்களைப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கு தடை விதிப்பதற்கு அரசாங்கம் முயல்கின்றது. இந்தப் பாடங்களில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தவும், ஆசிரியர் நியமனம் கிடைக்கவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர்கள் செயற்படவேண்டும் என்று மேலும் தெரிவித்தார்.



கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்ற கோப்பாய் சிவத்தின் 'தார்மீக கோலங்கள்' நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புப் பிரதியை சோதிப் பெருமாள் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

## வீதிகள் திருத்தப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 14 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. இது உள்ளூராட்சி சபைகள் மூலமாக மீள மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான நிதியைப் புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் மீளக் குடியேற்ற அமைச்சு யாழ். அரசாங்க அதிபர் ஊடாக வழங்கியுள்ளது.

முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட வீதிகளாவன-

சுன்னாகம் பவர்ஸ்ரேஷன் வீதி, உடுவில் லவ்லேன் வீதி, பருத்தித்துறை கடற்கரை 4 ஆம் குறுக்குத் தெரு வீதி, கரணவாய் மத்தி சோதி வீதி, சாவகச்சேரி மந்துவில் அம்பாள் கோவில் வீதி, சாவகச்சேரி மந்துவில் பிள்ளையார் வீதி, நெடுந்தீவு கலாமுனை வீதி, ஊர்காவற்துறை வள்ளியம்மன் கோவில் வீதி, காரைதீவு திக்கரை முருகமூர்த்தி கோயில் வீதி, வேலணை இராசையா வீதி, அராலி கிழக்கு வாணன் லேன், சுழிபுரம் கம்மாலை வீதி, நவாலி வை.எம்.சி.ஏ.வீதி ஆகியனவே புனரமைக்கப்படவுள்ளன வாகும்.

(17)

## இயந்திரவியல் கற்கைநெறிக்கு

# எட்டாம் வகுப்பில் கல்வி கற்றவர்களும் இனிமேல் இணைந்து கொள்ளலாம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரவியல் கற்கைநெறிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான கல்வித்தகைமை எட்டாம் வகுப்பாகக் குறைக்கப்பட்டுள்ளது.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் என்.யோகராஜன் கடந்த வாரம் அமைச்சர் பியசேன கமகேயைச் சந்தித்தவேளை - இதற்கான அனுமதியைப் பெற்றுக்கொணடதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி உட்பட, நாட்டின் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் இயந்திரவியல் கற்கைநெறிக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கு க.பொ.த. சாதாரண தர கல்வித் தரமே தகைமையாக இருந்து வந்தது.

எனினும், யாழ்.மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலர் வாழ்வதால், அவர்களுக்கு விசேட சலுகையளிக்குமாறு யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர், அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

இதன் அடிப்படையிலேயே யாழ். தெழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரவியல் கற்கை நெறியினைக் கற்க விரும்பும் ஓர் மாணவன் - அடிப்படைக் கல்வித்தகுதியாக 8 ஆம் வகுப்பில் சித்தியடைந்திருந்தால் போதுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த கல்வியாண்டுக்கான இயந்திரவியல் கற்கைநெறியில் இந்தக் கல்வித்தகைமை அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில்

# வீதி ஒழுங்கு விதிகள் குறித்து ஆசிரியர்களுக்குச் செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இரண்டுநாள் வீதி ஒழுங்குகள் கருத்தூட்டற் செயலமர்வு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வு நேற்றுமுன்தினம் காலை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் காலை 9.15 மணிக்கு ஆரம்பமானது.

இந்த நிகழ்வில், பொதுச்சுடரினை குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பாளர் இயலரசன், மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சிவசாமி ஆகியோர் ஏற்றினர். தேசியக் கொடியினைத் தமிழீழ காவல்துறை நடுவப்பணியகக் கண்காணிப்பாளர் சி.மாதவன் ஏற்றினார்.

இதனைத் தொடர்ந்து, நிகழ்வுகள் அனைத்தும் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.சின்னராசா தலைமையில் இடம்பெற்றது. இங்கு சிறப்புரையினைத் தமிழீழக் காவல்துறை நடுவப்பணியகக் கண்காணிப்பாளர் சி.மாதவன் நிகழ்த்தினார். இதனைத்தொடர்ந்து, ஆசிரியர்களுக்கான கருத்தூட்டல் செயலமர்வினை வாகனப் போக்குவரத்து பிரிவுக் கண்காணிப்பாளர் கு.கனகலிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

இந்தக் கருத்தமர்வில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளிலிருந்து தலா ஒரு ஆசிரியர் வீதம் தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்க நல்லூர் பிரதேசசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைகளுக்கு உட்பட்ட பிரதேசங்களில் அலைந்து திரியும் கட்டாக்காலி கால்நடைகள், நல்லூர் பிரதேச சபைகளினால் பிடிக்கப்படவுள்ளன.

கடந்த 28 ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது, கட்டாக்காலி கால்நடைகளால் பொதுமக்களும் வாகன சாரதிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்தே, கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக அனைவருக்கும் பகிரங்க அறிவுறுத்தல் வழங்கப்படும் என்றும், அதற்கு அமைவாகச் செயற்பட மறுப்போரின் கால்நடைகள் பிரதேச சபையினரால் பிடிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (லெ)

# திருமறைக் கலாமன்றம் நடத்தும் மாபெரும் இசைநாடக விழா

திருமறைக் கலாமன்றம் நடாத்தும் மாபெரும் இசை நாடக விழா, மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெறவுள்ளது. மூன்று நாட்கள் கருத்தமர்வுகளும், இரவு இசை நாடக ஆற்றுகையும் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 2 ஆம், 3 ஆம், 4 ஆம் திகதிகளில் காலை 9.00 மணிமுதல் மாலை 5 மணிவரை இசை நாடகத்துறைசார் கலைஞர்களின் கருத்தரங்குகள் நடைபெறும்.

நாளைமுதல் தொடர்ந்து மூன்று நாட்கள் மாலை 7.00 மணிக்கு மன்ற அரங்கில் ஸ்ரீவள்ளி, சத்தியவான் சாவித்திரி ஆகிய இசை நாடகங்கள் குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலிருந்தும், அந்தந்தப் பிரதேச கலைஞர்களால் ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

ஒவ்வொரு வருடமும் திருமறைக கலாமன்றத்தால் மேற்கொள்ளப்படும் பாரம்பரிய கலை வடிவங்களின் தொடர்நாள் நிகழ்வாக இந்த முறை இசை நாடக விழா நடாத்தப்படவுள்ளதாகத் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் தெரிவித்தார்.

(91)

## வலிகாமம் வலயத்திற்கு

# சமூகக்கல்வி பாட ஆலோசகருக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்தில் ஆரம்பக் கல்வி, சமூகக்கல்வி பாட ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆரம்பக்கல்வியை அல்லது சமூகக்கல்வியை ஒரு பாடமாகக் கொண்டு, கற்பித்தல் அனுபவத்தைக கொண்ட இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1, வகுப்பு 2.1 ஐச் சேர்ந்த பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாதிரி விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு, அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் தெரிவித்தார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

### பொங்கல் விழா

தென்புலோலி குரும்பசிட்டி வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் நேர்த்திக் கடனுக்காக நேர்ந்த ஆட்டுக்கடா, கோழிகள், சேவல்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

### அதிபர் நியமனம்

யாழ். அச்சுவேலி மகா வித்தியாலயத்திற்குப் புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் அச்சுவேலி அதிபராகக் கடமையாற்றிய சகுந்தலாதேவி கனகராஜன் ஓய்வுபெற்றதையடுத்து புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய எஸ்.பாலசுப்பிரமணியம் அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### நெடுந்தீவு தோமையார் ஆலய திருநாள் திருப்பலி

நெடுந்தீவு புனித தோமையார் ஆலய வருடாந்தத் திருநாள் திருப்பலிகள் கடந்த 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின.

2 ஆம் திகதி மாலை நற்கருணை வழிபாடும், மறுநாள் காலை நவநாள் இறுதித் திருப்பலியும், கொடி இறக்கமும் இடம்பெறும்.

இதேவேளை, 2 ஆம் திகதி மாலை 3 மணிக்கு செபநாயகபுரம் பகுதியிலிருந்து நற்கருணைப் பேரணி ஆரம்பமாகி, பிரதான வீதியூடாகச் சென்று புனித தோமையார் ஆலயத்தில் நற்கருணை எழுந்தேற்றம் இடம்பெறவுள்ளது.

இந்தப் பேரணியானது கடந்த மாதம் முதல் நடைபெற்றுவரும் மகாஞானொடுக்கத்தின் ஒரு பகுதி வழிபாடென்பதுவும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (113)

### பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி கோட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பாடசாலைகளின் அதிபர்களுக்கான ஜி.ரி.இசற் நடாத்தும் கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஜி.ரி.இசற் நிறுவனப் பொறியியலாளர்கள், கல்விப் பணிப்பாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களைக் கலந்துகொள்ளுமாறு கோட்டக்கல்வி அதிகாரி ப.இரகுநாதன் தெரிவித்துள்ளார்.

(17)

# மட்டுவிலில் காட்டுப் பன்றிகளின் தொல்லைகள் அதிகரிப்பு

(மட்டுவில்)

மட்டுவில் சரசாலைப் பகுதிகளில் பெருகியுள்ள காட்டுப் பன்றிகளால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்திக்க நேர்கின்றது. ஆட்களற்ற பற்றைகள் நிறைந்த வளவுகளில் மறைந்து வாழும் இவை, இரவுப் பொழுதுகளில் மக்களது பயன்தரு பயிர்வகைகளையெல்லாம் அழித்து வருகின்றன.

அத்துடன் காலை, மாலை வேளைகளில் பற்றைக்குள் இருந்து திடீரென வீதியின் குறுக்கே ஓடும் இந்தப் பன்றிகளால் - மோட்டார் சைக்கிளோட்டிகளும், பாதசாரிகளும் படுகாயமடையும் சம்பவங்களும் இந்தப் பகுதியில் நாளாந்தம் நடைபெறுகிறது.

இந்தப் பன்றிகள் பெருக்கத்தையும் அவற்றின் அட்டகாசத்தையும் அடக்காது விட்டால் உயிரிழப்புகள் கூட ஏற்படும் சாத்தியம் உள்ளதாக இந்தப் பகுதி மக்கள் அச்சம் கொண்டுள்ளனர். கட்டாக்காலி நாய்களை அழிக்கும் திட்டம் போன்று, இந்தக் காட்டுப் பன்றிகளையும் தேடி அழிக்கும் நடவடிக்கை ஒன்றினைப் பிரதேச சபையினர் பொலிஸாரின் உதவியோடு மேற்கொள்ள வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (24)

# ஞாபக சக்தியை அதிகரிக்கும் வல்லாரைக் கீரை

எமக்கு உணவாக பல்வேறுபட்ட மரக்கறி வகைகளும், கீரை வகைகளும் கிடைக்கின்றன. அவற்றில் வல்லாரை நல்ல போசாக்கும் மருத்துவத் தன்மையும் கொண்ட இலை வகையாகும். மூளை வளர்ச்சிக்கும், ஞாபக சக்தியை அதிகரிக்கவும் இது உதவுகின்றது. இந்த இலை பீனிசத்தையும் வேறுபல நோய்களையும் தீர்க்கக்கூடியது. இது அம்பிலி + பெரி என்ற வகையைச் சேர்ந்ததாகும்.

வல்லாரையைத் தனியாகவும், இலைக் கஞ்சியாகவும் சமைககலாம். இலைகளின் தண்டுகளைக் காயவைத்து தூளாக்கி பலகாலம் வைத்திருந்து, பாவனைக்கு எடுத்துக் கொள்ளலாம். ஈரவலயப் பிரதேசங்களில் சிறப்பாக உற்பத்தி செய்யக் கூடிய கீரை வகையாக இது காணப்படுகிறது.

| வழங்கவேண்டிய சந்தர்ப்பங்கள் | கிலோ கிராம் ஹெக்டயர் ஒன்றுக்கு | | |
|---|---|---|---|
| | யூரியா | சுபர் பொஸ்பேட் | மியரியெட் ஓப் பொட்டாஸ் |
| பிரதான உரம் | 90 | 135 | 100 |
| முளைக்கவைத்து 4 வாரங்களுக்குப் பின்பு | 90 | - | - |
| அனைத்து விளைச்சல் பெற்ற பின்பு | 45 | - | 20 |
| அனைத்து 6 மாதங்களுக்கு ஒரு தடவை | - | 65 | - |

வல்லாரையை நீர் விநியோகிக்கக் கூடிய நிலங்களில் உற்பத்தி செய்யமுடியும். தாழ்ந்த நிலங்களில் தனி உற்பத்தியாகவும், உயர்ந்த நிலங்களில் தென்னை, வாழை ஆகிய மரங்களிடையேயும் சேர்ந்து உற்பத்தியை மேற்கொள்ளலாம்.

வல்லாரையின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு இரு வகையாக அது பாகுபடுத்தப்படுகின்றது. இவற்றில் ஒன்று வல்லாரைக் கொடிவகை மற்றது வல்லாரை புதர் வகை.

**1) வல்லாரைக் கொடி வகை**

இயற்கையாக வளருவதோடு, சிறிய இலைகள் கொண்டது. கொடிகளில் கிளைகள் உருவாகி, அவை புதிய மரங்களாக வளரும். புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள வல்லாரை (பிலிப்பீன் வகை) வகையின் இலைகள் பெரிதாகும். அதேபோல் கொடிகளாகப் பரவி வளரும் தன்மையுடையது. சலாதை, பச்சை நிறமும், மஞ்சளும் கலந்த நிறத்தினையும் பெரிய இலைகளையும் கொண்டதாகக் காணப்படுகின்றன. மீரிகம வல்லாரை ஓரளவு பெரிதான இலைகள் கொண்டதாகும். இவை கிளைகளாகப் பரந்து வளர்ச்சி அடைகின்றன. இதில் அதிக புரதம் அடங்கியுள்ளது.

**2) வல்லாரை புதர் வகை**

இலைகளின் நரம்பு ஒரேமாதிரியானவை, ஓர் அளவு பெரிதான இலைகளைக் கொண்ட புதராக வளரும் வகை இந்தவகையாகும். இதில் முளைக்கும் கன்றுகளை வேறாக்கி நடுவதால், வளர்ச்சியடையும். இலைகளின் நீளமும், அளவும் கொண்டு வளர்ச்சியை தீர்மானிக்கலாம். ஆனாலும், சாதாரணமாக இலைகளின் காம்பின் நீளம் 10, 15 சென்ரி மீற்றராகும்.

☛ புதர்களாக இருக்கும் வல்லாரை இனமான சலாதைகளில் இலைகளின் விளிம்பு பச்சை நிறமாகக் காணப்படும். இவை புதராக வளரும், அழகான செடியாகக் காணலாம். செடிகளை வேறாக்கி முளைக்க வைப்பதன்மூலம் கொடிகளாக வளர்ச்சியடைய வைக்கலாம்.

☛ பரந்து வளரும் பகுதிகளை 2-3 கிளைகள் இருக்குமாறு வேறாக்கிக்கொள்ளவேண்டும். இவற்றினை சேர்த்து இருக்கும்படி முளைக்க வைக்கவேண்டும். இந்தப் புதர்களுக்குள் இருக்கவேண்டிய இடைவெளிகளின் அளவு - பெரிய கொடி வல்லாரைக்கு 20cmx20cm ஆகவும், மத்தியளவு இலைகளைக் கொண்ட கொடிகள் 15 cmx15 cm அளவும் ஆகும்.

☛ நீர் தேங்காது தயாரிக்கப் பட்ட உயர்ந்த பாத்திகளில், வல்லாரை செடியின் வேரை அவதானித்து ஒரு அடிக்கு மேல் வளர்ந்த செடிகளை முளைக்க வைக்கவேண்டும். நீர் வடிந்து போகுமாறு வாய்க்கால்களை அமைத்து நிலத்தைக் கொத்தி, மண்ணைப் புரட்டி புற்களை உக்கவிட்டு, பின்பு மண்ணை இலகுவாக்கி சமப்படுத்தி அதற்குள் செடிகளை முளைக்க வைக்கலாம். புதர் வல்லாரை உற்பத்தியின் நிலங்களில் 1 மீற்றர் அகலமான உயர்ந்த பாத்திகளை தயாரித்துக் கொள்வது உகந்தது. உயர்ந்த நிலங்களில் உற்பத்தி செய்யும்போது, இந்த அகலத்துக்குப் பாத்திகளைத் தயாரித்துக் கொள்வது நல்லது. நிலத்தில் தகுந்த இடைவெளிவிட்டு 2-3 செடிகள் முளைக்க வைக்கலாம். செடிகளை முளைக்க வைப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு தேவையான அளவு காபனிக் உரத்தை கலந்து கொள்ளவேண்டும். செடிகளை முளைக்க வைக்கும் போது, நிலம் ஈரமாக இருக்கவேண்டும். மாலை நேரங்களில் செடிகளை முளைக்க வைப்பதனால் செடிகள் வாடும் தன்மையை குறைத்துக் கொள்ளலாம். வரண்ட வெப்பநிலையின்போது, தென்னோலை போன்றவற்றைப் பயன்படுத்தி நிழல் கொடுத்து செடிகளைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.



**உரம் போடுதல்**

வல்லாரை உற்பத்தியின்போது, காபனிக் இரசாயனம் ஆகிய வகை உரங்களும் போடலாம். சாணம், கோழி உரம், கொம்போஸ்ட் மற்றும் குழை உரம், காபனிக் உரத்துக்குப் பதிலாக பயன்படுத்திக் கொள்ளலாம். 1000 மீற்றர் வர்க்கத்துக்கு, ஒரு மெற்றிக் தொன் மண்ணுடன் கலந்துகொள்ள வேண்டும். விளைச்சலைப் பெறும்போது இந்த அளவு உரத்தைப் போட்டு மேலதிக உரத்தை நீக்குமாறு நீர் விநியோகிக்கவேண்டும்.

உற்பத்தி வளர்ச்சிக்கு தகுந்த வாறு ஈரத்தன்மை மண்ணில் இருக்கவேண்டும். உற்பத்திகள் வளர்ச்சி அடையும் காலத்தில் புற்களால் பயிரைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். விளைச்சலைப் பெற்ற உடன் புற்களை நீக்குவதற்கு முயற்சிக்க வேண்டும்.

**வல்லாரை வகைகளுக்கு ஏற்படும் நோய்கள்**

இலைகளின் மஞ்சள் சேர்ந்த பச்சை நிறமான புள்ளிகள் அதிகமாக ஏற்படும். பிஞ்சு இலைகள் வித்தியாசமாக மாறுவதோடு, சிறிதாக மாறுவதும், விளிம்புகளும், இலைகளின் காம்புகளும் நாவல் நிறமாக மாறுவதையும் காணலாம். புதர்கள் சிறிதாகி வளர்ச்சி குறைவதோடு, செடி வாடிவிடும்.

இந்த நோயை வராமல் தடுப்பதற்காக, நோயுள்ள இலைகள் கொண்ட செடிகளைப் பிடுங்கி எறிய வேண்டும்.

மீண்டும் புதிய உற்பத்தியின்போது நல்ல கன்றுகளை தெரிவுசெய்து நடவேண்டும்.

**பச்சைப்புள்ளி நோய்**

“சர்கஸ் போரா“ பங்கஸ் நோயினால் இலைகளில் நாவல் நிறமான சிறிய வட்டங்கள் உருவாகி, பின்பு மஞ்சள் நிறமாகி வாடிப்போகும்.

இலைகளை வெட்டி நீக்கி, தகுந்த கிருமி நாசினி ஒன்றை பயன்படுத்தி இந்த நோய் பரவுவதைத் தடுத்துக் கொள்ளலாம்.

**வட்டப் புழுவின் பாதிப்பு**

“மெலொயிட்கையின்“ என்ற வகையைச் சேர்ந்த வட்டப் புழு - வேர் முடிச்சுக்களை, துளைத்து நீர் மற்றும் கனிப் பொருட்களைச் செடிக்கு இழுத்துக்கொள்ளும் தன்மைக்கு பாதிப்பு ஏற்படுத்துகிறது. இதற்கு மேலாகப் பங்கஸ் மற்றும் பக்ரீரியா போன்றவறறின் பாதிப்பினால் வேர்களில் வெவ்வேறு நோய்களை ஏற்படுத்தும். கிருமிகளின் பாதிப்புக்குள்ளான செடிகள் சிறிதாகும். இலைகள் மஞ்சள் நிறமாகமாறி, வேர்களில் முடிசசுக்கள் உருவாகும். தேவையற்ற அளவுக்கு வேர்கள் பருமனாகும்.

| 100 கிராம் வல்லாரையில் அடங்கியுள்ள போஷாக்குகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சக்தி | புரதம் | சத்து | மா | கல்சியம் | பொஸ்பரஸ் | இரும்பு |
| கலரி | 2.1கிராம் | 0.5கிராம் | 6 கிராம் | 224 கிராம் | 32 மி. கிராம் | 68.8 மி. கிராம் |

**வட்டப்புழு நோயைத் தடுப்பதற்காக**

ஆரோக்கியமான செடிகளை முளைக்க வைக்க வேண்டும். உரமாகக் கோழி உரத்தை உபயோகிக்க வேண்டும். பயிர்களை மாற்ற வேண்டும்.

அனாவசியமாக நைட்ரஜன்(N) உரம் உபயோகிப்பது தவிர்க்கவேண்டும்.

**சாற்றை உறிஞ்சிக் குடிக்கும் மூட்டைப் பூச்சி**

“ஹெலடிகஸ்டிபியாலிஸ்“ என்ற கருப்பு நிறத்தைக் கொண்ட சிறிய மூட்டைப் பூச்சிக்கள், இலைகளின் சாற்றை உறிஞ்சிக் குடிப்பதனால் வெள்ளை நிறப் புள்ளிகள் உருவாகும். இவற்றைத் தடுப்பதற்காக தகுந்த கிருமிநாசினி ஒன்றைப் பாவிக்கவேண்டும்.

**விளைச்சலைப் பெறுதல்**

தகுந்த பயிரிடும் திட்டத்தின்படி, நீர் நன்றாக விநியோகித்து செடிகளின் உற்பத்தியின் 90-100 நாடகளுக்குள் முதல் விளைச்சலைப் பெற்ற பினபு, 60 நாட்களுக்கு ஒரு தடவை - 2,3 வருடங்களுக்கு விளைச்சலைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்குத் தகுந்த சில திட்டங்களை மேற்கொள்ளலாம். அவையாவன,

1. வல்லாரைப் புதர் நிலமட்டத்திலிருந்து கொஞ்சம் மேலாக வெட்டிக் கொள்ளவேண்டும்.
2. தகுந்தளவு முற்றிய புதர்களை சுற்றி, இருக்கும் இலை தண்டுகளை வெட்டி எடுப்பதனால், இரு வாரத்துக்கு ஒரு தடவை விளைச்சலைப் பெறலாம்.
3. கொடி வல்லாரை தகுந்தளவு முற்றிய இலைகளின காம்புகளைக் கைகளால் பிடுங்கிக்கொள்ளலாம்.
4. கொடி வல்லாரைகளில் பரவிக் காணப்படும் தண்டுகள் நிலத்தில் சேர்ந்துள்ள இடங்களில் வேர்களோடு பிடுங்கிக் கொள்வதினால் 4000 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் வருடத்துக்கு 4000 கிலோ 5000 கிலோ வரை இதன் விளைச்சலைப் பெறலாம். மேலும் அதிகம் முற்றிய மற்றும் நோயுள்ள இலைகளை தெரிவு செய்து நீக்கிய நல்ல வல்லாரைகளை சந்தைக்கு அனுப்புவதற்காக கீரைகளைக் கட்டுக்களாக கட்டிய பின்பு கூடைகளில் போட்டுக் கொள்வது நல்லதாகும்.

**- சசி சந்திரகாசன்**

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 60/= | 70/= | 50/= | 60/= | 50/= | 60/= |
| வெண்டிக்காய் | 20/= | 30/= | 40/= | 25/= | 60/= | 20/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 65/= | 70/= | 70/= | 80/= | 65/= | 80/ |
| கத்தரிக்காய் | 60/= | 60/= | 70/= | 50/= | 60/= | 40/= | 60/= |
| பாகற்காய் | 70/= | 70/= | 80/= | 60/= | 80/= | 60/= | 50/= |
| கரட் | 80/= | 70/= | 80/= | 60/= | 70/= | 60/= | 80/= |
| பீற்றூட் | 30/= | 40/= | 45/= | 30/= | 60/= | 30/= | 40/= |
| முருங்கக்காய் | 180/= | 140/= | 150/= | 150/= | 100/= | 160/= | 120/= |
| வெங்காயம் | 50/= | 35/= | 35/= | 30/= | 70/= | 30/= | 60/= |
| பச்சை மிளகாய் | 50/= | 40/= | 35/= | 30/= | 60/= | 35/= | 60/= |

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்




# சுயதொழிலில் ஈடுபடின் பிறரை நம்பியிருக்கத் தேவையில்லை




சந்தை நிலவரங்கள் பற்றி அறிவதற்காக நெல்லியடிச் சந்தைக்குச் சென்றபோது, சில மொத்த வியாபாரிகள் கீரை வாங்குவதற்காகக் காத்துக்கொண்டு நின்றதை அவதானித்தோம். அப்போது சிலரது கீரைகள் வந்தும் அவர்கள் கொள்வனவு செய்யாது நின்றனர். அதுபற்றி அவர்களை விசாரித்த போது, எமக்கு 'கீரைத்தம்பி' கீரை கொண்டு வந்து தருவான் என்றனர். அவர் வரும் வரை காத்திருந்து இதுபற்றி விசாரித்த பொழுது -

எனது பெயர் இ.தெய்வீகநாதன் (சுரேஸ்) நான், மகாத்மா வீதி நெல்லியடியில் வசித்து வருகிறேன். எனது வயது 31. எனது ஆரம்பக் கல்வியை நெல்லியடி மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையிலும், அதன் பின்னர் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் கல்வியைத் தொடர்ந்து முடித்தேன்.

எனக்கு 5 பெண் சகோதரிகள். ஒரு ஆண சகோதரனும் உண்டு. நான்தான் இளைய பிள்ளை. எமது அப்பா ஆரம்பத்திலே மண்ணெண்ணை வியாபாரம் செய்தும், பின்னர் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து கார், மினி பஸ் என பல முயற்சிகளில் ஈடுபட்டும், எமக்குக் கஷ்டமே தெரியாத அளவுக்கு எம்மை வளர்த்து ஆளாக்கினர். நான் கடைசிப் பிள்ளையாகையாய் வீட்டில் செல்லப்பிள்ளையாக இருந்தேன். இதனால், எனது படிப்பில் அதிக கவனம் செலுத்த முடியாமலும் போயிற்று.

மேலும் 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் - ஏற்பட்ட இனப் பிரச்சினையால் எமது வீடு மற்றும் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இதனால், எமது மாமாவின் வீட்டில் வசித்து வந்தோம். எனது அப்பா முதுமையடைந்த படியாலும், எனக்கும் படிக்கும்போதே விவசாயத்தில் ஏற்பட்ட ஆர்வத்தின் காரணமாகவும் எனது முதல் சுயதொழிலை 30 பட்டிகள் கொண்ட விவசாய நிலப்பரப்பில் ஆரம்பித்தேன். இதனுடன் இரண்டு பால் தரும் பசுமாடுகளையும், வளர்த்து வந்தேன். காலத்தின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் கீரை, மரவள்ளி என பல்வேறு மரக்கறிகளை உற்பத்திசெய்து சந்தைப்படுத்து வேன். அத்துடன் வாழைமரங்கள் மூலமும் பிரயோசனம் பெற்றுக்கொள்கிறேன்.

எனக்கு இந்தத் தொழில் 12 வருடங்களாக அனுபவம் உண்டு. அதனால் நான் சந்தைப்படுத்துவது நெல்லியடிச் சந்தையில், எனக்கென ஒரு தனியிடத்தையும் பெற்றுள்ளேன். நெல்லியடிச் சந்தையில் எனக்குக் 'கீரைத்தம்பி' என்ற ஒரு பட்டப் பெயருமுண்டு.

எனது திறமைகளை வளர்ப்பதற்கும் வெளிக் கொண்டுவருவதற்கும் உதவியாக அமைந்தது ஜேர்மன் நிறுவனமும், பல்லைக் கழகமும் இணைந்து நடாத்திய 'செவே' எனும் பயிற்சிப் பட்டறையாகும். 1996, 1997 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் எனது பயிற்சிகளை முடித்து சான்றிதழையும் பெற்றேன்.

இந்தச்' சான்றிதழின் உதவியுடன் வங்கியொன்றில் கடனுதவிகளைப் பெற்று, எனது தொழிலை 5 மடங்காக உயர்த்தி 4,5 பேர்களுக்கு வேலை வாய்ப்பையும் வழங்கியுள்ளேன்.

எனது இன்னொரு முயற்சியாகக் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளேன். கால்நடைத் தீவனங்களுக்குரிய உணவுப்பொருட்களையும், விவசாயத்திற்குரிய மூலப் பொருட்களையும் கொள்வனவு விலையில் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் 2002 ஆம் ஆண்டு தைமாதத்தில் நெல்லியடி பழைய சந்தையில், நாதன் ஸ்ரோர்ஸ் எனும் பலசரக்குக் கடை ஒன்றையும் ஆரம்பித்தேன்.

இந்தக் கடையை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் செயற்பட எனக்குப் பெருமளவான நிதியுதவியை வழங்கியது நெல்லியடியிலுள்ள ஒரு வங்கியாகும். என்னுடைய வளர்ச்சிக்கு இது உதவியது.

மேலும் கால்நடை வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்பட்ட கோழிவளர்ப்புப் பயிற்சிப் பாசறையிலும் கலந்து கொண்டு நானும் கோழி வளர்ப்புச் சுயதொழிலில் ஈடுபட்டேன்.

எமது கிராமம் நெருக்கடியான சூழலாக இருந்தபடியாலும், எனக்கு நேரமின்மை, ஆண் உதவி இல்லாதபடியாலும், கோழிவளர்ப்பதிலும் நினைத்தளவுக்கு வெற்றிகிடைக்கவில்லை.

இதனால், இந்தத் தொழிலைத் தொடர முடியாமல் கைவிட்டுவிட்டேன்.

எல்லோரும் அரசவேலையை எதிர்பார்க்க முடியாது. அதனால் ஏதாவது ஒரு சுயதொழிலில் ஈடுபட்டால், இன்னொருவரை நம்பியிருக்க வேண்டியநிலை ஏற்படாது.

எனது இலட்சியம் என்னவென்றால், எனது தொழிலை பலமடங்காக விருத்தி செய்து குறைந்தது 15 பேருக்காவது வேலை வாய்ப்பைப் பெறக்கூடியளவுக்கு உயர்த்த வேண்டும் என்பதேயாகும் என்றார். தானும், முயற்சிக்கவேண்டும், அதேவேளை பிறரையும் ஊக்குவிக்க வேண்டும் என்ற இவரது நோக்கம் பாராட்டுக்குரியதொன்று.

தனது ஓய்வு நேரங்களை உடலை சரியான முறையில் பேணுவதற்கான உடற்பயிற்சியையும் சிறந்த முறையில் கழித்துக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

**க.கனெக்ஸ்**

# தினக்குறிப்பு எழுதுவதன் மூலம் வேலையை இலகுவாக்கலாம்

ஒரு தொழில் புரிஞர் - தான் வேலைசெய்யும் ஒரு நாளில் - என்ன வேலையைச் செய்து முடிக்க வேண்டும் என்பதை தினக்குறிப்பில் எழுதிவைத்துக் கொள்ளலே தினத்தை ஒழுங்கு செய்து கொள்ளல் என்பதாகும். இதனடிப்படையில் தொழில் நிறுவனம் ஒன்றில் தொழில் புரிஞர் அல்லது நிறுவன இயக்குநர் தினக்குறிப்பு எழுதுவது அவசியமானதாகக் காணப்படுகிறது.

தினக்குறிப்பு ஒன்றின் பயன்பாடு பின்வருமாறு அமைந்து காணப்படும். முதலில், தொழில் புரிஞர் அல்லது தினக்குறிப்பு எழுதுநர், தனது வேலை நாளில், ஒரு தினத்தையாவது கூட்டங்கள், சந்திப்புக்கள் இன்றி வைத்திருக்கவேண்டும்.

அவ்வாறு வைத்திருக்கும் நேரத்தில் - தான் செய்யும் வேலையைத் திட்டமிட்டுக் கொள்ளவும் சிந்திப்பதற்கும் தொழில் சம்பந்தமான மேலதிக விடயங்களை வாசித்தல், எழுதுதல் போன்றவற்றுக்கும் என ஒதுக்கிக் கொள்ளல்வேண்டும்.

தினக்குறிப்பை எழுதும்போது இரண்டு வகையில் தினக்குறிப்பை எழுதிக்கொள்ள முடியும்.

தினத்தை ஒழுங்கு செய்தல், வாரத்தை ஒழுங்கு செய்து கொள்ளல் என்பனவே இந்த இரண்டு முறையும் ஆகும்.



தொழில் புரிஞர் வாரத்தை ஒழுங்கு செய்தல் என்பது, ஒவ்வொரு கிழமையின் தொடக்கத்திலும் தனது தினக் குறிப்பேட்டில் எவ்வாறு தொழில் புரிஞர் அந்தக் கிழமை முழுவதையும் பயன்படுத்தப் போகின்றார் என்பதைத் திட்டமிட்டு எழுதிக் கொள்ள வேண்டும் என்பதாகும். தனது செயற்திட்டங்களை மதிப்பீடு செய்து கொள்வதுடன், முன்னுரிமை கொடுக்க வேண்டிய விடயங்கள் எவை எவை எனக் கண்டு கொள்ளல் தொழில் புரிஞருக்கு அவசியமானதொரு பணியாகவுள்ளது.

ஒருவர் ஒரு கிழமையில் ஒரு அரை நாளையாவது, தனது வேலைகளை ஒதுக்கி மற்றவர்களைப் பற்றிச் சிந்திப்பது, மற்றவர்களோடு தொடர்புகளை ஏற்படுத்துவது போன்றவை இன்றி வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒருநாளின் காலையில், மதியத்தில், மாலையில் செய்யவேண்டிய, செய்ய எண்ணியுள்ள வேலைகளுக்கான நேரத்தை, ஒரு வாரத்தை ஒழுங்குபடுத்தும் படிவத்தில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறாக விடயங்களைக் குறித்து ஒரு தொழில்புரிஞர் தினத்துக்குரிய ஒரு வாரத்துக்குரிய வேலைகளை ஒழுங்குபடுத்திக்கொள்ள முடியும். இவ்வாறு ஒழுங்குபடுத்துவதனால் தொழில் புரிஞர் சார்ந்த உற்பத்தி நிறுவனம் மிகுந்த பயனைப் பெறமுடியும்.

தொழில் புரிஞர் தனது ஒரு நாள் கடமையினைக் குறித்து வைத்துக் கொள்ளும் போது ஒவ்வொரு நாளின் புதிய தொடக்கத்திலும் தனது தினக்குறிப்பைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தினக்குறிப்பை பார்ப்பதன் மூலம் தொழில் புரிஞர் தனது வேலை நேரத்தையும் வேலைகளையும் அறிந்து கொள்ள முடியும். ஒரு நாளில் இன்ன வேலையைச் செய்ய வேண்டும் என்று ஒழுங்குபடுத்தியபின் முதல் நாளில் ஏதாவது வேலைகளை மீதமாக வைத்துக் கொண்டிருந்தால் அதனை முதலில் இனங்காணவேண்டும்.

முதல் நாளில் செய்து முடிக்கப்படாத வேலைகளை இனங்கண்டு, நிலுவையாகவுள்ள வேலைகளை முதலில் கண்டறிந்து, பின்வரும் அடிப்படையில் அந்த வேலைகளை வகுத்துக் கொள்ளலாம்.

முதலில் இன்று கட்டாயம் செய்து கொள்ளவேண்டிய வேலைகளை செய்து கொள்ளுதல் என்பது முக்கியமானது. அடுத்து இன்று செய்து முடிக்க வேண்டிய, ஆனால் நாளை வரை செய்து கொள்ளமுடியும் என்பது போன்ற வேலைகளை இனங்கண்டு கொள்ள வேண்டும்.

இந்த இரண்டு விதமான வேலைகளை இனங்கண்ட பின்னர் மிகுதியை பின்னர் செய்து கொள்ளமுடியும்.

இவ்வாறு மூன்று விதமாக முதல் நாள் எஞ்சிய வேலைகளைப் பகுத்து, பின்னர் முதலாவது, இரண்டாவது விடயங்கள் தொடர்பாக விரிவாக திட்டமிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கு அடையாளம் இட்டுக் கொள்வதன்மூலமாக வேலைகளைச் செய்து முடித்தோம் என்ற திருப்தியும் ஏற்பட்டுவிடுகிறது.

ஒரு தொழில் புரிஞர் தினக்குறிப்பை எழுதிக் கொள்வதன்மூலமாக தனது வேலையை திறமையாகவும், ஒழுங்காகவும் மேற்கொள்ள முடியும் என்பது கவனிக்கத்தக்கதொரு விடயமாகும்.

**பூ.நகுலன்.**

# தோல்வியே வெற்றியின் முதற்படி

முதலாவதாக, திறமையைக் கண்டுபிடித்து, வளர்த்துக்கொள்ளுதல். ஒவ்வொருவரிட்மும் ஒவ்வொரு வகையான திறமையுண்டு. சிலர் நன்றாகப் பாடுவார்கள். சிலர் நன்றாக ஓவியம் வரைவார்கள். சிலர் கணக்கில் நிபுணராக இருப்பார்கள். சிலருக்கு கதை, கவிதை எழுத நன்றாக கற்பனை வளம் இருக்கும். இப்படி எத்தனையோ வகையான திறமைகள் ஒவ்வொருவரிடமும் மறைந்து கிடக்கின்றன.

முதலில் எம்மிடமுள்ள திறமை என்ன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். எம்மிடமுள்ள திறமை, சில சமயங்களில் எமக்கே தெரியாமல் இருக்கும். அதைக் கண்டுபிடித்து அந்தத் திறமையை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்யவேண்டும்.



இரண்டாவதாக, விடாமுயற்சி. அதாவது திரும்பத் திரும்ப முயலுதல். திறமையை வளர்த்துக கொண்ட நாங்கள் அதை எப்படி வெளிக்காட்டுவது?

நான் நன்றாகப் பாடுவேன். நான் நன்றாக எழுதுவேன். எனக்குக் கணிதம், விஞ்ஞானம் எல்லாம் தெரியும் என்று சொல்லிக் கொண்டு இருந்தால் மாத்திரம் போதாது. முயற்சி செய்து எம் திறமையை வெளிக் கொண்டு வரவேண்டும். எம் திறமைக்கேற்ற வேலை ஒன்று இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதற்கு முயற்சி செய்யவேண்டும். எந்த வேலைக்கும் ஏராளமான போட்டியுண்டு. முதல் முயற்சியில் தோல்வி அடைந்தால் துவண்டுவிடக்கூடாது! தோல்வி வெற்றியின் முதற்படி.

தோல்வி அடைந்தால் எமக்குத் திறமை இல்லை என்ற முடிவுக்கு வரக்கூடாது. திரும்பத்திரும்ப முயன்றால் எமக்கு வெற்றி நிச்சயம். எமது திறமைக்கேற்ப எமது விடா முயற்சியினால், எமக்கு ஒரு வேலை கிடைத்து பணியில் ஈடுபடுவதாக வைத்துக் கொள்வோம். அந்த வேலையில் படிப்படியாக முன்னேற்றத்தைக் காண கடின உழைப்பு அவசியம். கடின உழைப்புக்கு ஈடு இணை ஏதுமில்லை.

ஒருவன் வாழ்க்கையில் முன்னேறி உயரிய இடத்தில் இருக்கின்றான் என்றால், அதற்குப் பின்னால் அவனது கடின உழைப்பு கட்டாயம் இருக்கும். தினம் உண்டு, உடுத்தி, வீண் கதைகள் கேட்டு வாழ்ந்து மடியும் வாழ்க்கை வாழாது, எமக்கென ஒரு குறிக்கோள், அதை எட்ட-விடாமுயற்சி, கடின உழைப்பு இவைகளை மேற்கொண்டால் வாழ்வில் உன்னத நிலையை அடைய முடியும். *

மறவன்புலவு - க.சச்சிதானந்தன்

ஈழத்தமிழர் மரபு வழித் தாயகப் பிரதேசங்களை சிங்களவர் அபகரித்த வரலாறு



கொழும்பு கடற்தொழில் திணைக்கள ஆய்வு அலுவலராகவும், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளராகவும், 23 நாடுகளில் ஐ.நா உணவு, வேளாண்மை நிறுவன ஆலோசகராகவும் பணிபுரிந்த மறவன்புலவு க.சச்சிதானந்தனின் ஈழத்தமிழர் வரலாறு தொடர்பான கட்டுரை பிரசுரமாகிறது.

# தமிழர் நிலப்பரப்பின் இனத் தொகுப்பு விகிதத்தை மாற்றிய திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் உருவாக்கம்

### மூன்று அரசுகள்.

இலங்கைத் தீவில் அப்பொழுது 3 அரசுகள் அமைந்தன. தென் மேற்குக் கரையோரத்தையும், தெற்குக் கரையோரத்தையும் ஆட்சி செய்தது கோட்டைச சிங்கள அரசு. மத்திய மலைப் பகுதியை ஆட்சி செய்தது கந்த உடரட்டைச் சிங்கள அரசு. கிழக்கு, வடக்கு, வடமேற்குச் சமவெளிகளை ஆட்சி செய்தது தமிழ் ஈழ அரசு.

இந்த நிலை மேல் நாட்டவர், கி.பி 1505ஆம் ஆண்டளவில், இலங்கைத் தீவுக்கு வரும் வரையும், வந்த பின்பு சிலகாலமும் தொடர்ந்தது.

கோட்டையைத் தலைநகராகக் கொண்டது கோட்டைச் சிங்கள அரசு. இது 1605 ஆம் ஆண்டில் போர்த்துகேயரிடம் வீழ்ந்தது. நல்லூரைத் தலைநகராகக் கொண்டது தமிழீழ அரசு. இது 1619 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரிடம் வீழ்ந்தது.

கண்டியைத் தலைநக்ராகக் கொணடது கண்டி உடரட்டை அரசு. இது 1815 ஆம் ஆண்டில் ஆங்கிலேயரிடம் வீழ்ந்தது.

போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் தீவின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிய பின்னர், தமது ஆட்சியைத் தமிழருக்குத் தனியாகவும், சிங்களவருக்குத் தனியாகவும் அமைத்தனர்.

கிரேக்கப் புவியியலாளர் தொலமி தொடக்கம், அண்மையில் வந்து சென்ற ஆங்கிலேயர் வரை, தமது குறிப்புக்களிலும் வரைபடங்களிலும் சிங்கள நிலப் பகுதியைத் தனியாகவும், தமிழர் நிலப் பகுதியைத் தனியாகவும் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

சிங்களவர் தமது ஆட்சிப் பிரிவுகளை 'ரட்டை' என அழைத்தனர். தமிழர் தமது ஆட்சிப் பிரிவுகளை 'வன்னிமை' என அழைத்தனர்.

ராஜரட்டை, மாயரட்டை, உடரட்டை, உருகுணுரட்டை என்பன சிங்கள ஆட்சிப் பிரிவுகள்.

யாழ்ப்பாணம், வன்னி, கொட்டியாறு, பழுகாமம், பாணமை, முத்துசசலாபம் என்பன தமிழர் ஆட்சிப் பிரிவுகள்.

இவை பெரிய பிரிவுகள், இவற்றுள் பல உட்பிரிவுகள். சிங்களப் பகுதியில் கோறளை, தமிழ்ப் பகுதியில் பற்று என இருந்தன. ஊர்கள் சிறு ஆட்சி அலகுகளாயின.

1796 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஆங்கிலேயர், 1815 ஆம் ஆண்டில் கணடி அரசின் வீழ்ச்சிக்குப்பின் இலங்கைத்தீவு முழுவதையும் ஒரே ஆட்சிககுள் கொணர்ந்தனர். இரண்டாக மூன்றாகப்பிரிந்திருந்த ஆட்சி ஒன்றாகி ஒற்றையாட்சியாகியது 1815 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தான்.

இந்த ஒற்றையாட்சிக்குச் சட்ட வடிவம் 1833 அக்டோபர் 1 ஆம் திகதி வந்தது. கோல்புறூக் - கமரோன் ஆட்சிச் சீரதிருத்தங்களுக்கு அமைய, தீவு முழுவதும் ஒரே ஆட்சியில் ஐந்து மாகாணங்களாயிற்று.

### ஐந்து மாகாணங்கள்

வடமாகாணம், நுவரகலவியையும் உள்ளடக்கி அமைந்தது. அநுராதபுரமும, யாழ்ப்பாணமும், வவுனியாவும், மன்னாரும் இம்மாகாணத்துக்குள் இருந்தன (தலைநகர் - யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணத்துள் தம்பன் கடவை, விந்தனை, கொட்டியாறு, பழுகாமம், பாணமை யாவும் தமிழ்ப் பகுதிகளாக உள்ளடக்கப் பெற்றன. திருகோணமலை, மூதூர், மட்டக்களப்பு வேடரின் - விந்தனை, உகர்தை, குமணை, யாலை, யாவும் இந்த மாகாணத்துடனிருந்தன. (தலைநகர் - மட்டக்களப்பு)

மேல் மாகாணம்- கற்பிட்டி, புதத ளம், சிலாபம், நீர்கொழும்பு, கோட்டை, பாணந்துறை, களுத்துறை, என நீணடும், குருநாகலை வரை அகன்றும் இருந்தது. (தலைநகர் - கொழும்பு)

தென் மாகாணம் - காலி, தங்காலை, மாத்தறை, அம்பாந்தோட்டை என நீண்டும் இரத்தினபுரி வரை அகன்றும் இருந்தது. (தலைநகர் - காலி)

மத்திய மாகாணம் - கண்டி, உடநு வரை, ஊவா ஆகிய மலைப்பகுதிகளைக் கொண்டிருந்தது. (தலைநகர் - கண்டி)

இந்த ஐந்து மாகாணங்களுக்கும் ஐந்து அரச அதிபர்களை அமர்த்தினர். கொழும்பில் உள்ள ஆங்கிலேய ஆளுநர் இந்த அரசு அதிபர்களின் தலைவர்.

ஒரு தமிழ் அரசு, இரு சிங்கள அரசுகள், ஆகியன ஒல்லாந்தர் ஆட்சியல், தமிழ் ஆட்சிப் பகுதி, கரையோரச்சிங்கள ஆட்சிப்பகுதி, கண்டிச் சிஙகள அரசு என மாறிப் பின்னர் ஆங்கிலேய ஆட்சியில், ஒரே ஆடசியாக ஐந்து மாகாணங்களாகப் பிரிந்தன.

### ஒன்பது மாகாணங்கள்

1845 ஆம் ஆண்டில் வடமேல் மாகாணம் பிறந்தது. புத்தளம், சிலாபம், ஏழு கோறளைகள் கொண்ட இந்தப் பிரிவுக்குத் தலைநகர் - குருநாகல்.

1873 ஆம் ஆண்டு வடமத்திய மாகாணம் பிறந்தது. நுவரகலவிய மாவட்டம் வடமாகாணத்தில் இருந்தும், தம்பன் கடவை மாவட்டம் கிழககு மாகாணத்தில் இருந்தும் கொடுக்கப் பெற்றன. வடமகாணத்தில் இருந்த தமிழ்ப்பற்று வடமேல் மாகாணத்தில் இணைந்தது (தலைநகர் - அனுராதபுரம்)

1896 ஆம் ஆண்டு ஊவா மாகாணம் பிறந்தது. மத்திய மாகாணதத்ின் வதுளைப் பகுதி, கிழக்கு மாகாணத்தின் விந்தனைப் பகுதி என்பன ஊவாவுடன சேர்ந்தன. (தலைநகர் -வதுளை.)

இவ்வாறாக ஒன்பது மாகாணங்கள், கொழும்பைத் தலைநகராக்கிக் கொண்ட ஒரே ஆளுநர் ஆட்சியில் அமைந்தன. 1833ஆம் ஆண்டு தொடககம் 1896ஆம் ஆண்டு வரை இவ்வரைவுகள் , மீள் வரைவுகள் ஏற்பட்டன.

இந்த மீள்வரைவுகளில், தீவின் இனப்பாகு பாட்டையும் மரபு வழித் தாயகங்களையும் ஆங்கிலேயர் கணககில் கொள்ளவில்லை . முத்துச் சலாப வன்னிமையை முதலில் மேல் மாகாணத்துடன் இணைத்தவர்கள், பின்பு ஏழு கோறளையுடன் சேர்த்து வட மேல் மாகாணமாக்கினர்.

அனுராதபுரப் பகுதி சிங்களவருக்குரியதாயிருந்தும் யாழ்ப்பாணத்தைத் தலைநகராகக் கொண்ட தமிழ்ப பகுதியோடு அதனை இணைத்தனர். கிழக்கு மாகாணத்தில் இருந்து பிரித்து வடமதத்திக்கு மாற்றப்பட்டது. அவ்வாறே வடமாகாணத்தின் தமிழ்ப்பற்று வடமேல் மாகாணத்துடன் இணைக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தின் விந்தனை வன்னிமை பின்னர் ஊவா மாகாணத்துடன் சேர்ந்தது.

இந்த ஒன்பது மாகாணங்களிலும 20 மாவட்டங்கள் அமைந்திருந்தன.

### 25 மாவட்டங்கள்

1955ஆம் ஆண்டில் இந்த எல்லைகள் பாரிய அளவில் மாற்றம் பெற்றன. விடுலை பெற்ற ஒரு நாட்டின் வளர்ச்சிக்கேற்றவாறு ஆட்சி எல்லைகளை அமைக்க வேண்டும் என்ற கொள்கை மீள் வரைவுக்கு அடிப்படை.

10,440 சதுர கி.மீற்றர் பரப்பளவுள்ள நுவரகல கிழக்கு மாகாணம் 9,931 சதுர கி.மீற்றர் (-509) பரப்பளவாய்ச் சுருங்கியது.

10,352 சதுர கி.மீற்றர் பரப்பளவுளள வடமத்திய மாகாணம் 10,709 சதுர கி.மீ (+356) பரப்பளவாய் விரிநதது.

8,160 சதுர கி.மீற்றர் பரப்பளவுள்ள ஊவா மகாணம் 8,477 சதுர கி.மீற்றர் (+318) பரப்பளவாக விரிந்தது.

சிலாபம் மாவட்டம் மறைந்து அநுராதபுர, பொலநறுவை மாவட்டங்கள் பிறந்தன.

1959ஆம் ஆண்டில் மொனறாகலை மாவட்டம் 1961ஆம் ஆண்டில அம்பாறை மாவட்டம், 1978ஆம் ஆண்டு கம்பஹா, முல்லைத்தீவு, 1984ஆம் ஆண்டு கிளிநொச்சி ஆகிய ஐந்து மாவட்டங்கள் தோன்றின.

மாவட்ட எல்லைகள் மீள் வரைவு மட்டுமல்ல ஆட்சி வட்ட எல்லைகளும் மீளவரையப் பெற்றன. அவை பல முறை நிகழ்ந்தன.

### நிலப்பிரிவு, இனத்தொகுப்பு

தீவின் மொத்த நிலப்பரப்பு 65,525 சதுர கீ.மீற்றர். அதில் 71% நிலம் சிங்களவர் மரபுவழித் தாயகம், 29% நிலம் தமிழர் மரபுவழித் தாயகம் (1901)

தீவின் மொத்தக் கடற்கரை நீளம். 1,770 கி.மீ. இதில் 35% கடற்கரை சிங்கள நிலப்பகுதியை ஒட்டியும், 65% கடற்கரை தமிழர் நிலப் பகுதியை ஒட்டியும் உள்ளது. (1901)

தீவின் மொத்த மக்கள் தொகை (1995) ஏறத்தாழ 180 லட்சமாகும்.

சிங்களவர் 74% தமிழர், 25% ஏனையவர் 1% என்ற மொழிவழி இனத்தொகுப்புடைய தீவு இலங்கை (1981) 68.5% பௌத்தர் 16% இந்து, 7.9% கிறிஸ்தவர, 7.6% முஸ்லீம் என்ற மதத் தொகுப்பும் அங்கு உண்டு (1981)

வளப்பமான, மழை வீழ்ச்சி அதிகமான, மலைப்பாங்கான, ஆறுகளும், குளங்களும், மிகுந்த நிலப்பகுதியே சிஙகள மரபு வழித் தாயகத்துக்கு உரியது. தேயிலை, றப்பர், காப்பி, தென்னை, ஆகிய தோட்டப் பயிர்களுக்குரிய நிலங்கள் இங்கு உள்ளன.

வாடைக் காற்றுடன் வரும் மழையை மட்டும் நம்பி, வானம் பாரத்த சமவெளிகளைக் கொண்ட காய்ந்த நிலங்கள் தமிழர் மரபுவழித் தாயகத்தில் உள்ளன. ஆறுகள், குளங்கள், குறைவு எனினும் தீவின் 65% கடற்கரையின் வளப்பம் தமிழர்களின் மரபு வழிச் சொத்தாகும்.

### முத்துச் சலாபம்

முத்துப் சலாபம் வன்னிமை, மனனருக்குத் தெற்கே சிலாபத்துறையில் தொடங்கி, முன்னேஸ்வரம் கோவிலருகிலுள்ள சிலாபம் வரை நீண்ட கடற்கரையை ஒட்டிய நிலப்பகுதி, கீழ் எல்லை வாய்க்கால் ஆறு.

இந்த நிலப்பகுதி முழுவதும் தமிழ்ச்சிற்றூர்கள் யாவரும் பரதவர்கள். தமிழகத்து முத்துக் குளிப்புச் சமுதாயத்துடன் கொணடும், கொடுத்தும் உறவாடிய மக்கள்.

முன்பும், தமிழக மன்னர்கள் பலர் இந்தக் கரையோரங்களில் (முகாமிட்டு முத்துக் குளிப்பு நடத்தினர். யாழ்ப்பாணம், மன்னார், புத்தளத்தில் முகாமிட்டு முததுக் குளிப்பு நடாத்தியதை அரபுப்பயணி இபன்பட்டுடா (1345) தமது பயண நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வன்னிமை, ஏழு கோறளையுடன் சேர்ந்து வடமேல் மாகாணமாக்கப் பெற்றுச் சிங்கள மரபு வழித்தாயகத்துடன் இணைக்கப் பெற்றுள்ளது.

1833ஆம் ஆண்டில் வடமாகா ணததுடன் இருந்த தமிழ்ப்பற்று 1873ஆம் ஆண்டு வடமேல் மாகாணத்துடன் இணைக்கப் பெற்றது. அருவி ஆற்றின் தென்கரையில் இருந்து வாய்க்கால் ஆற்றின் வட கரை வரையும் நீண்ட முததுச்சலாப வன்னிமையின் பெரும பகுதி சிங்கள நிலப்பகுதியுடன் இணைந்துள்ளது.

### விந்தனை

1833 கோல்புறுக் - கமரோன் ஆணைக்குழு வெளியிட்ட படத்தில் விந்தனை வன்னிமையும், பாணமை வன்னிமையும், பட்டிப்பளை ஆற்றுச் சமவெளி முழுவதும் கிழக்கு மாகாணத்துள் அமைந்திருந்தன. தமிழர் நிலப்பகுதியின் மேற்கெல்லையாக மாவலி கங்கையின் கிழக்குக் கிளை ஆறு காட்டப் பெற்றது.

பின்னர் மீள் வரையப்பட்ட எல்லைகள, கிழக்கு மாகாணத்தின் நிலப்பகுதியை ஊவா மாகாணத்திடமும், வடமத்திய மாகாணத்திடமும் தாரை வார்த்துவிடடன. பட்டிப்பளை ஆற்றை ஒட்டிய பகுதி மட்டும் மாத்தளை மாவட்ட எல்லையைத் தொடுமளவுக்கு அகன்றுள்ளது.விந்தனைப் பகுதியை ஊவாவுடன் சேரத்ததில் உள்ள முரணபாட்டை 1976 ஆம் ஆண்டுத் தேர்தல் மாவட்ட வரையறை ஆணைக்குழு சுட்டிக்காட்டியது. 'தேர்தல் மாவட்ட வரையறையின் நோக்கங்களுக்கு, விந்தனைப் பற்றைக் கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியாகவன்றி, வேறுவிதமாகக் கருதமுடியாது' என அந்த அறிக்கை வரிகள் கூறும. *(தொடரும்)*

## சிந்திக்க:...

காசி ஆனந்தன்



காசி ஆனந்தன்

# காக்கையின் கூட்டில் பிறந்தாலும் குயில் காக்கை மொழி பேசுவதில்லை

**த**மிழ்நாடு அழுகிப் போய்க் கிடக்கிறது. புலம்பெயர்ந்த தமிழர்களே! தமிழ் நாட்டின் ஊடகங்களை தலையில் வைத்துக் கூத்தாடாதீர்கள். இங்கே தொலைக்காட்சிக்கு 'சண்' என்று பெயர் வைக்கிறான. செய்தி இதழுக்கு 'விசிட்டர்' என்று பெயர் வைக்கிறான். திரைப் படத்திற்கு 'ஜெண்டில்மேன்' என்று பெயர் வைக்கிறான். "முஸ்தப்பா, முஸ்தப்பா **Dont Worry** முஸ்தப்பா" என்று திரைப்படத்தில் ஆங்கிலம் கலந்து பாடித் தமிழ்த் தாய் முகத்தில் கரி பூசுகிறான். தசை வெறிக் காட்சிகளினால் திரைப் படங்களை நிறைத்து தமிழ்ப் பண்பாட்டுக்கு சாவு மணி அடிக்கிறான். புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் அடையாளத்தை தொலைத்துக் காட்டுவதில் அவர்கள் வாழும் பிறநாடுகளில் சுற்றாடல் மட்டுமல்ல, தமிழ் நாட்டில் இருந்து வரும் ஊடகங்களும் பெரும் பங்கினை வகிப்பதை நாம் புரிதல் வேண்டும்.

தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் ஆங்கிலப் பெயர் கொண்ட தமிழச் செய்தி இதழ்களையும், திரைப் படங்களையும் புறந்தள்ளுங்கள். உங்கள் பணத்தைக் கொண்டே உங்களை ஒழித்துக்கட்டும் ஊடகங்கள் இவை. பணம் கொடுத்தும் தமிழ் நாட்டில் இருந்து நீங்கள் வாங்கும் பச்சையும் கொச்சையுமான படச் சுருள்கள், படச்சுருள்கள் அல்ல பாம்புச் சுருள்கள் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழர் நடத்துகின்ற வானொலிகளும், தொலைக்காட்சிகளும் பொழுது போக்கு ஊடகங்களாக இருந்தாலும் தமிழ்மொழி காப்பதிலும், அதனை வளர்ப்பதிலும், பயிற்றுவித்தலிலும், அவைபெரும் பங்காற்ற முடியும் என்பதை அவ்வத்துறை சார்ந்தோர் உணரவேண்டும். ஆங்கிலத்தையும், ஆரியத்தையும் அவற்றுக்கு அப்பாலுள்ள அயலவன் மொழிச் சொற்களைப் புகுத்தாமல் உங்கள் சொந்த மொழியில் முடிந்தளவு நடத்துங்கள். பிறமொழியைக் கலப்பது உங்கள் அன்னை மொழிக்கு ஊறு செய்வதாக நீங்கள் எண்ணவில்லையா?

"அடையாளத்தைக் காப்பது" என்பதில் தாய்மொழி காத்தலே அடையாளத்தின் ஆணிவேர் காத்தலாகும். "என் பேரன் பிரான்சில் பிறந்தான், அவன் பிரெஞ்சு மொழி தான் பேசுவான்" என்று பெருமைப் படுகிறார்கள். காக்கையின் கூட்டில் பிறந்தாலும் குயில், காக்கை மொழி பேசுவதில்லை என்பதைக் கூட இவர்கள் மறந்து போனார்கள். தங்கள் பிள்ளைகளோடும் வீட்டுக்கு வரும் உறவினர்களோடும் புலம் பெயர்ந்த தமிழர் தமிழிலேயே பேச வேண்டும்.

தமிழர் பண்பாட்டை காப்பாற்றிக் கொள்வதும் புலம்பெயாந்த தமிழரது தலையாய கடமைகளில் ஒன்றாகும். கனடாத் தமிழ் வாரஇதழ் ஒனறில் புலம்பெயர்ந்த தமிழீழப் பிள்ளையொன்றின் பிறந்தநாள் விபரம் ஒன்று இவ்வாறு பதிவாகியிருந்தது. பிறந்தநாள் கொண்டாடுபவர் டியூலன், இவரை லிஷோன், நிலுஷா, மிளிர்ஷா. சஷாரல், மெரல் ஆகியோா் வாழ்த்துகிறார்கள். என்ன பெயர்கள் இவை. தமிழ்க் குழந்தைகளுக்கு இப்படியெலலாம் பெயர் வைப்பது சரிதானா என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

அண்மையில் மொன்றியாவில் ஒரு குழந்தைக்கு சியான் (**Chien**) என்று பெயர் வைத்திருக்கிறார்கள். நாகரிகமான பெயர் என்பது அவர்களுடைய நினைப்பு. குழந்தை வளர்ந்து பள்ளிக்கூடம் சென்ற போது, கூடப் படித்த மாணவர்கள் அந்தப்பிள்ளையைக் கிண்டல் செய்த பொழுதுதான் உண்மை தெரிய வந்தது. பிரெஞ்சு மொழியில் சியான் என்றால் நாயாம். புலம்பெயர்ந்த தமிழர் தங்கள் பிள்ளைகளுக்கு தூய தமிழ்ப் பெயர்களையே சூட்ட வேண்டும் சேரன், சோழன், மாறன், வளவன், வள்ளுவன், இனியாள், நங்கை, உமையாள், அன்பரசி, அறிவரசி என்று வையுங்கள். இந்தப் பெயர்களுக்கு ஒரு பொருளிருக்கும். ஒரு வேளை ஈழம் திரும்ப வேண்டிவந்தால் மதிப்பும் இருக்கும் என்பதை மறந்து விடாதீர்கள்.

உங்கள் உற்றாரது, உறவினரது, நண்பரது சின்னஞ்சிறார்கள் உணண உணவின்றி, உடுக்க உடையின்றி, உறங்க உறைவிடமின்றி பிணிக்கு மருந்தின்றிப் படிக்கப் பள்ளியின்றி உருக்குலைந்து போவதை ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். இந்த நிலையில் பல்லாயிரம் வெளளி செலவிடடு பிறந்த நாள் கொண்டாட்டங்களும் பூப்பு நீராட்டு விழாக்களும் நடத்த வேண்டுமா? இவற்றை நிறுத்தி இதனால் மீதப்படும் பணத்தை ஆதரவற்ற ஈழக் குழந்தைகளுக்கு அனுப்பிவையுங்கள். வருங்காலம் உங்களை வாழ்த்தும்.

புலம் பெயர்ந்த தமிழர்களே! தமிழீழ விடுதலைப் போருக்கும், அந்தப் போரை முன்னெடுத்துச் செல்லும் ஒப்பற்ற தலைமைக்கும் என்றென்றும் துணை இருப்போம் என புயலின் மீதும், நெருப்பின் மீதும் ஆணை எடுங்கள்.

சேரனாய், சோழனாய், பாண்டியனாய் தம்மிடையே மோதிச் சீரழிந்த பண்பாட்டையும், வரலாற்றையும் மாறறி "குழுக்கள்" கட்டுதலை நிறுத்தி, புலம்பெயர்ந்த தமிழர்களே! சேர்ந்து செயலாற்றுங்கள். தமிழ் மொழி, தமிழ்க்கலை, தமிழ்ப் பண்பாடு காத்து தமிழீழத் தேசிய இனமாய் நிமிர்வோடு விடுதலை பெற்றுத் தமிழீழம் திரும்புவோம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com


சிந்தனைக்கு

*மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா ஏதம் பலவும் தரும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அழுத்தங்களுக்குள் ஜனாதிபதி.... அல்லாடும் நிலையில் சமாதானம்!

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை மேற்கொள்ள ஜனாதிபதி சந்திரிகா இணக்கம் தெரிவித்திருப்பதாக, சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகளின் ஏற்பாட்டாளரான நோர்வே அரச வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளமையானது, சமாதான ஆர்வலர்களுக்கு நம்பிக்கை தரும் விடயமாக இருந்தபோதிலும், இதுகுறித்து அவர் உண்மையில் எத்தகைய மனோநிலையில் இவ்வாறானதொரு தீர்வுக்கு வந்துள்ளார் என்பதை உறுதிபடக் கூறமுடியாததொன்றாகவே உள்ளது.

அண்மைக் காலம் வரை இடைக்கால நிர்வாகம் தொடர்பான பேச்சுவார்த்தைகளுடன் இறுதித்தீர்வு தொடர்பான பேச்சுக்களையும் - ஏககாலத்தில் சமாந்தரமாக மேற்கொள்ள வேண்டுமென்ற - நியாயமும் சாத்தியமுமற்ற நிலைப்பாடொன்றை வலியுறுத்தி, அதில் விடாப்பிடியாக இருந்த ஜனாதிபதி, முதலில் இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேச திடீரென இணக்கம் தெரிவித்துள்ளமையானது, பல்வேறு வினாக்களை மனதில் எழுப்பவைத்துள்ளது.

சமாதான முயற்சிகள் தொடர்பான ஜனாதிபதியின் அணுகுமுறையானது 1990 களின் மத்தியில் அவர் மிகப் பெரும் பெரும்பான்மைப் பலத்துடனும் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கான மக்களின் ஆணையுடனும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது முதல் இன்றுவரை ஒருபோதுமே நேர்மை மற்றும் உறுதியான மனோவிருப்பைக் கொண்டதாக இருந்தது கிடையாது.

அப்போது அவர் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தபோது அவரை ஒரு சமாதானத் தேவதையாகவே அனைத்து மக்களும் பார்த்தனர். அதற்கு முன்னர் 17 வருட ஜே.ஆர். ஜெயவர்த்தன மற்றும் பிரேமதாஸ ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற தமிழினத்திற்கெதிரான இனவன்முறை, கொடும் யுத்தம் ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட தாக்கங்களால் உண்டான அதிருப்தியானது மக்கள் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரானதொரு வெறுப்பலையை ஏற்படுத்த, சமாதானத்தை உறுதி செய்வதற்கான ஆணையை தென் பகுதி மக்கள் ஒருமித்து சந்திரிகாவுக்கு வழங்கினர்.

ஆனாலும், அவர் பதவியேற்றவுடன் சமாதான நடவடிக்கைகளில் தீவிரமாகச் செயற்படுபவர் போல் காட்டிக்கொண்டபோதிலும், சில மாதங்களில் அவரின் பண்டாரநாயக்க பரம்பரை குணாம்சம் மெல்ல மெல்ல வெளிப்படத் தொடங்கியதை அடுத்து தமிழ்மக்களும் விடுதலைப் புலிகளும் விழிப்படைந்து கொண்டனர்.

சமாதானம் என்ற பெயரில் மற்றொரு வகையிலான அரசியல் பொறிவலையை சந்திரிகா விரிக்கத் தொடங்குகிறார் என்ற விடயம் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசையில் இருந்து விலகவைத்தது. ஜனாதிபதி சந்திரிகா தனது ஏமாற்றுத் தந்திரோபாயம் தோல்வியடைந்ததை அடுத்து ஜே.ஆர்.ஜெயவர்த்தன மற்றும் பிரேமதாஸ கால நெருக்கடி நிலைக்கு நாட்டை இழுத்துச்செல்ல சமாதானத்துக்கான யுத்தம் என்ற வினோதமான கோட்பாட்டை நடைமுறைப் படுத்தியதன் மூலம் முழு நாட்டையும், நாட்டின் முழு வளத்தையும் யுத்தத்தின் ஆக்கிரமிப்பிற்குள் கொண்டுவந்த வரலாற்றுத் தவறுக்குப் பொறுப்பானவரானார்.

உண்மையில் அவருக்கு சமாதானத்தின் மீது பற்றுறுதியும், தமிழ்மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் மனோவிருப்பும், நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதில் ஆத்மார்த்த ஈடுபாடும் இருந்திருப்பின் 1995 இலேயே மக்களின் பேராதரவுடன் நியாயமானதொரு அரசியற்தீர்வை இனப்பிரச்சினைக்கு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை அவரால் வெற்றிகரமாக முன்னெடுத்திருக்க முடியும்.

அப்படியான நியாய சிந்தனையோ, கண்ணியமான அரசியற்கோட்பாடோ ஜனாதிபதி சந்திரிகாவிடம் அன்றும் இருக்கவில்லை இன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

இன்று சூழ்நிலை வெகுவாக மாறிவிட்டது.

இரண்டாண்டுகளின் முன், தென்பகுதி மக்களிடம் காணப்பட்ட சமாதான விருப்பை, இந்தக் காலப்பகுதிக்குள் ஜனாதிபதியும் அவரது சகாக்களும் ரணில் ஆட்சிக்கால சமாதான முன்னெடுப்புக்களை கடுமையான முறையில் விமர்சித்து, சிங்கள மக்களிடையே அதற்கு எதிரான மனப்போக்கினை அற்புதமான ஆட்சி அதிகார வெறியுடன் வளர்த்து அழித்துவிட்டு, இப்போது புற அழுத்தங்களாலும், நிதியுதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தாலும் சமாதானத்தை முன்னெடுக்க முனைவது, மற்றொரு ஏமாற்றுத் தந்திர முனைப்புடன் கூடிய செயற்பாடாக தமிழ்மக்கள் கருதுவதில் உண்மையும், நியாயமும் இருக்கவே செய்கிறது.

அடிக்கடி கொள்கைகளையும், கோட்பாடுகளையும் தனது அரசியல் அபிலாஷைகளுக்கு ஏற்ப மாற்றிக்கொண்டு, சந்தர்ப்பவாதியாக நடந்துகொள்ளும் ஜனாதிபதியின் தீர்மானங்கள் உறுதியாக இருக்குமெனக் கூறுவதற்கில்லை.

ஆனால், அமெரிக்கா உட்பட பல சர்வதேச நாடுகள் விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகம் தொடர்பான கோரிக்கையை நியாயமான வேண்டுகோள் என ஏற்றுக்கொண்டு, கருத்துக்கூறத் தொடங்கியுள்ள இன்றைய சூழலில், ஜனாதிபதியும் அதனைப் பற்றிக் கூறவேண்டிய நிலை, அவரின் மனவிருப்பத்திற்கு மாறாகவே ஏற்பட்டுள்ளது தவிர்க்க முடியாத அம்சமேயாகும்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த புதிய அறிவிப்பு சரித்திரத்தை மாற்றுமா?

அவரின் சூழ்நிலைக் கைதிக்கோலம் - அதற்கான மனோதிடம் அவரிடம் இல்லையென்பதையே வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

## நாடும் நடப்பும்




# வாகன இலக்கத் தகடுகளை மாற்றிப் பயன்படுத்திய பிக்கு

(கொழும்பு)

ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்ன தேரர் - இலக்கத் தகடு மாற்றிப் பயன்படுத்திய வாகனத்தை மாத்தறைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஹெல உறுமயவினரால் நடத்தப்படும் பாத யாத்திரை நேற்று முன்தினம் மாத்தறையிலுள்ள சனத் ஜெயசூர்ய மைதானத்தை வந்தடைந்தபோது, அத்துரலிய ரத்னதேரர் 252 - 6648 இலக்கமுடைய வாகனத்தில் அங்கு வந்து, நடைபெற்ற நிகழ்வுகளில் பங்குபற்றினார்.

ஆனால், இந்த வாகனத்துக்குரிய இலக்கம் 252-6649 ஆகும். அத்துடன், தவணை அடிப்படையில் எடுக்கப்பட்ட இந்த வாகனத்துக்குரிய பணமும் முழுமையாகச் செலுத்தப்படவில்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

252 - 6648 இலக்கமுடைய வாகனத்தை முன்னர் மாத்தறையிலுள்ள வர்த்தகர் ஒருவர் பயன்படுத்தி வந்ததாகவும், இதற்குத் தவணைப்பணம் செலுத்தப்படவில்லையெனவும், இந்த வாகனத்தைக் கைப்பற்றுமாறு தனியார் கம்பனி பொலிஸாரிடம் கேட்டதாகவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக அதிகாரிகள் மாத்தறைப் பொலிஸாருக்கு முறையிட்டதையடுத்து, மாத்தறைப் பொலிஸார் டொல்பின் ரக மாதிரி வானைக் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கைக்கு வரமுயன்ற 13 பேரை தமிழக பொலிஸார் கைது செய்தனர்

இராமேஸ்வரம் பொன்னகரிலுள்ள வீடொன்றில் பதுங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் பதின்மூன்றுபேரை, தமிழகப் பொலிஸார் கைது செய்தனர்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலை அடுத்து, தாயகம் திரும்புவதற்காக குறிப்பிட்ட வீட்டில் - இலங்கை அகதிகள் பதுங்கியிருப்பதாக நகர பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து, குறிப்பிட்ட வீட்டுக்குச் சென்ற பொலிஸார் - அங்கு பதுங்கியிருந்த 7 ஆண்கள், 4 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 13 பேரையும் கைது செய்து, அவர்கள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அகதிகளாக வந்து தங்கியிருந்த பழனி வேலூர் முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

## உலக உணவுத்திட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக நேற்று கலந்துரையாடப்பட்டது

உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்துகின்ற செயற்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் உலக உணவுத்திட்ட கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் றபன் கலந்துகொண்டார். இவர்களுடன் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் செயற்படுத்தப்படவேண்டிய செயற்பாடுகளுக்கு ஆயிரம் மெற்றிக்தொண் உணவு தேவைப்படுகின்றபோதும், இந்த வருடம் 500 மெற்றிக்தொன் உணவு தருவதற்கு உலக உணவுத்திட்ட இணைப்பாளருடன் இணக்கம் காணப்பட்டது.

இந்த 500 மெற்றிக்தொன் உணவுக்கான செயற்திட்டங்கள் ஒக்ரோபர் மாதமளவில் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தமிழ் கல்வி சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவின் வருடாந்த தமிழ் கல்விச் சஞ்சிகைக்கு, பாடசாலை மட்டத்தில் இருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுவதாக கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவு அறிவித்துள்ளது.

கடந்தவருடம் முதல் கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவினால் கூர்மதி என்ற பெயரில் சஞ்சிகை ஒன்று வெளியிடப்படுகிறது.

இதில் இந்த முறை தமது ஆக்கங்களை இடம்பெறச் செய்ய விரும்பும் பாடசாலை மாணவர்கள் அதிபரின் ஊடாகத் தமது ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இருந்தும் இந்த சஞ்சிகைக்கு ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஆக்கங்கள தமிழ்மொழி, தமிழ் இலக்கியம். கல்வி, இசை, நடனம், நாடகம் மற்றும் பயனுள்ள கல்வித்துறை சார்ந்த தகவல்கள் போன்றவற்றை மையப்படுத்தியதாக இருக்கவேண்டும் என - கல்வி அமைச்சின் தமிழ் மொழிக் கல்விப் பணிப்பாளர் என்.நடராஜா அறிவித்துள்ளார்.

ஆக்கங்கள் கல்விப்பணிப்பாளர், தமிழ் மொழிப்பிரிவு, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல. என்ற முகவரிக்கு எதிர்வரும் ஜுலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (01)

## வீதியோரத்தில் பொருட்கள் விற்போர்மீது நடவடிக்கை

உள்ளூராட்சி சபைகளிடம் அனுமதி பெறாது அமைக்கப்பட்டுள்ள சிறுவியாபார நிறுவன உரிமையாளர்கள் மற்றும் வியாபார நிறுவனங்களுக்கு முன்பாக வீதியோரத்தில் பொருட்கள் வைத்து விற்பனை செய்யும் கடை உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த மாதம் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, பிரதேச சபைகளின் அனுமதி பெறாது சிறு வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அனுமதி பெற்ற விற்பனை நிலைய உரிமையாளரும் வீதியோரத்தில் பொருட்களை காட்சிக்கு வைப்பதாகவும், இதனால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதோடு, வீதி விபத்துக்களும் இடம்பெறுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இவை தொடர்பான சட்ட நடவடிக்கைகளை இருவாரத்துக்குள் மேற்கொண்டு, முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு யாழ். செயலகம் பிரதேச சபைச் செயலாளர்களைக் கேட்டுக்கொண்டது.

## கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் பூட்டு உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது.

கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் பூட்டு உடைக்கப்பட்டு சிறுதொகைப் பணமும், சில பொருட்களும் திருடப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய சிறு குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் பாடசாலையைப் பூட்டிவிட்டுச் சென்று மறுநாள் காலையில் பாடசாலையைத் திறந்தபோது, பூட்டுக்கள் உடைக்கப்பட்டு அலுவலகத்தில் இருந்த பொருட்கள் சிந்தப்பட்டு இருப்பதைக் காணமுடிந்தது.

இதன்போது சிறுதொகைப்பணமும் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# மக்களின் நம்பிக்கையை வென்ற வங்கியாக இயங்கும் மக்கள் வங்கி

ஏறத்தாழ நான்கு தசாப்த காலத்துக்கும் மேலாக இலங்கை மக்களின் நம்பிக்கையை உச்ச மட்டத்தில் வென்றெடுத்த வங்கி யாக இந்த நாட்டின் முன்னோடி வங்கியாக மக்கள் வங்கியை அறி முகப்படுத்தலாம். 1961ஆம் ஆண் டில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மக் கள் வங்கியானது- இதுவரை கட ந்து வந்த பாதையில் மக்களுக் கான வங்கி என்ற அம்சத்தைப் பெரிதும் உறுதிப்படுத்தியவாறே இந்த நாட்டு மக்களின் பொருளா தாரப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தது. நாடுதழுவிய ரீதியில் 325 கிளை களைக் கொண்ட மக்கள் வங்கி யின் கீழ் 188 அடகு, சேமிப்பு நிலை யங்களும் 81 சேவைக்கரும பீடங் களும் இயங்கி வருகின்றன.

மக்களின் தேவைகளுக்கு ஏற்ற வாறு பரஸ்பரம் நட்புறவான வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்வ தில் மக்கள் வங்கி என்றும் அர்ப் பணிப்புடன் செயற்படுகின்றது. இதற் காகச் சமூகத்தின் சகல வயதுப் பிரிவினரதும் தேவைகளை நன்கு புரிந்துகொண்டு, பல்வேறு விதமான சேமிப்புத் திட்டங்களையும், கடன் வழங்கல் திட்டங்களையும் அறிமு கப்படுத்தியுள்ளது. சின்னஞ் சிறார் களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இசுரு உதான கணக்கின்மூலம் கவர்ச்சிகரமான வட்டி வீதத்தையும் ஆயுள் மற்றும் மருத்துவக் காப்பு றுதியையும் மக்கள் வங்கி வழங்கு கின்றது.

பிள்ளைக்கு 5 வயது பூர்த்தி அடைந்ததும், இன்னும் பல சிறப் பான நன்மைகளையும் பிள்ளைக்கு உரித்தாக்கியவாறு இசுரு உதான கணக்கானதுதானாகவே சிசு உதான கணக்குக்கு மாற்றப்படுகின்றது. ஆறு வயது தொடக்கம் உயர் கல்விபெறும் வயது வரையில் சிசு உதான கணக்கைப் பிள்ளைகளுக் காக மக்கள் வங்கி செயற்படுத் தும். பாடசாலை மட்டக்கணக்கு களில் அதிகூடுதலான நன்மை களைப் பெற்றுத்தரும் ஒரு சேமிப்புத் திட்டமாக இதனை அறிமுகப்படு த்த முடியும்.




ஜெயசிறி தங்கநாணயம் பெற்றவருடன் வங்கி உத்தியோ கத்தர்கள்

நூறு ரூபா போன்ற ஒரு சிறிய தொகையைக்கொண்டு ஆரம்பிக் கப்படக்கூடிய இந்தக் கணக்கின் மூலம் புலமைப்பரிசில் கொடுப்பன வுகளும், க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர் தரம் ஆகிய பரீட் சையில் சகல பாடங்களிலும் அதி திறமைச் சித்திபெறுபவர்களுக்கான விசேட கொடுப்பனவு ஒன்றும், பாது காப்பும் வழங்கப்படுகின்றது.

பாடசாலைகளில் இயங்கும் சிசு உதான சேமிப்புப் பிரிவில் அல்லது அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளைக் குச்சென்று, ஒரு கணக்கை ஆரம் பிக்க முடியும். இதிலுள்ள சிறப் பம்சம் யாதெனில், இந்த வகைக் கணக்கைப் பாடசாலை மாணவ மணி களே பராமரித்து வரக்கூடியதாக உள்ளமையாகும். இந்த முறையில் பாடசாலைகளில் மாணவ, மணிகள் சேமிப்புப் பழக்கம் குறித் தும், வங்கி முறைமை குறித்துச் சிறந்த புரிந்துணர்வைப்பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்புக்கிடைக் கின்றது. சிசு உதான கணக்கை அவர்கள் 18 வயதாகும் போது "YES" (Young Executive Saving Ac- count) கணக்குக்கு மாற்ற முடியும். YES கணக்கின்மூலம் ரூபா 25 ஆயிரம் அல்லது அதனை விடக் கூடுதலான சேமிப்புத் தொகைக ளுக்காக நூற்றுக்கு 1 சதவீதம் என்ற அடிப்படையில் போனஸ் வட்டி வீதமொன்றையும் ரூ. 1000 இக்கும் அதிகமான சேமிழ்ப்புத் தொகை களுக்கு வட்டித் தொகையொன்றை யும் இலவச தன்னியக்க ரெல்லர் இயந்திர அட்டை (Automatic teller Machine Card) கடன் அட்டை (Cre dit Card) ரூபா 1 இலட்சம் வரையி லான காப்புறுதி உட்பட பல விசேட நன்மைகளும் வழங்கப்ப டுகின்றன. வீடுகள், வாகனங்கள் உயர்கல்வி திருமண வைபவங்கள் ஆகிய தேவைகளுக்காக அந்தக் கடன்களைப் பெறலாம்.

முதல் தடவையாக மக்கள் வங்கி பெண்களுக்காக வனிதா வாஸனா எனும் கணக்கை அறிமுகப்படு த்தியுள்ளது. இந்தக் கணக்கின் மூலம் பெண்களின் தேவைகளையும் விட, அதிகமான பல்வேறு நன்மை களையும் கிட்டுகின்றன.

'ஜனஜய' எனும் சேமிப்புத் திட் டம் மக்கள் வங்கியின் சேமிப்புத் திட்டங்களில் மிகவும் பிரசித்தமான தாகும். 18 வயதுக்கு மேற்பட்ட எந்த ஒருவரும் அந்தக் கணக்கை ஆரம்பிக்கமுடியும். குறைந்த பட்சம் ரூ. 2 ஆயிரத்தை இந்தக் கணக் கின் கீழ் வைப்பிலிடமுடியும். ஜன ஜய கணக்கின் மூலம் காப்புறுதித் திட்டம் ஒன்றும், கடனுதவித் திட் டம்மொன்றும் உரித்தாகும். வீட மைப்புக்குள், திருமண விடயங்க ளுக்கும், கல்வி மற்றும் வியாபாரத் தேவைகளுக்கும் கடன் தொகை களைப் பெற்றுக்கொள்ளும் வசதி யும் ஜனஜய சேமிப்புத் திட்டத்தின் கீழ் கிட்டுகின்றது. அத்துடன், முற் றிலும் இலவசமாக மக்கள் வங்கி யின் 'ஸ்மார்ட் கேஷ்' அட்டையொன் றும் சலுகை விலையில் 'பீபள்ஸ் விசா' அட்டையொன்றும் வழங்கப்படு கின்றது.

முதல் தடவையாகச் சிரேஷ்ட பிரஜைகளுக்குப் 'பரிணத' என்ற பெய ரில் ஒரு கணக்கையும் மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. ஏனைய வங்கிக் கணக்குகளை விட அதிகமான வட்டிவீதம் பரி ணத கணக்குகளுக்கு வழங்கப் படுகிறது. ஒரு சிறப்பம்சமாகும். இந்தக் கணக்கில் ரூ.5 ஆயிரத் துக்கும் அதிகமான நிலுவைத் தொகையொன்று காணப்படுமாயின் 1 சதவீதமிகை வட்டி வீதமும் ஓர் இலட்சம் ரூபா பெறுமதி பரிணத நிலையான வைப்புக் கணக்கென்றை (Fixed Diposit Account) பேணி வரு வவராயின் 8 சதவீத விசேட வருடாந்த வட்டி வீதமும் உரித்தா கும். இதற்குப் புறம்பாக இந்தக் கணக்கைப்பேணி வருபவர்க ளுக்காக மருத்துவ ஆலோசனை களைக் பெற்றுக் கொள்வதற்கான இலவச சேவையும் (E - Channel Service) வழங்கப்படும்.

மேலே சொல்லப்பபட்ட ஒவ் வொரு சேமிப்புத் திட்டத்தையும் உள்ளடக்கும் விதத்தில் 'ஜயசிறி' பரிசூதியத் திட்டம் 2000ஆம் ஆண்டு தொடக்கம் அறிமுகப் படுத் தப்பட்டுள்ளது. இலங்கை மக்களி டையே சேமிப்புப் பழக்கத்தை மேம் படுத்துவதே இதன் மூலம் எதிர்ப் பார்க்கப்படுவதாகும். முழுவதும் ரூபா 10,000 உம் நடைமுறைக் கணக்கின் (Current Account) மாதந்த நிலுவை ரூ. 5000ஐவிட அதிகமாக வும் அமைதியுமாமின், தானகவே 'ஜயசிறி பரிசூதிப் போட்டியில் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள். மாதாந்த ஜயசிறி பரிசூதிய சீட்டி ழுப்பின் மூலம் நாடு தழுவிய 325 கிளையிலிருந்து 325 தங்கப் பவுண் வெற்றியாளர்கள் தேர்ந்தெ டுக்கப்பட்டு, மாதாந்தம் அவர்க ளுக்கு 325 தங்கப் பவுண்கள் பரி சாக வழங்கப்படும். இதற்குப் புறம்பாக, மக்கள் வங்கியின் 11 பிராந்தியர்களுக்கும், ஜயசிறழ பரிசுத்திட்டதின் கீழ் முறையே ஒவ்வொரு பிராந்தியதுக்கும் ரூபா 100,000 என்ற அடிப்படையிலும், மாதாந்தத் தொகையாக 11 இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும். ஆண்டிறுதியில் நடை பெறும் மாபெரும் சீட்டிழுப்பின் போது, முதல் பரிசை வென்றெ டுக்கும் அதிஷ்டசாலி - ரூபா 50 லட்சம் பெறுமதியான ஜகுவர் வகை அதிசொகுசு மோட்டார் வாகன மொன்றை அல்லது உடன் காசாக ரூபா 50 இலட்சத்தைப் பெற்றுக் கொள்ளலாம். ஆண்டிறுதியில் இரண்டாவது பரிசுத் தொகையா ரூபா 20 இலட்சமும் மூன்றாவது சுத் தொகையாக ரூபா 10 இலட்ச மும் வழங்கப்படும்.

இந்த அதி விசேட பரிசுகளை வென்றெடுப்பதற்காக தமது நடை முறைக் கணக்குகளில் ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய 03 மாதங்க ளிலும் தொடராக வைப்புத் தொகை களைப் பேணிவரும் அனைவரும் இந்தப் போட்டியில் சேர்த்துக் கொள் ளப்படுவர்.

## நேர்காணல்

நேர்காணல்

# எமது நிறுவனத்தின் குறுகிய கால வளர்ச்சிக்கு விற்பனையாளர்களும் பாவனையாளர்களுமே காரணம்





வவுனியா சாஸ்த்தி கூழாம் குள த்திலுள்ள ஹேமா இண்டஸ்றீஸ் நிறுவன உரிமையாளரான செல்வ ராஜா - சுரேஸை, புலவர் வீதி- நவாலி வடக்கு மானிப்பாயிலுள்ள அவரது கிளை நிறுவனத்தில் சந் தித்தோம். தனது உற்பத்திப் பொரு ட்கள் தொடர்பாக மிக நிதான மாகப் பல கருத்துக்க ளைப் பகிர் ந்துகொண்டார். அவர் பகிர்ந்து கொண்டவற்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

நான் 18 வயதில் ரேஸ்ரிபூட் இண்டஸ்றீஸ் நிறுவனத்தின் விற் பனை பிரதிநிதியாகவே இந்தத் துறையில் பிரவேசித்தேன். சிறிது காலத்தின் பின் பல்கலைக் கழ கத்தில் கல்வி பயின்றுகொண்ட நானும், எனது இரு நண்பர்களு மாக 5000 ரூபா மூலதனத்துடன் பங்குடமை அடிப்படையில் ஜாம் உற்பத்தியை ஆரம்பித்தோம். மிகச் சிறியளவில் 5 ரூபாவிற்கு ஒரு ஜாம்பைக்கற்ரை விற்பனை செய்து வந்தோம். 2001ஆம் ஆண்டு ஆரம் பித்த இந்தப் பங்குடமை அமை ப்பை, 2003ஆம் ஆண்டளவில் 12 ஊழியர்களுடன் ஓரளவு விரிவாக்கி செயற்படுத்தினோம்.

2003ஆம் ஆண்டு நடுப்பகுதி யில் பங்குடமை அமைப்பில் இரு ந்து விலகி, தனியார் நிறுவனமாக

> **கவர்ச்சியை நாடும் இன்றைய யுகத்தில் எமது பொருட்களில் தாக் கத்தை ஏற்படுத்தினாலும் இலங் கையின் பல பாகங்களிலுமுள்ள தனியார், கூட்டுறவு அமைப்புகளுக் கும் எமது பொருட்களை வழங்கி வருகின்றேன். நுகர்வோரின் சுவை அறிந்து அவர்களது வருமானமட்டம் வாழ்க்கை முறைகளுக்கு அமை வாகவே உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும்.**

ஹேமா இண்டஸ்றீஸ் என பதிவு செய்து பண்டப் பெயரை நாகா சக்தி என வைத்து பல வகையான பழச்சுவை உற்பத்தி நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறேன். எனது நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களாக் ஜாம், கோடியல், உடன்ரசம், தேசி ஊறுகாய், சோஸ், மோர்மிளகாய், கம் இவை பாவனையாளர்களின் வசதிக'ளுக் கேற்ப சிறு அளவுகளில் உற்பத்தி செய்து வருகிறோம். நான்கு அளவு களில் (450 கிராம் - 100 கிராம் வரை) ஜாமை சந்தைப் படுத்து கின்றேன். இவற்றின் விற்பனை விலை 85ரூ முதல் 12ரூ வரையுள் ளது நுகர்வோரின் வருமான மட் டங்களுக்கேற்ப எல்லோரும் வாங் கிப்பயன் அடையக்கூடிய வகை யிலேயே இவ்வாறான சிறு அளவுகளில் எமது பொரு ட்களை சந்தைப்படுத்துகின் றோம்.

இங்கு ஒன்றை குறிப்பிட வேண்டும். ஐஸ்கிறீம் கப்பில் 100g ஜாம் விற்பனையை வடக்கு கிழக்குப் பகுதிகளில் முதன் முதலில் அறிமுகப்ப டுத்திய பெருமை என்னையே சாரும். நீற்றுக்காய் ஜாம், விளாம் பழஜாம், பழக்க லவை ஜாம், பல வகையான சுவைகளில் அதேநேரம் பல அளவுகளிலும் சந்தைப்ப டுத்தி வருகிறேன். எமக்கான மூலப் பொருட்களில் பெரும் பகுதியை கொழும்பிலிருந்து நேரடியாகபெற்று வருகிறேன். பழங்கள், நெல்லிக்காய், தேசி க்காய், மிளகாய் இவற்றை நேர டியாக எமது நிறுவனத்திற்கே உற்பத்தியாளர்களும் சிறு வியா பாரிகளும்கொண்டு வந்து தரு வார்கள். விளம்பரச்சுருள், பொதி அமைத்தல், இவற்றை நாங்களே வடிவ மைத்து வருகிறோம்.

மிகப் பெரிய அளவில் உற் பத்தி நடவடிக்கைகளை மேற் கொண்டு நேரடியாக நானே சென்று சந்தைப்படுத்தி வருகிறேன். இதற்கு எனது இரு சகோதரர்களது ஆலோ சனையும் பூரண ஒத்துழைப்புமே காரணமாகும். மொத்தத்தில் மிகக் குறுகிய காலத்தில் எனது வெற் றிக்குக் காரணமானவர்களும் எனது சகோதரர்களே. வவுனியாவிலும் சரி யாழ்ப்பாணத்திலும் சரி கிரா மங்களை அண்மித்ததாகவே எனது நிறுவனம் அமைந்துள்ளது. எம் மைச் சூழவுள்ள கிராம மக்கள் நேரடி யாகவும், மறைமுகமாகவும் பயன டையக்கூடிய வகையிலேயே செயற் பட்டு வருகிறேன்.

நேரடியாகச் சென்றுசந்தைப் படுத்தலை மேற்கொள்வதனால் பாவனையாளர்களிடமிருந்து பொரு ட்கள் தொடர்பான கருத்துக்களை நேரடியாக பெறமுடிகிறது. இத னால், எமது செயற்பாடுகளில் தேவை யான மாற்றங்களை மேற் கொண்டு செயற்படக்கூடியதாக அமைகிறது. சிறு உற்பத்தியாளர் களது பொரு ட்களைப்பெற்று எமது பொருட்களு டன் சந்தைப்படுத்தி வருகின்றேன். இதனால், அவாகளது பொருட்களை பரவலாக்கி அவர்களுக்கு வியா பார உலகில் களத்தை அமைத்து வருகிறேன்.

கவர்ச்சியை நாடும் இன்றைய யுகத்தில் எமது பொருட்களில் தாக் கத்தை ஏற்படுத்தினாலும் இலங் கையின் பல பாகங்களிலுமுள்ள தனியார், கூட்டுறவு அமைப்புகளுக் கும் எமது பொருட்களை வழங்கி வருகின்றேன். நுகர்வோரின் சுவை அறிந்து அவர்களது வருமானமட் டம் வாழ்க்கை முறைகளுக்கு அமை வாகவே உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி நடவடிக் கைகளை மேற் கொள்ளவேண்டும்.

உற்பத்தியாளர்களாகிய நாம் விற்பனையாளர்களினதும் இறு திப்பாவனையா ளர்களினதும் கரு த்துக்களிற்கு முக் கியத்துவம் கொடுத்து அவர் களின் வசதி வாய்ப்புக் களிற்கு அமைவாக செயற் படவேண்டும். இலா பத்தை பெருமள வில் கருத்திற் கொள்ளாது சுகா தார நெறிமுறை களுக்கு அமை வாக தரத்தை மிக நிதான மாகக்கைக் கொள்ளவேண்டும். ஏமாற் றுத்தன்மை யுடன் குறிகிய காலத்தில் இலாபம் உழைக்கும் நோக்கில் செயற்பட்டால் சந் தையில் நிலைத்து நிற்கமுடியாது.

புதிய பொருட்களின் அறிமுகம், வியாபாரத் தகவல்களை அறிதல், போட்டிப் பொருட்கள், பதிலீட்டுப் பொருட்களின் சந்தை வாய்ப்புக் களை அறிந்து கொண்டு நுகர்வோ ரின் த்ன்மைக்கேற்ப செயற்பட்டால் சந்தையில் நிலைத்து நிற்க முடி யும். சந்தைப்படுத்தும் பொருட்க ளின் விற்பனை வேகத்தைப் பொறுத்து பொருட்களை திருப்பி எடுப்பதன் மூலம் விற்பனையாளர் களின் நன்மதிப்பைப்பெறலாம்.

வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டங்கள் பகிஷ்கரிப்புக்கள் தேவையாக இருந்தாலும், என் னைப் பொறுத்தவரையில் பட்டம் பெற்றவர்கள் எல்லோரும் அரச பதவிகளில் தான் இருக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை.

பட்டதாரிகளாகிய எங்களிற்கு எப்பவோ ஒருநாள் அரச நியமனம் வழங்கப்படும் என்பதுண்மை. எனவே, பட்டத்தை வைத்துக் கொண்டு ஒவ்வொரு அலுவலக மாக ஏறி இறங்காது, ஒவ்வொரு வரும் எமக்கு இசைவான சுய தொழில்களை தனியாகவோ, பங் குடமை அடிப்படையிலோ மேற்கொள்ளும்போது கால விரயத்தைக் குறைப்ப துடன் முயற்சியாளனாக எம்மை மாற்றிக்கொள்ளலாம். புதிய முறையில் பொருட்களை அறிமு ப்படுத்தி இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிற்கும் ஏற்றுமதி செய் யக்கூடிய வகையில் ஒவ்வொரு உற்பத்தியாளர்களும் முன்வர வேண்டும். இதற்கு அரச நிறுவனங் களும், திணைக்களங்களும் தங்க ளது பணியை மனம் கோணாது மேற்கொள்ளவேண்டும்.

மிகவிரைவில் நீரகற்றிய விவ சாய உற்பத்திகளை ஏற்றுமதி செய்யவுள்ளேன். இதற்கான ஆர ம்ப நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறேன். இதில் பழ வகைகள், மரக்கறி வகைகளை நீர் அகற்றி பாதுகாப்பாகப் பொதி அமைத்து ஏற்றுமதி செய்யவேண் டும்.

இதனுடன் வேறு சில பொருட் களையும் ஏற்றுமதி செய்யவுள் ளேன். நீர் அகற்றல் முறையானது, குறித்த விவசாயப் பொருளை இயந்திரங்களின் உதவியுடன் நீர் அகற்றி இராசயானச் சேர்க்கை களையும் மேற்கொண்டு தேவை யான நேரங்களில் மீண்டும் நீரில் போட்டு பழைய நிலையில் பொருட் களை நுகரமுடியும். நீண்ட காலப் பாவனையுடையதும் கூட. இலங கையின் எல்லா இடங்களிலும் எனது உற்பத்திப் பொருட்கள் கிடைக் கின்றன.

மிக விரைவில் சர்வதேச ரீதியி லும் எனது பொருட்க்ளை சந்தைப் படுத்தவுள்ளேன். எனது குறிகிய கால வளர்ச்சிக்கு விற்பனையாளர் களும், பாவனையாளர்களும் எனது சகோதரர்களும் காட்டிவரும் ஆத ரவை என்னை இந்த நிலையில் வைத்துள்ளதெனக் கூறினர்.

### சதாம் உட்பட பதினொரு பேர்

# ஈராக்கிய இடைக்கால அரசிடம் அமெரிக்கா நேற்று கையளிப்பு!

(பாக்தாத்)

**முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் உட்பட 11 பேர், ஈராக்கிய இடைக்கால அரசின் சட்ட நடவழக்கைகளுக்காக நேற்று அமெரிக்காவினால் கையளிக்கப்பட்டனர்.**

முன்னாள் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் உட்பட 11 பேர் ஈராக்கிய இடைக்கால அரசிடம் சட்ட நடவடிக்கைகளுக்காக நேற்று கையளிக்கப்பட்டனர்.

ஈராக்கிய இடைக்கால அரசு தனது பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் பாதுகாப்பான ஒரு சிறைச்சாலையை அமைக்கும்வரை சதாம் ஹுசைன் உட்பட 11 பேரும் ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிற்கான சிறப்புப் பிரதிநிதி சலீம் சலாபி, நேற்று சதாம் ஹுசைனைச் சந்தித்தார். இதேசமயம் சதாம் மீதான சட்ட நடவடிக்கைகள் ஈராக்கிய இடைக்கால அரசிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டதாகவும் சலீம் சலாபி தெரிவித்தார்.

சதாம் ஹுசைன் மீது 1988 ஆம் ஆண்டு குர்திஷ் மக்களை விஷவாயுவால் கொலை செய்தமை, குவைத் ஆக்கிரமிப்பு ஆகிய குற்றங்கள் சுமத்தப்படவுள்ளன.



இதனிடையே ஈராக்கில் பாக்தாத் நகரில் அமெரிக்கப் படைத்தளம் ஒன்றின்மீது ஆயுததாரிகள் எறிகணைத் தாக்குதலை நடத்தியதில் 11 படையினர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஐ.நா.பணியாளர்கள் சென்ற ஹெலி

# சியாரோலியோனில் விபத்து; பயணம் செய்த 24 பேர் பலி!

சியாரோலியோனில் ஐ.நா.பணியாளர்கள் சென்ற ஹெலிகொப்ரர் விபத்துக்குள்ளானதில் அதில் பயனஞ்செய்த 24 பேரும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்கள் அனைவரதும் உடல்கள் விபத்து நடந்த இடத்திற்கருகிலுள்ள ஜென்ஜீமா நகரத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

உதவிப் பணிகளை மேற்கொள்வதற்காக சியாரோலியோனின் தலைநகரிலிருந்து சென்ற ஐ.நாவின் பணியாளர்களே இந்த விபத்தில் கொல்லப்பட்டவர்களாவர்.

ரஷ்ய விமான ஓட்டிகள் மூவர், 14 பாகிஸ்தானியர் இவர்களில் அறுவர் அதிகாரிகளாவர். ஆகியோரே இந்த விபத்தில் உயிரிழந்தவர்களாவர்.

பறந்துகொண்டிருந்த ஹெலிகொப்ரர் திடீரென தாழப்பறந்து மரமொன்றில் மோதியதாலேயே விபத்துக்குள்ளானதாக சம்பவத்தை நேரில் கண்ட விவசாயிகள் தெரிவிததனர்.

விபத்துக்குள்ளான ஹெலிகொப்ரரை மீட்பதற்கு ஐ.நா.அதிகாரிகள் வேறோரு ஹெலிகொப்ரரில் சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றதாக ஐ.நா.சபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

சியாரோலியோனில் உள்ள ஐ.நா.பணியாளர்கள் அங்கு உதவிப் பணிகளை மேற்கொள்வதற்கு ஹெலிகொப்ரர்களையே நம்பியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உலக நோக்கு

### ஆப்கான், ஈராக்கில் பணியாற்ற

# ஓய்வுபெற்ற படையினரை இணைய அமெரிக்கா அழைப்பு விடுத்தது!



(காபூல்)

ஆப்கான் மற்றும் ஈராக்கில் இராணுவ சமநிலையைப் பேணுவதற்கு, அமெரிக்கப் படைகளிலிருந்து ஓய்வுபெற்ற ஐ.ஆர்.ஆர். படைப்பிரிவிலிருந்து 6 ஆயிரம் பேரை மீள இணைந்துகொள்ளுமாறு அமெரிக்க இராணுவம் கோரியுள்ளது.

1991 ஆம் ஆண்டு குவைத்தை ஈராக் ஆக்கிரமித்தபோது அமெரிக்கா நடத்திய போரின்போது படைகளிலிருந்து விலகியவர்களைச் சேருமாறு கோரியதன் பின்னர் தற்போதுதான் முதன்முறையாக அமெரிக்க இராணுவம் இந்த அழைப்பை விடுத்துள்ளது.

அமெரிக்க இராணுவம் இந்த அழைப்பை விடுத்தமையானது அதன் முரண்பாடான தன்மையையே காட்டுவதாக பென்ரகனிலுள்ள பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

இந்த இராணுவத்தினரை மீள அழைப்பது வழமைக்கு மாறானதோ அல்லது புதிதான விடயமோ அல்லவென அமெரிக்க இராணுவ அதிகாரியான லெப். கேணல். பமீலா ஹட் தெரிவித்தார்.

யுத்தம் நடைபெறும் காலத்தில் எங்களுக்கு மேலதிகமான படைகள் தேவைப்படும்வேளை இவர்களை நாம் அழைப்பது வழக்கமெனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்க இராணுவத்தின் இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கையானது அவர்களது தற்போதைய நடவடிக்கையில் படையினரின் பற்றாக்குறையையே காட்டுவதாக அமெரிக்க இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவரும், பொஸ்ரன் பல்கலைக்கழகத்தில் தற்போது சர்வதேச உறவுகள் தொடர்பான விரிவுரையாளராக இருப்பவருமான கேணல் அன்ட்ரூ பசீவிச் தெரிவித்தார்.

ஈராக் தொடர்பான புஷ்ஷின் நிர்வாகத்திற்கு சர்வதேச நாடுகளின் ஆதரவில் ஏற்பட்ட தோல்வியே இந்த ஓய்வுபெற்ற படைகளின் ஆட்சேர்ப்பென அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ஜோன் ஹெரியின் தேசிய ஆலோசகர் ராண்ட் பியர்ஸ் தெரிவித்தார்.

# தீவிரவாதிகள் மீதான தாக்குதலை சூடான் அரசு உடன் நிறுத்தவேண்டும்

### கொலின் பவல் எச்சரிக்கை

டர்பூர் மாநிலத்தில் உள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகள் மீதான தாக்குதலை சூடான் அரசாங்கம் உடனடியாக இடைநிறுத்தவேண்டும் என அமெரிக்க ராஜாங்கச் செயலர் கொலின் பவல் - சூடான் அரசினை எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த கொலின் பவல் - சூடான் இராணுவத்தினர்கள் இஸ்லாமியத் தீவரவாதிகள்மீது மேற்கொள்ளும் தாக்குதலானது மனிதநேயமற்றது எனத் தெரிவித்தார்.

நேற்றையதினம் டர்பூர் பகுதிக்கு விஜயம்செய்த கொலின் பவல் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

சூடான் படைகள் மேற்கொண்ட இத்தாக்குதலானது ஒரு இனத்தை அடியோடு அழித்துவிடும் செயலாக மாறிவிடக்கூடுமெனத் தெரிவித்தார்.

சூடான் படைகளின் இத்தாக்குதல் நடவடிக்கைகள் தொடருமாயின 10 லட்சம் மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறவேண்டிய சூழ்நிலை ஏற்படுமென ஐ.நாவின் பாதுகாப்புச்சபை தெரிவித்தது.

இது தொடர்பாக ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் - சூடான் அரசுடன் பேச்சுக்களை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பிரச்சினை தொடர்பாக மீள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக சூடானிய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு உத்தரவாதம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் சூடானிய ஜனாதிபதி ஓமர் அல் பஷீரைச் சந்தித்து உரையாடிய அமெரிக்க ராஜாங்கச் செயலர் கொலின் பவல்- சூடான் அரசு டர்பூரில் உள்ள தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை டர்பூர் மாநிலத்தில் உள்ள அரசின் இணக்கத்துடனேயே மேற்கொள்ளவேண்டும், சர்வதேச நிறுவனங்கள் டர்பூரில் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளவேண்டும், சூடானிய அரசாங்கம் டர்பூரில் உள்ள இரண்டு இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.



### இஸ்ரேல் இராணுவத்தால் அமைக்கப்பட்ட

# மேற்குக்கரை வீதி தடையை அகற்ற இஸ்ரேல் நீதிமன்றத்தால் உத்தரவு!



(டெல்அவிவ்)

பலஸ்தீனத்தின் மேற்குக்கரைப் பகுதியிலுள்ள வீதித்தடையை மாற்றியமைக்குமாறு இஸ்ரேலிய உயர்நீதிமன்றம், இஸ்ரேல் இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளது. அத்துடன், இந்த வீதித்தடையினால் பலஸ்தீன மக்கள் பெருமளவில் துன்பமடைந்து வருவதாகவும் அது தெரிவித்தது.

ஜெருசலேம் பகுதிகளிலுள்ள தடைகளை அகற்றி பலஸ்தீன மக்களின் வேதனையான வாழ்க்கையை சுமுகமாக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்றின் இந்தத் தீர்ப்பானது மற்றைய அனைத்து சட்டப்பிரச்சினைகளுக்கும் ஒரு முன்மாதிரியான செயற்பாடென ஜெருசலெத்திலுள்ள பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

இஸரேலில் நடத்தப்படும் தற்கொலைத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு இந்த வீதித்தடை அவசியமானதென இஸ்ரேல் தெரிவித்தது.

ஆனால், இந்த வீதித்தடையால் பலஸ்தீன குடும்பங்கள் பெருமளவில் பிரிந்துவாழ்வதாகவும், அவர்களது தொழில், பிள்ளைகளின் பாடசாலைகள்கூட பிரிக்கப்பட்டுள்ளதாகவும் பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜெருசலத்தின் வடமேற்கு பகுதியிலுள்ள 30 கி.மீற்றர் நீளமான வீதித்தடைகள் குறித்தே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வீதித்தடையினால் பலஸ்தீனத்தின் பத்து கிராமங்களில் வாழும் 45 ஆயிரம் மக்கள் பாதிப்படைந்துள்ளதாகவும், அவர்களது விவசாயம், பாடசாலை, தொழில்கள் என்பன பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வழக்கில் ஆஜரான சட்டத்தரணியான மொகமட் டால்கா தெரிவித்தார்.

மூன்று நீதிபதிகளைக்கொண்ட இந்தக் குழுவினர் தமது கருத்தில் - இந்த வீதித்தடைகளை மாற்றுவதற்கு சாத்தியமான வழிகள் உள்ளதெனத் தெரிவித்தனர்.

இந்தத் தீர்ப்பு தொடர்பாக் இஸ்ரேலிய அரசாங்கத்திடமிருந்து எவ்வித கருத்தும் வெளிவரவில்லை. ஆனால், மேற்குகரைப் பகுதியிலுள்ள வீதித்தடைகள் தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்பதனையே அது விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 7 ஆண்டுகளுக்கு முன் அனுப்பிய விண்கலம் இன்று சனிக்கிரகத்திநுள் பிரவேசிக்கிறது!





(நியூயோர்க்)

சூரியக் குடும்பத்தில் உள்ள 9 கிரகங்களில் மிகவும் அழகான கிரகம் சனிக்கிரகம். அதற்கு அழகைத் தருவது அதன் வளைய்யங்களும், அதைச்சுற்றியுள்ள சிறு நிலாக்களும்தான்.

சனிக்கிரகத்தைச் சுற்றி 23 நிலாக்களும், பல்லாயிரக்கணக்காக வளையங்களும் உள்ளன. இதனால் தொலைநோக்கியில் சனிக்கிரகத்தைப் பார்த்தால் கோப்பையுடன்கூடிய சிறு தட்டுப்போல் இருக்கும்.

9 கிரகங்களில் 2 ஆவது பெரிய கிரகமான சனிக்கிரகம் சூரியனிலிருந்து 142 கோடி கிலோமீற்றர் தொலைவில் இருக்கிறது. இதன் மையப்பகுதி உலோகப் பாறைகளால் ஆனது. அதனுள் திரவ நிலையில் உலோக நைதரசன் வளிமண்டலத்தில் ஐதரசன், ஹீலியம் ஆகியவை உள்ளன.

400 கோடி ஆண்டுக்கு முன்பு பூமி எப்படி இருந்ததோ, அதுபோல தற்போது சனிக்கிரகம் உள்ளது என்று ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே அங்கு உயிர்வாழமுடிமா என்ற ஆராய்ச்சி தீவிரமாக நடந்துவருகிறது.

சனிக்கிரகத்தின் மர்மங்களைக் கண்டறிய இதற்குமுன்பு பயனீர் 1,2 மற்றும் வாயேஜர் 1 என்ற 3 விண்கலங்களை அமெரிக்கா அனுப்பியது.

1997 ஆம் ஆண்டு கெனடி விண்வெளி மையத்திலிருந்து ஏவப்பட்ட காசினி 7 ஆண்டு இடைவிடாத பயணத்துக்குப்பின்பு சனிக்கிரகத்தை அடைந்துள்ளது.

இது சனிக்கிரக நிலாவான 240 கிலோமீற்றர் விட்டமுள்ள போபே எனும் நிலாவை நெருங்கி படங்களை எடுத்து அனுப்பியது.

போபே நிலாவின் மேற்பரப்பில் பனிக்கட்டிகள், பனிப்பாறைகள் இருப்பதை காசினி விண்கலப்படங்கள் உறுதிசெய்துள்ளன. இதன்மூலம் சனிக்கிரகத்தில் மனிதர்கள் உயிர்வாழத் தேவையான தண்ணீர் கிடைக்குமென்று விஞ்ஞானிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து

# பிரிந்து சென்றவர்கள் புதிய குழு அமைப்பு!

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தி அடைந்த அக்கட்சியின் உறுப்பினர்கள் சிலர், அதிலிருந்து விலகி, மாற்றுக்குழு ஒன்றை அமைந்துள்ளனர்.

நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த இக்குழுவின் ஏற்பாட்டாளர் சிறிசிறி விக்கிரமசிங்க,

ஹெல உறுமயவால் முன்மொழியப்பட்ட தர்மராஜ்ஜியத்தை தாம் ஏற்படுத்தப் போவதாகவும், ஹெல உறுமய தன் நோக்கத்தைக் கைவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

அரசுடன் முரண்படாது இணைந்து செயற்படப்போகிறோம். ஹெல உறுமய நிபந்தனையின்றி அரசுடன் இணைந்திருந்தால், நாட்டுக்குப் பாரிய சேவையை ஆற்றமுடியும் எனவும் தெரிவித்தார்.

### புதிய இராணுவ...

மாத்தறையைப் பிறப்பிடமாகக் கொண்ட சாந்த கொட்டேகொட, 1970 ஆம் ஆண்டு பெப்ரவரியில் இராணுவத்தில் இணைந்து கொண்டார்.

இவர் பயிற்சியை முடித்துக் கொண்டு 1971 களில் இலகு காலாற் படையின் முதலாவது பட்டாலியனில் 2 ஆவது லெப்ரினன்ட் தர அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

1973 இல் லெப்ரினன்டாகவும், 1976 இல் கப்டனாகவும், 1980 இல் மேஜராகவும், 1988 இல் லெப்.கேணலாகவும், 1993 டிசம்பரில் பிரிகேடியராகவும் நியமிக்கப்பட்டார். 1998 இல் இவர் மேஜர் ஜெனரலாக பதவியுயர்வு பெற்றார்.

தனது 33 வருடகால இராணுவ வாழ்வில் கொழும்பிலும், இராணுவ நடவடிக்கைப் பிரதேசங்களிலும் சாந்த கொட்டேகொட பல்வேறு பதவிகளை வகித்திருந்தார்.

4 ஆவது இலகு காலாற்படை பட்டாலியன் தளபதியாக இருந்த இவர், பின்னர் தேசிய புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இந்தக் காலப் பகுதியில் பிரிட்டனில் எம் 15 புலமைப்பயிற்சி உள்ளிட்ட வெளிநாட்டுப் பயிற்சிகளைப் பெற்றார்.

ஐ.தே.க. ஆட்சியின்போது புலிகளுடனான பேச்சுக்களில் - அரச தரப்புக் குழுவின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, கடந்த வருட நவம்பரில் இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இதன்பின்னர் கடந்த மே மாத இறுதியில் கிழக்குப் பகுதிக்கான நடவடிக்கைத் தளபதியாகவும் இவர் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - நேற்றுடன் ஓய்வு பெற்ற லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, 1965 ஆண்டு இராணுவத்தில் இணைந்து 39 வருடங்கள் பணியாற்றியுள்ளார். இவர் 2000 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 24 ஆம் திகதி இராணுவத் தளபதியாக பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தமிழ்ச்செல்வனுடன்...

ஹெய்ம் தலைமையிலான நோர்வே, தூதுக் குழுவினர் - சமாதானச் செயலகத்தில் தமிழ்ச் செல்வனைச் சந்தித்தனர்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் ஆரம்பித்த பேச்சுக்கள், சுமார் இரண்டு மணிநேரம் நீடித்தது.

இந்தச் சந்திப்பில் நோர்வே தரப்பில் விசேட தூதுவர் எரிக் சொல் ஹெய்ம், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிறட்ஸ்கர் ஆகியோருடன் தூதரக அதிகாரிகளும் -

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது - வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அரச அதிகாரிகள், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக , தமிழ்ச்செல்வனுக்கு சொல்ஹெய்ம் விளக்கிக் கூறினார்.

### சமாதான....

ஆரம்பித்தல் ஆகியன இந்தச் சந்திப்பின்போது முக்கியமாக ஆராயப்பட்டது. அத்துடன் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை எவ்வாறு தொடர்ந்து முன்னெடுப்பது என்பது குறித்தும் இச்சந்திப்பில் விரிவான ஆராயப்பட்டது. தமிழ்ச்செல்வன் தெரியப்படுத் திய விடயங்களை அரசிடம் தெரிவிக்கவுள்ளோம் என சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

## பிரதேச செய்தியாளர் தேவை

'நமது ஈழநாடு' பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு பிரதேச செய்தியாளர் தேவை. ஆர்வமுள்ள துடிதுடிப்பான ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

சுய விபரத்துடன் உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றிதழுடன் விண்ணப்பங்களை -

பிரதம ஆசிரியர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

### செய்தியாளர் தேவைப்படும் பிரதேசம்

அல்வாய்
கரவெட்டி
உடுப்பிட்டி
வல்வெட்டித்துறை
பருத்தித்துறை
கரணவாய்

கைதடி
வரணி
நாவற்குழி
கொடிகாமம்
பளை

குருநகர்
கல்வியங்காடு

உரும்பிராய்
அச்சுவேலி
நீர்வேலி
இருபாலை
நவக்கிரி
கோப்பாய்

உடுவில்
இளவாலை
பண்டத்தரிப்பு
வட்டுக்கோட்டை
சங்கானை
மாதகல்

மல்லாகம்
தெல்லிப்பளை
ஏழாலை

கோண்டாவில்
புன்னாலைக்கட்டுவன்
இணுவில்
கொக்குவில்
சுன்னாகம்

ஊர்காவற்துறை
மண்டைதீவு
வேலணை

## காணாமற் போனோர் குறித்த

# ஆறு மனுக்கள் மீதான விசாரணை 29 ஆம் திகதி வரை ஒத்திவைப்பு!

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் படையினரால் கைதாகி காணமற்போன 6 பேரின் ஆட்கொணர்வு மனுக்கள் நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் விசாரணைக்கு அழைக்கப்பட்டு ஆட்சேபனை சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் இறுதித் தவணை வழங்கப்பட்டு விசாரணைகள் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன.

காணாமற்போன குருநகரைச் சேர்ந்தவர்களான துரைசிங்கம் குணசேகரம், ஆர்.கெனடிராஜா மற்றும் சுண்டிக்குளியைச் சேர்ந்த எஸ்.அல்போன்ஸ் வில்டன், தொட்டியடியைச் சேர்ந்த ஆர்.குயின்ரஸ் ராஜ்குமார், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தயானந்தம் ரவீந்திரன் ஆகியோரின் ஆட்கொணர்வு மனுக்களே யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி எஸ்.வரதராஜன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது எதிர் மனுதாரர்களான படைத்தரப்பினர் சார்பில் ஆட்சேபனைகள், பதவிப் பத்திரம் ஆகியன மன்றுக்குச் சமர்ப்பிப்பதற்காக இறுதித் தவணை யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி எஸ்.வரதராஜாவினால் வழங்கப்பட்டு வழக்கு எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளின் இறுதியாண்டு பரீட்சைகள் ஒத்திவைப்பு!

அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் பயிலுநர் ஆசிரியர்களுக்கான இறுதியாண்டுப் பரீட்சைகளை இம்மாதம் 21 ஆம் திகதி முதல் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது.

எனினும், மாகாணசபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளதைக் கருத்திற்கொண்டு இந்தப் பரீட்சை அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்குப் புதிதாக அனுமதி பெற்றுள்ள பயிலுநர்களுக்கு எதிர்வரும் 5 ஆம் திகதிமுதல் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர் கலாசாலை இறுதியாண்டு மாணவர்கள் ஜூலை முதலாம் திகதியன்று தாம் ஏற்கனவே சேவையாற்றிய பாடசாலைகளில் மீண்டும் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### ஆளும்......

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறத் தீர்மானிக்கப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் முதலில் இடைக்கால நிர்வாகம் குறித்த காரணங்கள் பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்கு ஜனாதிபதி உடன்பட்டுள்ளமையால் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தும் நோக்கில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

அத்துடன், இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தமாத முதல வாரத்தினுள் தெளிவுபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

### அரசாங்கம் மீதான அதிருப்தியை....

டும் என்பதே எமது தலைமைப் பீடத்தினது கரிசனையாக இருக்கின்றது என்பதனை நாங்கள் அவர்களுக்கு எடுத்துச் சொல்லியுள்ளோம்.

மற்றையது - சமாதான முன்னெடுப்புகளை தொடர்வதாக இருந்தால் எமது தலைப்பீடத்தினது நிலைப்பாடுகளை ஏற்கனவே நாம் தெளிவாக, முன்வைத்திருக்கின்றோம்- அந்த நிலைப்பாட்டை நாம் மீளவும் வலியுறுத்தியிருக்கின்றோம்.

*கேள்வி:* இடைக்கால நிர்வாக அதிகாரசபையின் அடிப்படையில் ஜனாதிபதி பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயார் என நோர்வேத் தகவல்கள் தெரிவிப்பதாக செய்தி வந்துள்ள நிலையில் அவர்கள் இது தொடர்பாகக் கூறினார்களா?

*பதில்:* அவர்களும் ஊடகங்களுக்கூடாகத்தான் இந்தச் செய்தியை அறிந்துள்ளனர். இன்னமும் அதிகாரபூர்வமாக அந்தச் செய்தி நோர்வேத் தரப்புக்கு கொடுக்கப்படவில்லை.

அவர்களும் ஊடகங்கள் ஊடாகத்தான் அறிந்ததாக எமக்குச் சொல்கின்றார்கள். எம்மைப் பொறுத்தவரையில் ஏற்கனவே நாம் எமது தெளிவான நிலைப்பாட்டை முன்வைத்துள்ளோம்.

கருணாவையும் அவரது அடியாட்கள் சிலரையும் வைத்துக்கொண்டு மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டத்தில் யுத்த நிறுத்த சூழலையும், ஒரு சுமுகசூழலையும் குழப்பி சமாதான முன்னெடுப்புக்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்துகின்ற சூழலை உருவாக்கிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே இவற்றைத் தடுப்பதற்கான - முடிவு கட்டுவதற்கான நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்வதற்கூடாகவே நிலைமைகளை சுமுகமாக்கிக்கொள்ளலாம் என்பதனை வலியுறுத்தியிருக்கின்றோம்.

எம்மைப் பொறுத்தவரையில் எமது தலைமைப்பீடம் ஏற்கனவே எடுத்த நிலைப்பாடுகளில் எவ்வித மாற்றமும் இல்லை. புதிதாக அவர்களால் உருவாக்கப்பட்டுள்ள நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டும் என்பதனை இன்று வலியுறுத்தியுள்ளோம்.

*கேள்வி:* உங்களது தலைமைப் பீடத்தின் இந்த நிலைப்பாடுகள் தொடர்பாக அரசாங்கத்துக்கு ஏதாவது அறிவித்துள்ளீர்களா?

*பதில்:* நிச்சயமாக. கண்காணிப்புக்குழுத் தலைவரூடாகவும், எமது தலைமைப்பீடத்தின் அதிருப்தியையும், கரிசனையையும் தெரியப்படுத்தியுள்ளோம். அதேபோல அனுசரணையாளரான நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அவர்களுக்கு விளக்கமாக, ஆணித்தரமாக, உறுதியாக எடுத்துக்கூறியுள்ளோம்.

*கேள்வி:* அண்மைக்காலமாக புனர்வாழ்வு அமைச்சிடம் ஐரோப்பிய ஒன்றியம், வடக்கு- கிழக்கு புனர்வாழ்வுக்கென ரோக்கியோ மாநாட்டில் உறுதிவழங்கிய, குறிப்பிட்ட மில்லியன் தொகைப் பணத்தை கொடுத்துள்ளது. இந்தப் பணம் வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை மூலமாக பகிரப்படும் என்பதற்கு சர்வதேச சமூகம் எதிராகச் செயற்படுவது குறித்து -

*பதில்:* நாம் நன்கொடையாளர்களுக்கு தெளிவாகக் கூறியிருக்கின்றோம். எமது தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்ற புனர்வாழ்வு, மீள் குடியேற்றம், அபிவிருத்தி போன்ற எந்த வேலைத் திட்டமாக இருந்தாலும் அது உருவாக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபை என்கின்ற ஒரு காத்திரமான கட்டமைப்புக்கு ஊடாக நடத்தப்படவேண்டும் என்பதையும், இலங்கை அரசாங்கத்தினுடைய பல வீனப்பட்டிருக்கின்ற, மக்கள் நம்பிக்கையற்றிருக்கின்ற இந்த நிர்வாக அலகின் ஊடாக முன்னெடுக்கப்படுவதை ஒருபோதும் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை நன்கொடையாளர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளோம்., நோர்வேத் தரப்பினருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

அண்மைக் காலத்தில் உலக வங்கி, ஐரோப்பிய யூனியன் போன்ற நிதி நிறுவனங்கள் அளித்த உதவிகள் ரோக்கியோவில் அளிக்கப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டதாக எமக்கு எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை.

ஊடகங்கள் ஊடாக வந்த இவ்வாறான செய்தியை அடுத்து அவர்களிடம் அதற்கான கேள்வியை எழுப்பியுள்ளோம். அவர்கள் அதனை மறுத்திருக்கின்றார்கள். அங்கே உறுதியளிக்கப்பட்ட நிதி இந்த சமாதான முன்னெடுப்புக்களுடைய முன்னேற்றத்தின் அடிப்படையில்தான் அளிக்கப்படும் என்ற செய்தியினை மீண்டும் எமக்குத் தந்துள்ளனர்.

ஆகவே ஊடகங்களின் செய்தியை வைத்துக் கொண்டு தற்போது எம்மால் உறுதியான கருத்தொன்றையும் தெரிவிக்க முடியாது.

*கேள்வி:* பேச்சுவார்த்தை தொடர்பாக சொல்ஹெய்ம் சென்றமுறையும் வந்து உங்களுடன் பேசினார். ஒன்றுமில்லை போய்விட்டார். இம்முறையும் வந்துள்ளார்?

*பதில்:* நோர்வேத் தூதுவர் இன்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் தெளிவாக ஒன்றைச் சொல்லியுள்ளார். மிக கடுமையாக உழைப்பதாகக் கூறியுள்ளார்.

எமது நிலைப்பாட்டை இன்று அறிந்து செல்கின்றார். இன்று மாலை பிரதமரையும் நாளை ஜனாதிபதியையும் சந்திக்கவுள்ளார். அரச தரப்பினுடைய அதிகாரத்திலுள்ள முடிவை எடுக்கும் தலைமைத்துவங்களை இனித்தான் சந்திக்கவுள்ளார். அவர்களுடைய சந்திப்பு முடிந்த பின்னரேயே இதில் ஏதாவது சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா என்பதனை நாம் அறியக் கூடியதாக இருக்கும்.

நோர்வேத் தூதுவர் இந்தச் சந்திப்புக்கள் முடிய மிக விரைவில் வர விருப்பதாக எமக்குக் கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு தாமதமாவதென்பது வெளிப்படையாகத் தெரிந்த உண்மை.

அது அரச தரப்பின் கையிலே தான் உள்ளது. எம்மைப் பொறுத்த வரையில் எங்களது நிலைப்பாடு தெளிவாகவும், உறுதியாகவும் இருக்கின்றது.

நாம் எந்த அடிப்படையில் பேசத் தயாராக இருக்கின்றோமென்ற எங்களுடைய தலைமைப் பீடத்தினது நிலைப்பாடுகளை நாங்கள் அவ்வப்போது வெளிப்படையாகத் தெரிவித்து வருகின்றோம். அது ஊடகங்களுக்கூடாக மக்களைச் சென்றடையும்.

எமது நிலைப்பாடு தெளிவானது, உறுதியானது. ஆகவே பேச்சுக்கான முன்னெடுப்புக்களை உருவாக்கும் சூழலை உருவாக்கிக்கொள்கின்ற பொறுப்பு அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது. அதனை நோர்வே அனுசரணையாளர்களும் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். சர்வதேச சமூகமும் விளங்கிக் கொண்டிருக்கின்றது.

அரசாங்கத்தின் மீதுள்ள அதிருப்திகளையே நாம் இன்று வெளிப்படுத்தியுள்ளோம். ஆகவே அதில் மாற்றங்கள் வரவேண்டும். முன்னேற்றங்கள் வருகின்ற அடிப்படையில் தான் சமாதான முயற்சிகளின் முன்னெடுப்புக்கள் தங்கியுள்ளது.

*கேள்வி:* கருணா விடயத்தில் மகேஸ்வரனுக்கு தொடர்பிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது. இது குறித்து?

*பதில்:* எம்மைப் பொறுத்தவரையில் ஊடகங்கள் ஊடாக பல செய்திகள் வருகின்றன. பலர் தாங்கள் உதவி புரிந்ததாக ஒத்துக்கொள்கின்றனர். சிலர் மறுக்கிறார்கள். இவ்வாறு பலவித செய்திகள்.

ஆகவே இதில் எது உண்மையென்பதனை அங்கிருந்து தப்பி வந்தவர்களுடைய வாக்குமூலங்களை வைத்துக்கொண்டுதான் நாம் முடிவுகளை எடுக்கலாம்.

ஆகவே இது தொடர்பான விசாரணைகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விரைவில் இதில் தொடர்புடையவர்களை நாம் வெளிப்படுத்துவோம். வெளிப்படுத்தியும் விட்டார்கள். ஆகவே மகேஸ்வரன் இதில் தொடர்புள்ளவரென்பது எமக்கு அவ்வாறானதொரு செய்திகளோ, வாக்குமூலங்களோ கிடைக்கவில்லை.

மாகாண சபையில் வாக்களிக்கும் மக்களுக்கு நாம் கூறுவதென்னவெனில் அவர்களுடைய எதிர்காலம் ஒளிமயமாவதற்கேற்ப சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# நயினை நாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவ சிறப்பிதழ்

## தேரேறி வரும் நயினை நாகபூஷணி

புராதனப் பெருமை மிக்கதாகக் காணப்படுகின்ற லைடன்தீவு, நெடுந்தீவு, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, காரைதீவு எனும் ஸப்த தீவுகளுக்கு நடுநாயகமாக அமைந்துள்ளது நயினாதீவு. இப்பழம்பெருமை வாய்ந்த நயினையெம் பதியிலே பன்னெடுங்காலமாக அருளாட்சி செய்கிறாள் அன்னை நாகபூஷணி.

உலகுயிர்கள் உய்யும் வண்ணம் எம்பிரானாகிய சிவபெருமான் தமது சக்தியினைப் பதித்தருளிய இடங்கள் 64 ஆகும். இவை சக்தி பீடங்கள் எனப்படும். காசியில் விசாலாட்சி எனவும், காஞ்சியில் காமாட்சி எனவும், மதுரையில் மீனாட்சி எனவும் திருநாமங்கள் கொண்ட பேரருள் சக்தியானவள் நயினாதீவு எனும் மணி பல்லவத்திலே புவனேஸ்வரி பீடத்தினை அலங்கரித்துக் கொண்டு நாகேஸ்வரி நாகபூஷணி எனும் திருநாமங்களுடன் எழுந்தருளி அருளாட்சி நடத்தி வருகின்றாள்.

நாகம் வழிபட்டதால், நாகத்தால் பூசிக்கப் பட்டதால் அன்னைக்கு இத் திருநாமம் அமைந்தது என்பர். இத்தகு பெருமை மிகு நாகபூஷணி வரலாற்றுச் சிறப்பினை ஆராய்கின்ற பொழுது, நாகம் ஒன்று நயினாதீவிற்கு வடக்கேயுள்ள புளியந்தீவிலிருந்து நாள்தோறும் பூக்கள் கொண்டு வந்து அம்பிகையை வழிபடுவதைத் தனது இன்றியமையாக் கடனாய்க் கொண்டிருந்தது.

ஒருநாள் பூக்கொண்டு நாகம் வரும்வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்ல முனைந்தது. நாகம் அச்சமடைந்து கடல் நடுவிலிருந்த கல்லொன்றினைச் சுற்றிக்கொண்டது. கருடனோ மற்றொரு கல்லில் அமர்ந்த வண்ணம் நாகத்தைக் கொல்வதற்கு தருணம் பார்த்திருந்தது.

இந்நேரத்தில் கடல் வழியாக மரக்கலம் ஒன்றிலே பண்டங்களை ஏற்றிவந்த வணிகன் ஒருவன் இந்தக் காட்சியைக் கண்டான். பாம்பின் மீது இரக்கம் கொண்டான். "அதனைக் கொல்ல வேண்டாம்" என்று கருடனை வேண்டினான். கருடன் நீ உனது செல்வம் அனைத்தையும் கொண்டு வந்து நாகேஸ்வரிக்குக் கோயில் கட்டுவதாய் உறுதிதந்தால், நான் இந்த நாகத்தைக் கொல்லாது சென்றுவிடுகிறேன் என்றது.



அவன் அவ்வாறே உறுதியளிக்க அது நாகத்தைக் கொல்லாது விலகிச்சென்றது.

வணிகன் தனது நாடு சென்று நடந்தவற்றைத் தன் மனைவிக்கு உரைத்தான். இரவு நித்திரைக்குச் செல்கையில், கணவன் - மனைவி இருவரதும் கண்களைக் கூசவைக்கும் பேரொளி அவர்களின் சயன அறையிலே தோன்றிற்று. அவர்கள் அந்த ஒளி ஏதுவாய் இருக்கலாமென்று பரிசோதனை செய்த பொழுது, அது விலைமதித்தற்கரிய நாகரத்தினக் கல்லிலிருந்து வந்த ஒளி என்பதைக் கண்டுகொண்டார்கள். நாகபூஷணியின் நல்லருளை வியந்து நயினை வந்து, அம்மைக்கு அழகியதோர் ஆலயம் அமைத்தார்கள்.

மணிபல்லவத்தின் புகழ்விளங்கும் அன்னை நாகபூஷணி வேண்டுவார் வேண்டும் வகையில் வரம் ஈந்து, எம்மையெல்லாம் வாழவைத்துக் கொண்டிருக்கின்றாள். நயினையெம்பதியிலே நாலடி நடந்தால் போதும், நம் பாவம் தொலைந்துவிடும். அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக, கண்கள் களிக்கும்படியாக மொழிக்கும், நினைவிற்கும் எட்டாத நின்திருமூர்த்தமாக விரும்பித் தொழும் அடியார் விழிநீர் மல்கி விதந்து போற்றி, துதிக்கத்தக்கவளாக பாலையும், தேனையும் பாகையும் போலும் பனிமொழியாக, பைரவியாக, பஞ்சமி, உண்ணும் உயர் சண்டிகாளியாக, ஒளிரும் கலாவல்லியாக, மண்டலி, மாலினி, சூலி, வாராகியாய் எழுந்தருளி அருள் பாலிக்கின்றாள்.

தங்கநிறச் சுந்தரியாய் தமிழ் விஞ்சும் அம்பிகை அங்கமெல்லாம் அரவணிந்து அலைகடலின் நடுவினிலேயாய் அருளாட்சி செய்கின்ற அன்னையைத் தொழுவதற்க்காக நாளும் நாலாத் திசைகளிலுமிருந்து பக்தர்கள் புவனேஸ்வரி பீடத்தை நாடி வருகின்றனர்.

ஆனிப் பௌர்ணமியை தீர்த்த நாளாகக் கொண்டு ஆண்டுதோறும் வெகு சிறப்பாக நடைபெறுகின்ற மஹோற்சவங்களில் சிறப்பு உற்சவமாக இடம்பெறுகின்ற இலட்சோப இலட்சம் மக்களை இணைத்து நடைபெறுகின்ற தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது.

சுயம்புருவாக ஐந்து தலைநாகத்தின் மத்தியிலே எழுந்தருளி அருள்பாலிக்கின்ற தாய் தன் மக்களின் துயர் தீர்த்து அருள் சொரிய தேரேறி வருகிறாள். அற்புதமாகவும், பக்திபூர்வமாகவும் நடைபெறுகின்ற தீவகத்தின் இந்திரவிழாவைக் - காண்பதற்காக உலகெங்கும் வாழுகின்ற இந்துக்கள் இன்று நயினையெம்பதியில் சங்கமிக்கின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்துக்கள் மட்டுமல்ல, பௌத்தர்களும், முஸ்லிம் மதத்தைச் சார்ந்தவர்களும் எவ்வித வேறுபாடுகளுமின்றி அன்னையை வழிபடுவதற்காக நயினாதீவிற்கு வருவர். அகிலாண்டகோடியெல்லாம் ஈன்ற அன்னையாய் மீண்டும் கன்னியென மறைகள் பேசும் ஆதிபராசக்தியை, அன்னை நயினை நாகேஸ்வரியை இந்த நாட்களிற் தொழுதால், சகல செல்வங்களும் கிடைக்கும். நினைப்பதைத் தருபவள் நாகபூஷணி. நேர்த்திகள் வைத்து நிறைவேற்றுவோருக்கு நினைத்ததையெல்லாம் வழங்குகின்ற நாகம்மாளும் அவளே. வாருங்கள் வடம்பிடிப்போம். அவளை வழிபட்டு வாழ்விலே இடம்பிடிப்போம்.

*- மதுரகவி. காரை. எம்.பி.அருளானந்தன்* B.A.(Hons)

மக்கள் வங்கி
PEOPLE'S BANK • மக்கள்
இன்று தனது 43வது ஆண்டு
நிறைவைக் கொண்டாடுகிறது
(சி/2711)

தேரேறும் பெருமாட்டி எல்லா நலன்களையும் மக்களுக்கு அருள பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

அன்னை நாகா புட் சிட்டி




மலிகைப் பொருட்கள், மருந்து வகைகள், அழகுசாதனப் பொருட்கள், பால்மா வகைகள்,
பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், பழவகைகள், சிறுவர் சிறுமிகளுக்கான விளையாட்டுப் பொருட்கள்,
மின்சார மின்னியல் பொருட்கள், ரெடிமெற் ஆடைகள் மற்றும் நில்கமல் வீட்டுத் தளபாடங்கள்,
நவீன நாகரிக நங்கையருக்கான தங்க ஆபரணங்களை
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள...

முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்டு, குளிரூட்டப்பட்டது.

175, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 2225515
021 2225223

(சி/2694)

# தேரேறி திருவீதி உலாவரும் தேவி பதம் பணிவோம் வாரீர்

இன்று நயினாதீவு நாகபூஷணி அம்மனின் தேர்உற்சவ தினமாகும். அலை கடலருகே வீற்றிருந்து அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் அன்னை - அழகிய தேரிலே வீதியுலா வருகின்ற காட்சியைக்காண அடியவர்கள் நயினைப் பதியிலே ஒன்று கூடுகின்றார்கள்.

நாலு பக்கமும் நீரால் சூழப்பட்ட தீவான நயினாதீவில், அன்னையின் அருளாட்சி நடைபெறுகின்றது. இந்தத் தீவில் வசிப்பவர்களோடு கலந்து கொண்டு அன்னையின் அருளைப் பெறுவதற்கு அடியவர்கள் கடல்மேற் பயணங் கொண்டுள்ளனர்.

அலைகடல் அமைதியாய் இருப்பது போல அன்னை அடியவர்கள் குறைகளைந்து அருள் வழங்கப் பொறுமையோடு காத்திருக்கின்றாள்.

ஆழக்கடலில் நிறைந்த பொக்கிஷங்கள் காணப்படுவது போல அன்னை அடியவர்களுக்கு அருள் வழங்கும் நிறைந்த மனமுடையவளாய் இருக்கின்றாள்.

அலை கடலின் கரையிலே இரைச்சல் ஓசையோடு அடியவர்களின் அரோகரா ஒலியும் சேர்ந்து ஒலிக்கின்றது.

அடியவர்களின் கண்களிலேயே அன்னையின் ஆலயம் புலப்பட்டதும், அலைகடலின் கரையிலே கேட்கும் கடலலையின் ஓசை, படகுகளில் இருந்து இறங்குகின்ற அடியவர்களின் அரோகரா ஒலியோடு கலக்கின்றது.

அடியவர்களின் ஓசையும் கடலலையின் ஓசையும் ஒன்று கலந்து, அன்னையின் காதினிலே விழுகின்ற போது அடியவர்கள் மனதிலே ஏக்கங்களும் தோன்றுகின்றன.

அன்னையின் காதிலே எம்குறைகள் விழுந்து விடாமல் அலை கடலின் ஓசை தடுத்துவிடப்போகின்றதே என்பதே, அடியவர்களின் ஏக்கமாக அமைந்துள்ளது.

அடியவர்கள் இந்த ஏக்கம் காரணமாக கடல் அலையைவிட பன்மடங்கு கூவி, மேலும் மேலும் அன்னையின் அருட்கடாட்சத்தைப் பெறுவதற்கு விழைகின்றனர்.

தூய தமிழ்ச் சொல் மந்திரங்களையும் அன்னையைப் புகழ்ந்து ஒலிக்கின்ற பாடல்களையும் அன்னையின் அருள் பெற முனையும் அடியார்கள் ஒலிக்கின்றனர்.

இந்த உலகியலின் கரையைத் தாண்டி ஆன்ம ஈடேற்றம் கண்டுவிடத் துடிக்கும் அவசரம் அடியார் மனங்களிலே காணப்படுகின்றது.

பிறவியாகிய கடலைத் தாண்டி பிறவாத வரமொன்றைப் பெற்றுவிட அடியவர்கள் அன்னையிடம் முறையிடுகின்றார்கள்.

படகுகளைத் துணைகொண்டு அன்னையின் அருளைப் பெறுவதற்கு கடலைத் தாண்டி அடியவர்கள் செல்கின்றார்கள்.

நாகம் பூஷிக்கப்பட்டமையால் நாகபூஷணி என்ற பெயரைப் பெறுகின்ற நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு ஆலயமாகும்.

நாகத்துக்கு அருள் பாலித்த அன்னை அடியவர்களுக்கும் அருள் பாலிப்பாள் என்ற நம்பிக்கை அடியவர்களின் உள்ளங்களிலே தெரிகின்றது.

தேர்த்திருவிழாவான இன்று அன்னை அடியவர்களின் மனங்களில் காணப்படும் ஆணவ இருளை அகற்றி, ஆன்ம ஒளியை அருள் ஒளியை ஏற்றத் தயாராக உள்ளாள்.

ஆன்மாக்களின் ஆணவ மலத்தினை அழிப்பதாகிய தேர்த்திருவிழாவின் உட்பொருள் இன்று நிறைவேறப் போகின்றது.

இவ்வாறான அங்கலாய்ப்போடு அடியவர்கள் விரைந்து சென்று கொண்டிருக்கின்றனர்.

அன்னை தேரிலே உலாவரும் அழகிய திருக்கோலத்தைக் காண்பதற்கு அடியவர்கள் ஏற்கனவே பல இடங்களில் இருந்தும், நயினைப் பதி நாடிச் சென்று விட்டார்கள் - சென்று கொண்டு இருக்கிறார்கள்.

அன்னையின் தேர் வடத்தைப் பிடிப்பதற்கு நான் முந்தி, நீ முந்தி என்ற போட்டிகள் அடியவர்களிடையே காணப்படுகின்றது.

ஒன்றாக இணைந்து பிடித்திழுப்போம் தேர் வடத்தை என்ற நோக்கில் அடியவர்களிடையே ஒருமித்த உணர்வையும் காணக் கூடியதாக உள்ளது.

ஊர்கூடி ஒன்றாக வடம்பிடிக்கப் போகின்றது. ஆன்ம ஈடேற்றம் அடைந்துவிடப்போகின்றது. தேர் அசைந்து வீதிவழி வந்துவிடப்போகின்றது. அன்னையின் கண்களிலே அருளாட்சி விளங்குகின்றது.

அன்னை எம்மையும் பார்த்துவிடமாட்டாளா என்ற ஏக்கங்கள் அடியவர் ஒவ்வொருவர் மனங்களிலேயும் தோன்றுகின்றது.

அன்னை வீதிவலம் புறப்படத் தயாராகி விட்டாள். நாமும் தேர்ப்பவனி காணத் தயாராகுவோம்.

## பனிமலை விலகிட தேரோடும்

பூஷணி ரதம் வருகிறது
புன்னகை விரதம் அருள்கின்றது
பாமணி ஒலியில் நனைகின்றது
பாடும் விழியில் நுழைகின்றது.

தீபங்களில் பூமி மகிழ்கின்றது
தேரோட அமைதி நீள்கின்றது
தேவர்களின் வருகை தெரிகின்றது
தேடல்களில் தாய்மை அழுகின்றது.

இனியவை மலர்வது தெரிகின்றது
இனியவை புலர்வது புரிகின்றது
பனியலை விலகிட தேரோடும்
பகைமலை தொலைந்திட தேரோடும்.

இருபாலை புலேந்திரராஜா முதலியார்

## நயினைத்தாயே! கலகங்கள் தீர்வதற்காய்

நயினையில் தீர்த்தமாடுகின்ற
நாகபூஷணித் தாயே!
ஆயிரமாயிரமாய் பக்தர்கள்
கடல் மீதில் பயணித்து
கலக்கங்கள் தீர்ப்பாயென்று
தீர்த்தோற்சவ காட்சிதனில்
தோய்ந்து நிற்கின்றோம்
தீவினைகள் போக்கிடம்மா
தேசம் தனை சிறக்க வைத்திடம்மா
தீர்த்தமாடும் பாடி
பரவி நிற்கின்றோம்.
தாயே! காத்திட வேண்டும்.

- மீசாலையூர் கமலா

## நாடிவரும் அடியவரின் நலிவகற்ற தேரேறி வரும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

நாடிவரும் அடியவர்க்கு நலிவகற்றும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் நாகம் அணியும் பரமர்பாகம் உறுவதினால் நாகபூஷணி என்னும் நாமம் பூண்டு, நயினா தீவிலே கோயில் கொண்டு தன்னை நாடிவரும் அடியவர்க்கு நலிவகற்றி அவர் தம் வாடிய உள்ளம் குளிர வரமருள்கின்றாள்.

ஆடிவரும் ஓடமெல்லாம் அரோகரா ஒலிக்க கடலா இல்லை. கடலையா என எண்ணுமளவிற்கு மக்கள் சமுத்திரத்தின் மத்தியில் அம்பிகையின் வருடாந்த தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது.

அந்த மாதர் குலத்தில் தோன்றிய அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியினுடைய பேரழகைக் கண்டு தொழுவதற்கே நாலாயிரம் கண்படைத்திலனே அந்த நான்முகனே என எண்ணுமளவிற்கு எம்பெருமாட்டியினுடைய பேரழகு. மனிதரும், தேவரும், மாய முனிவரும் வந்து அந்த அம்பிகையை சரண் புகுந்து அதிகவரம் பெறுகின்றனர். அன்னையை சரண்புகுந்தால் அவள் துணையாய் தொழும் தெய்வமாய் பெற்ற தாயாய் எம்மைக் காத்தருளுகின்றாள்.

அன்னையின் துணையைப் பற்றிய ஆனந்தத்தில் நரயேனையும் இங்கு ஒரு பொருளாக நயந்து வந்து நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் நின்னையுள்ள வண்ணம் பேயேன் அறியும் அறிவுதந்தாய் என்ன பேறு பெற்றேன் தாயே யான் முன் செய்த புண்ணியம் ஏது என் அம்மையே என அம்மையின் பேறுபெற்ற பேரானந்தத்தில் துள்ளிக் குதிக்கின்றார்கள்.

நன்றே வருகினும், தீதே விளையினும் நான் அறிவது ஒன்றேயும் இல்லை. உனக்கே பாரம் எனக்குள்ளதெல்லாம் என்று அன்னையிடம் பூரண சரணாகதி அடைவோம் அவள் எம்மைக் காத்தருள்வாய்.

- நயினை கி.கிருபானந்தா.

## தேர்த்திருவிழா

தேரேறி வருவாய் அம்மா
துயர் எல்லாம் தீரும் அம்மா
அயல் எல்லாம் காரும் அம்மா
அனுதினமும் காரும் அம்மா
கவிகளால் பாடவேண்டும் அம்மா
தலை தாழ்த்தி வணங்கினோம் அம்மா
தயை கூர்ந்து காரும் அம்மா

நயினையின் நாயகியே
நாகபூசணி தேவியானவளே
பார் போற்றும் பைந்தொடியே
சீரோடு தமிழன் சிறப்பாய் வாழ
வரங்களை அள்ளி
வாரி இறையும் அம்மா!

தொகுப்பு:
கரவை எஸ்.பாலா.

## மணிபல்லவத்தில் தேரேறும் நயினை நாகம்மாள்

அலைகடல் மத்தியிலே அழகிய இச் சிறுதீவில் சுயம்பு மூர்த்தியாகவும், குண்டலினி சக்தியாகவும் விளங்கி காலத்தைக் கடந்து நின்று ஞாலத்தைக் காத்துக் கொண்டிருப்பவள் அன்னை ஸ்ரீ நாகபூஷணி. இம் மகாசக்தியின் அருளாட்சியையும், அற்புதங்களையும், மகத்துவங்களையும் வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது.

மணிபல்லவம் என அழைக்கப்படும் நயினாதீவின் கருவறையிலே அம்மன் உருவம் போல் இருப்பது பழைய நாகப்பிரதிஷ்டையே, இது மிகவும் தேய்ந்து அம்மன் உருவம் போலத் தெரிகிறது. இதற்குப் பின்னர் ஐந்து தலை நாகப் பிரதிஷ்டை ஒன்று உண்டு. இந்தியாவிலும் நாகவழிபாட்டிற்கு பிரத்தியேகமாகவுள்ள இவ்வளவு புராதன கோயில்கள் காணப்படுகிறது. தாய்பற்ற தூய்மையான நாக வழிபாட்டுப் பண்பினை நயினாதீவில் காணலாம்.

இந்த நாகச்சிலை பதினான்காயிரம் வருடம் பழமையுடையது. இந்தியா, இலங்கை போன்ற இடங்களில் வேறு எங்கும் பார்க்கமுடியாத பிரத்தியட்ச உருவமாக கர்ப்ப வழிபாட்டின் தொன்மைக் கருவூலமாக இது இருக்கிறது.

நாக வழிபாட்டிலே தொடங்கி காலப்போக்கில் நாகபூஷணி வழிபாடாக வளர்ந்து, அவ்வழிபாட்டின் ஆரம்பத்தொடர்ச்சியின் மகோன்னத நினைவுச் சின்னமாக நயினை நாகபூஷணி அம்மன் விளங்குகிறது. நயினாதீவிற்கு உட்பட்ட பழைய பெயர் நாகதீவு அல்லது நாகத்தீவு என்று கொள்ளலே பொருத்தமாகத் தெரிகிறது. பிறிதொரு காலத்தில் வட இலங்கை முழுவதுமே நாகதீவு என்றழைக்கப்படலாயிற்று. இப் பெயரே பின்னர் இலங்கை முழுவதற்கும் இடப்பட்டு விட்டது எனலாம்.

இம்மணித்தீவு நாகத்துவீபம் என வழங்குவதாலும் நாகம், நாகர் தொடர்புகளின் தொன்மை புலப்படுவதாலும் இலங்கை எங்கணுமுள்ள ஆலயங்கள் யாவிலும் மிகவும் பழமை வாய்ந்தது நயினை நாகபூஷணி அம்மன் ஆலயமே என்பதும் ஐயமின்றிப் பெறப்படுகின்றது.

அன்னை நாகபூஷணியின் அற்புதங்கள் ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல? நாக தோஷத்தை நிவர்த்தி செய்து பிள்ளைப் பேறடைந்தோர், நோய்கள் பிணிகளைத் தமது நேர்த்திக் கடன்கள் மூலம் போக்கினோர் பலவித இடர்களை துன்ப துயரங்களெல்லாம் அவளின் அருளாலே சூரியன் முன் பனி போல விலகி விடுவதைக் காணலாம்.

இத்தகு வரலாற்றுப் பெருமைகளோடு நயினை நாகபூஷணி இன்று தேரேறி வருகின்றாள். பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் சகிதம் மணிபல்லவத்தில் தாயின் தேர்திருவிழா மங்களம் பொங்க நடக்கிறது.

- அருள் அனுசூயா

## தேவியருட் தேரேறி எம்மினத்தைக் காப்பாய்!

வெம்பிணிகள் வேரறுக்க வல்லவளும் நீயே
வேப்பமர சோலையிலே வீற்றிருக்கும் தாயே
நம்பிவரும் அடியாரைக் காத்தருளும் மானே
நாகபர மேஸ்வரியே நயினையுறை மாதே
தும்பிமுகன் முருகனுடன் தொடர்ந்து வலம் வருவாய்
தோத்தரித்தோம் ஆர்த்தெழுந்தோம் துணையாக வருவாய்
செம்பவளத் திருமேனி கண்டுதொழ வந்தோம்
தேவியருட் தேரேறி எம்மினத்தை காப்பாய்!

கவிஞர்- நயினை இராகுலன்

## சாந்தியும் சமாதானமும் மலர நயினை நாகபூஷணியைப் பிரார்த்திக்கிறேன்



நயினாதீவு நாகபூஷணி அம்மன் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா உற்சவத்திற்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நான் புனரமைப்பு மீள்குடியமர்த்துகை அகதிகள் விவகார அமைச்சராக இருந்து கடந்த இரண்டு வருட காலங்களாக வடக்கு அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லப் பெரும் முயற்சி எடுத்தேன். வடக்கு அகதிகளை மீளக்குடியமர்த்தி அவர்களின் உடனடித் தேவைகள் நிறைவேற பல நடவடிக்கைகளை எடுத்தேன். நிலக் கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு பல்வேறு புதிய திட்டங்களை அமுல்படுத்தினேன். ஆனால், இரண்டு வருடம் எனும் குறுகிய கால இடைவெளிக்குள் அனைத்து வேலைத்திட்டங்களையும் முழுமையாக செயற்படுத்தமுடியாமல் போனதையிட்டு வருத்தமடைகின்றேன்.

இன்றைய அரசு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாரின் கீழ் செயற்படுகின்றது. ஆனால், இன்று வடக்கிற்குப் பொறுப்பான அமைச்சர் ஒருவர் இல்லை. வடக்கு அகதிகளின் நிவாரணப் பொருட்கள் முறையாக வழங்கப்படவில்லை. சமாதான நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

நான் எதிர்க்கட்சியில் இருந்தாலும் என்னால் முயன்ற அனைத்து உதவிகளையும் வடக்கு மக்களுக்கு செய்ய கடமைப்பட்டுள்ளேன். நான் என்றும் தமிழ் மக்களை நேசிப்பவன். எதிர்காலங்களில் வடக்கு மக்களுக்காக பல்வேறு உதவிகளை செய்யக்கூடிய சக்தியை நயினாதீவு நாகபூஷணி அம்மன் நல்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

அத்தோடு, வடக்கு மக்களுக்கு அனைத்து கஷ்டங்களும் நீங்கி, சமாதானமும், சௌபாக்கியமும் நிறைந்த எதிர்காலம் மலரவேண்டும் எனவும் நயினாதீவு நாகபூஷணி அம்மனை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.

சிறப்பிதழ் அனுசரணை - பேராசிரியர் ஜலயத் ஜயவர்த்தன.
முன்னாள் புனரமைப்பு, மீள்குடியமர்த்துகை, அகதிகள் விவகார அமைச்சர்.

யாழ்ப்பாணம

கற்றவர்க் கினியாய் நயினையம் பதிவாழ் கண்மணி நாகபூஷணியின் அருள்வேண்டி நிற்கிறோம்

மானவர்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2699)

---

நம்பினோர்க் இன்பம் தரும் மனோண்மணியின் அருள் வேண்டி நிற்கின்றோம்.

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்

**WESTERN UNION** பணப் பரிமாற்றம்

*விரைவானது *பாதுகாப்பானது *நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

# THIRUMURUGAN COM NET

(சி/2700)

T.P: 021-222 7310
021-222 7555
021-222 7560
Fax: 021-222 7310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

---

சேர்ந்தருள் அன்னே தீவினை கழியச் ஜெனனமு மரணமு மொழியக் காத்தருள் எம்மை

யாழ் நகரில்
பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்ற

**SILVER SHIELD SOCKS** மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

# ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்

303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (சி/2701) T.P: 2225392

---

கற்றவர்க் கினியாய் நயினையம் பதிவாழ் கண்மணி நாகபூஷணியின் அருள் வேண்டி நிற்கிறோம்

யாழ் நகரில் சிறந்த சைவ உணவுகளை நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# ஸ்ரீ தாமோதர விலாஸ்

401, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2697) T.P: 222 6867

---

சித்தெல்லாம் வல்லாய் சேயெமைக் காத்தருள்
நயினைநாகபூஷணியே.

# எரிக்கணேஷ்

- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து நவீனரக கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப்பற்களைக் கட்டிக்கொள்ளவும்.
- உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும்.
- வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோ கிறேலென்ஸ் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும்.

**நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.**

(கட்டுப் பற்களை சுத்தம் செய்யவும் மாத்திரை விற்பனைக்குண்டு)

எரிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடியகமும், பல்கட்டும் இடமும்
566,564, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:222-2486

கிளை-இல. 91, K.K.S. Road, Kokuvil.

கிளை-இல. 80, K.K.S. Road, Chunnakam.

(சி/2698)

---



# சிறி சிவாஞ்சனா நகையகம்

Sri Sivanchchuna Nakaiakam

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

இல.149A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021-2225481

(சி-2696)

உரிமையாளர்: சி.சிவமூர்த்தி

---

நம்பும் அடியவர்களுக்கு அருளும் நயினைவாழ் நாகபரமேஸ்வரியின் அருள்வேண்டி



# இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்

இல.50, 52, 54, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.



தொ.பேசி: 2988 (சி/2720) தொ.நகல்: 2368

---



# பிள்ளையார் விடுதி / உணவுப்பூங்கா

உங்கள் திருமண வைபவங்கள், திருமணப்பதிவு, மகாநாடு, கருத்தரங்குகள், தொழில்வைபவங்கள், விருந்து உபசாரங்கள், பிறந்தநாள் வைபவங்கள், பூப்புனித நீராட்டு வைபவங்கள் போன்ற வைபவங்களுக்குச் சுவையான உணவு வகைகள் தயாரித்து வழங்கப்படும்.

குளிரூட்டப்பட்ட அறைகள் இணைந்த குளியலறைகள், குளிரூட்டப்பட்ட மண்டபங்கள், 150 - 300 பேர் வரை அமரக்கூடிய இருக்கை வசதிகள் உண்டு.

விலாசமான வாகனத்தரிப்பிடம், விமானப்பதிவுகள், ExpoGas விற்பனைக்கு உண்டு.

**இத்தனைக்கும் நாடவேண்டிய இடம்.**

(சி-2763)

பிள்ளையார் ஸ்ரோர்ஸ் (INN)
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

Tel 021 - 222 - 5595
021 - 222 - 2829
Fax - 021 - 222 - 5595
E.mail: Piyarinn@sltnet.lk
Website: www.pillaiyar Inn.com
Grams: Pillaiyar Tourist Inn

---

# அமுதசுரபி அன்னதான சபை

**2004 ஆரம்பம் - 1960 (வரைவுள்ளது) 2004**

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை "அமுதசுரபி" என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான அடியாகர்களுக்கு சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்துவருகின்றது. இவ்வாண்டுடன் 45 ஆவது ஆண்டில் பிரவேசிக்கின்றோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தருமசலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழில்லாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள், அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம் பொருள் உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர். அம்பாளின் திருவருளால் பணிக்கப் பெற்ற இச்சேவையைச் சிறந்தமுறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணிசெய்யும் அடியார்களுக்கும் தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதானத் தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம் பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தரும சீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிராத்தித்துச் சபையின் மனமுவந்து பணிவார்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாண்டு ஆனி மாதம் 4 ஆம் நாள் (18.06.2004) வெள்ளிக்கிழமை அம்பாளின் மகோற்சவம் (திருவிழா) ஆரம்பமாகி ஆனி மாதம் 17 ஆம் நாள் (01.07.2004) வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் ஆனி மாதம் 18 ஆம் நாள் (02.07.2004) வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு சிறந்த முறையில் 16 நாடகளும் அன்னதானம் வழங்க சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தருமசீலர்களாகிய உங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பெற்ற உத்தமத் தொண்டர்கள் வருவார்கள் அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுத்து சபையின் பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். அடியார்களின் அல்லல் தீர்க்கத் தேரூர்ந்து வரும் அன்னை நாகபூஷணி நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டுச் சகல மக்களும் சாந்தியும் சுபீட்சமான வாழ்வும் பெறத் தனது இன்னருளைக் கொடுத்து இரட்சிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/2712)

**நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினர்.**


செலான் வங்கியின் உதவியால் மகனுக்கு குதூகலம்!
எங்கள் செல்லமகனுடைய பிறந்ததின பரிசாக சைக்கிள் வாங்கிக் கொடுக்க உரிய நேரத்தில் பணம் கிடைத்ததற்கு செலான் வங்கிக்குத்தான் நன்றிகூற வேண்டும். சுவிஸ்ஸிலுள்ள வெஸ்டன் யூனியன்மூலம் செலான் வங்கிக்கு பணத்தை அனுப்புமாறு மகனுக்கு போன் பண்ணினேன். மறுநாளே பணம் வந்ததும் செலானில் எனது கணக்குக்கு மாற்றிவிட்டு எடுத்து வந்தோம். ஒரு சோலியும் இல்லை. வங்கியில் பணத்தை பெறும்போது கட்டணம் எதுவும் அறவிடாமல் ஒரேதடவையில் முழுத்தொகையையும் தந்துவிடுகிறார்கள். வங்கியில் மாத்திரமே பாதுகாப்பாகவும் துரிதமாகவும் நம்பகமாகவும் இச்சேவையை பெறமுடியும்.
ஹொட்லைன்: 2452666
• நம்பகமானது • பாதுகாப்பானது • அதி வேகமானது
WESTERN UNION பணப் பரிமாற்றல்
உலகளாவிய ரீதியில் பணம் அனுப்பவும் பெறவும் அதிதுரித வழி
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி